**<u>ம.அ4.வ.து.ந.க.எண்.ஆர்1/791/2008</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 21.10.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :621/2008 பொருள் எண்.21

**<u>வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, வருவாய்த்துறையில் பணியாற்றிய திரு.கே.தங்கபழம், உதவி வருவாய் அலுவலர், வயது முதிர்வு காரணமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 30.09.2008 அன்று ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இவர் 02.09.1972ல் கிளினராக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தார். இவர் 05.02.1973ல் உதவியாளராக பணியில் சேர்ந்தார். இவருக்கு இப்பதவியில் 05.02.1975 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. 16.05.1984 முதல் உரிமம் ஆய்வாளராக பணியில் சேர்ந்தார். இவருக்கு இப்பதவியில் 06.05.1987 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. 21.07.1993ல் வரி மதிப்பீட்டாளராக பணியில் சேர்ந்தார். இப்பதவியில் 21.07.1993 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. பின்னர் இவர் 05.09.2005 முதல் உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்று அப்பதவியில் 05.09.2005 முதல் அரசின் உறுதியாக்கம் பெற்று பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் பணிபுரிந்த மண்டலங்களிலிருந்து தனியர் மீது தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லையென சான்று பெறப்பட்டுள்ளது. தனியர் மீது விசாரணையும் நிலுவையில் இல்லையென விழிப்பு அலுவலர் அவர்களின் அறிக்கை பெறப்பட்டது. மேலும் துறை பூர்வமான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இவருக்கு சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பு ஏதும் ஒதுக்கப்படவில்லை. சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திற்கு இவர் செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை எனவும் சான்று பெறப்பட்டுள்ளது. இருப்பினும் தணிக்கைத் தடைகள் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகளால் நிதி இழப்பு மற்றும் நீண்ட கால முன்பணம் சரி செய்யப்படாமல் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அதனை ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்படுத்தியும் தனியர் வகுப்பு–2ஐ சார்ந்த அலுவலர் என்பதால் காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி 30.09.2008 பிற்பகல் முதல் ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

எனவே, திரு.கே.தங்கபழம், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–4, அவர்கள் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 30.09.2008 அன்று பிற்பகல் ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.4.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ6.வ.து.ந.க.எண்.ஆர்1/2307/2008**
**ஆணையாளர் அவர்களின் 22.10.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :622/2008 பொருள் எண்.22

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு.ஆர்.விமலன், உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, மண்டலம்–6, அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.09.2008 முதல் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். இவர் சென்னை மாநகராட்சியில் 19.08.1974ல் வாடகை வசூலிப்பவராக பணியில் சேர்ந்தார். பின்பு வரி வசூலராகவும், உரிமம் ஆய்வாளராகவும், வரி மதிப்பீட்டளராகவும் பதவி உயர்வு பெற்று 20.06.2006 முதல் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்தார். அன்னார் மீது அனைத்து மண்டலங்களிலிருந்தும் தணிக்கைத் தடை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று பெறப்பட்டுள்ளது. துறை பூர்வமான விசாரணை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இல்லை. விழிப்பு அலுவலரின் குறிப்பில் இவர் மீது விசாரணை நிலுவையில் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியரைப் பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை ஏதேனும் நிலுவை இருப்பது பின்னர் தெரியவரின் அதனை இவரது பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

தனியர் வகுப்பு–2ஐ சார்ந்த அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெற்றப்பட்ட பின்னரே இவரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க இயலும். காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு இவர் 26.09.2008 தேதியிட்ட இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி 30.09.2008 முதல் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணை வழங்கப்பட்டது.

எனவே, தணிக்கைத்தடை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் மற்றும் தனிப்பட்ட / அலுவலக முன்பண நிலுவை காரணமாக ஏற்படும் நிதி இழப்பு இவரது பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி திரு.ஆர்.விமலன், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–6, அவர்களை 30.09.2008 பிற்பகல் முதல் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணை வழங்கியதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி10/28247/2008**

**ஆணையாளர் அவர்களின் 15.10.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :623/2008 பொருள் எண்.23

**ஓய்வூதியம்**

திரு.அ. அப்துல் காதர், அரங்க அலுவலர், பூங்கா மற்றும் விளையாட்டு திடல் துறை, அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக பணியிலிருந்து 30.06.2003 முதல் ஓய்வு பெற்றார். தனியர் 37 வருடங்கள் 01 மாதம் 12 நாட்கள் தகுதிப்பணி புரிந்தமையால், சென்னை மாநகராட்சி, ஆணையரது செயல்முறை ஆணைகள் பொ.து.ந.க.எண்.பி10/52355/03, நாள்.05.02.2004 மற்றும் பொ.து.ந.க.எண்.பி10/3377/05, நாள்.02.03.2005ன்படி ஓய்வூதியமாக மாதம் ரூ.6,162/– மற்றும் பணிக்கொடைத் தொகை ரூ.3,08,550/– மற்றும் தொகுப்புத் தொகை ரூ.2,57,819/– வழங்கப்பட்டுள்ளது. துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.1967/எ4/2008, நாள்.22.07.2008 சான்றின்படி தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் விவரம் பின்வருமாறு:–

| | ஓய்வூதிய பயன் |
|---|---|
| ஓய்வூதியம் 01.07.2003 முதல் மாதம் | ரூ.6275/– |
| பணிக்கொடை | மாற்றம் இல்லை |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2091/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.4184/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,62,463/– |
| குடும்ப ஓய்வூதியம் | ரூ.6275/– ( 14.06.2010 முடிய)<br>ரூ.3765/– (15.06.2010 முதல்) |

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.அ. அப்துல் காதர், 30.06.2003 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற அரங்க அலுவலர், பூங்கா மற்றும் விளையாட்டு திடல் துறை அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி ஓய்வூதிய பயன்களாக ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியமான ரூ.6162/–லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் ரூ.6275/–ஆக வழங்கவும் மற்றும் அனுமதிக்கப்படும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2091/ஐ தொகுத்துப்பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,62,463/– (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து நானூற்று அறுபத்தி மூன்று மட்டும்) ஏற்கனவே வழங்கப்பட்ட தொகுப்புத் தொகை ரூ.2,57,819/– சரிசெய்து மீதத்தொகை ரூ.4,644/– (ரூபாய் நான்காயிரத்து ஆறுநூற்று நாற்பத்தி நான்கு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.6275/–லிருந்து ரூ.4184/–ஆக குறைத்து வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/35961/08**
**ஆணையாளர் அவர்களின் 07.11.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :624/2008 பொருள் எண்.24

**ஓய்வூதியம்**

திரு.டாக்டர் எம். கிருஷ்ணமூர்த்தி, மருத்துவ அலுவலர், மண்டலம்–3, அவர்கள் கடந்த 28.02.2005 பி.ப. முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே தற்காலிக ஓய்வூதியம் மட்டும் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.3134/எ4/2008, நாள்.10.10.2008 தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதியம் பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.6350/– 01.03.2005 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தற்காலிக ஓய்வூதியம் தொகை ரூ.4650/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.3,34,356/– தணிக்கைத் தடைக்காரணமாக 25% பிடித்தம் ரூ.83,589/– போக மீதம் ரூ.2,50,767/– வழங்கவும், அன்னாரின் ஓய்வூதியத்தில் ரூ.2116/– தொகுப்பு செய்வதால் தொகுப்புத் தொகை ரூ.2,65,601/–ஐ வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.கே.மகாலட்சுமி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.6350/– 24.02.2012 முடியவும் ரூ.3810/– 25.02.2012 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

10.10.2008 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 28.02.2005 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற டாக்டர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மருத்துவ அலுவலர், அவர்கட்கு மேற்கண்டவாறு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/35801/08**
**ஆணையாளர் அவர்களின் 03.11.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :625/2008 பொருள் எண்.25

**ஓய்வூதியம்**

திரு.ஆர்.கணேசன், துணைதகவல் தொடர்பு அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்கள் கடந்த 31.05.1998 பி.ப. முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதரப்பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.3043/எ4/2008, நாள்.25.09.2008ல் தனியருக்கு சான்றளிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதியம் பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.5100/– 01.06.1998 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.4825/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.1,83,396/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1,73,507/–ஐ நேர்செய்து மீதம் தொகை ரூ.9889/– வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.2,56,061/ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,42,254/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.13,807/– வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.கே.ராஜாத்தி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.3060/– வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

30 வருடங்கள் 11 மாதங்கள் 05 நாட்கள் தகுதிப் பணிக்காலம் புரிந்த அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 25.09.2008 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி திரு.ஆர்.கணேசன், துணைதகவல், தொடர்பு அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்கட்கு மேற்கண்டவாறு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி2/7569/2008

ஆணையாளர் அவர்களின் 10.11.2008 நாளிட்ட குறிப்பு

30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :626/2008 பொருள் எண்.26

ஓய்வூதியம்

திரு.டி.சுதர்சனம், உதவி செயற்பொறியாளர் பணித்துறை, அவர்கள் பணியிலிருந்து 31.01.2008ல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 34 வருடங்கள் 09 மாதங்கள் 18 நாட்கள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.248/எ4/2008, நாள்.04.03.2008 சான்றின்படி 01.02.2008 முதல் வயது முதிர்வு ஓய்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.8082/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வுதியத்திலிருந்து ரூ.2,694/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,38,151/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.ஏ.கே.செல்வி, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.8082/– ஓய்வூதியருக்கு 65 வயது வரை அல்லது இறப்பிற்குபின் ஏழு ஆண்டுகள் இதில் எது முன்னரோ அதுவரை, அதன் பின்னர் குறைக்கப்பட்ட ஓய்வூதியம் ரூ.4849/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், திரு.டி.சுதர்சனம், உதவி செயற்பொறியாளர், பணித்துறை, அவர்களுக்கு 01.02.2008 முதல் ஓய்வூதியமாக ரூ.8082/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகள் நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2694/– (ரூபாய் இரண்டாயிரத்து ஆறுநூற்று தொன்னூற்று நான்கு மட்டும்) தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,38,151/– (ரூபாய் மூன்று லட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து நூற்று ஐம்பத்தி ஒன்று மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.8082/–லிருந்து ரூ.5388/– ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.ஏ.கே.செல்வி, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.8082/– ஓய்வூதியருக்கு 65 வயது பூர்த்தியாகும் வரை அல்லது ஏழு ஆண்டுகள் இதில் எது முன்னரோ அதுவரை, அதன் பின்னர் குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் ரூ.4849/– வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி13/35964/2008

<u>ஆணையாளர் அவர்களின் 05.11.2008 நாளிட்ட குறிப்பு</u>

## 30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :627/2008 பொருள் எண்.27

### ஓய்வூதியம்

டாக்டர் எஸ்.கிருஷ்ணகுமாரி, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–8, அவர்கள் பணியிலிருந்து 30.06.2008 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 29 வருடங்கள் 22 நாட்கள் (அ) 58 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, நி.மு.எண்.3133/எ4/2008 நாள் 15.10.2008 சான்றின்படி 01.07.2008 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.10,259/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,419/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,29,153/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு.ஆர்.ரவிக்குமார், அவர்கள் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,259/– 19.06.2015 வரையிலும், குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 20.06.2015 முதல் ரூ.6368/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

தனியருக்கு 01.07.2008 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.10,259/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,419/– (ரூபாய் மூவாயிரத்து நானூற்று பத்தொன்பது மட்டும்) தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,29,153/– (ரூபாய் நான்கு லட்சத்து இருபத்தி ஒன்பதாயிரத்து நூற்று ஐம்பத்தி மூன்று மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.10,259/–லிருந்து ரூ.6,840/– ஆக குறைத்து வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.குந(ம)ம.கு.ந.எண்.எப்4/3354/2008
ஆணையாளர் அவர்களின் 17.10.2008 நாளிட்ட குறிப்பு

30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :628/2008 பொருள் எண்.28

கடவுச்சீட்டு பெற தடையின்மை சான்று

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை, வேளச்சேரி மண்டலத்தில் மருத்துவ அலுவலராக பணியாற்றும் டாக்டர். திருமதி.வி.சம்யுக்தா அவர்கள் வருகின்ற பிப்ரவரி 2009ல் ஆஸ்திரேலியா நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதால், வெளிநாடு பயணம் செல்வதற்கு உதவும் கடவுசீட்டினை பெறுவதற்கு தடையின்மை சான்றிதழ் வழங்குமாறு கடிதம் மூலம் விண்ணப்பித்துள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் 09.11.1989ல் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டார்கள். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 09.11.1989 முதல் பணிவரன் முறைப்படுத்தி 09.11.1991ல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் மீது இத்துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி விழிப்புத் துறையிலிருந்தும் காவல்துறை கண்காணிப்பாளர், பாதுகாப்பு பிரிவு குற்றப்புலனாய்வு துறையிலிருந்தும் மற்றும் இயக்குநர் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககம் சென்னை–28லிருந்து தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் அவர்கள் பதவி வகுப்பு–2ன் கீழ்வருவதால் அயல்நாடு பயணத்திற்கு பயன்படுத்த உதவும் கடவுசீட்டினை பெறுவதற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். இதன் பொருட்டு தெரிவிப்பது யாதெனில் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் வெளிநாடு செல்வதற்கு அரசாணை எண்.259, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்ததுறை நாள். 17.12.2007ல் குறிப்பிட்டுள்ள கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு கடவுசீட்டு பெறுவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

நிபந்தனைகள் பின்வருமாறு:–

01. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் பெறப்படும் புதிய கடவுச்சீட்டை பயன்படுத்தி ஆணையர் அவர்களின் முன்னனுமதியின்றி பயணம் மேற்கொள்ளகூடாது.

02. வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும்போது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்து கொள்ளக்கூடாது.

03. வெளிநாடு செல்லும் பயணச் செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.

04. அவர் வெளிநாட்டில் இருக்கும்போது சென்னை மாநகராட்சி பணியைத் துறக்க விண்ணப்பிக்க கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்படமாட்டாது.

05. வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இது போன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.

மேற்கண்டுள்ள நிபந்தனைகளுடன் இவ்வலுவலருக்கு வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் புதிய கடவுச்சீட்டினை பெறுவதற்கு மட்டுமே செல்லும் என தெரிவித்து, டாக்டர் திருமதி.வி.சம்யுக்தா மருத்துவ அலுவலர் அவர்கள் வெளிநாட்டிற்கு பயணம் செல்வதற்கு உதவும் கடவுசீட்டினை பெறுவதற்காக தடையின்மை சான்றிதழ் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.குந(ம)ம.கு.ந.எண்.எப்4/3258/2008
ஆணையாளர் அவர்களின் 10.11.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :629/2008 பொருள் எண்.29

**வெளிநாடு செல்ல தடையின்மை சான்று பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை, பெருமாள்பேட்டை, மண்டலத்தில் மருத்துவ அலுவலராக பணி செய்து வரும் டாக்டர். திருமதி.கே.புனிதவள்ளி, அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் வசிக்கும் தன்னுடைய மகளின் பிரசவத்திற்கு செல்ல வேண்டியுள்ளதால் 18.11.2008 முதல் 16.01.2009 வரை 60 நாட்கள் ஈட்டிய விடுப்பில் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்குமாறு 20.08.2008 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டு விண்ணப்பித்துள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் 19.01.1994ல் மருத்துவ அலுவலராக தொகுப்பூதிய முறையில் பணியமர்த்தப்பட்டு பணி செய்து வந்தார்கள். பின்பு 29.01.1996 முதல் காலமுறை ஊதிய விகிதத்தில் மருத்துவ அலுவலராக நிரந்தரம் முறையில் தற்போது பணி செய்து வருகிறார். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தி, தகுதிகாண் பருவம் செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் மீது இத்துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி விழிப்புத் துறையிலிருந்தும் காவல்துறை கண்காணிப்பாளர், பாதுகாப்பு பிரிவு குற்றப்புலனாய்வு அலுவலகத்திலிருந்தும் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் தனது கடிதத்தில் தனது பயணச்செலவு முழுவதும் தனது மருமகன் ஏற்பதாக தெரிவித்து அதற்கான ஒப்புதல் கடிதம் பெற்று சமர்ப்பித்துள்ளார்.

தனியர் ஆஸ்திரேலியா நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள 05.09.2003ல் கடவுச்சீட்டு பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மன்ற தீர்மான எண்.465/2003, நாள்.27.08.2003.

இவர் பதவி வகுப்பு–2ன் கீழ்வருவதால் அயல்நாடு பயணத்திற்கு செல்ல மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு தனியர் 13.10.2008 தேதியிட்ட ஆணையின்படி வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டது. இதன் பொருட்டு தெரிவிப்பது யாதெனில் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் வெளிநாடு செல்வதற்கு அரசாணை எண்.259, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்ததுறை நாள். 17.12.2007ல் குறிப்பிட்டுள்ள கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

நிபந்தனைகள் பின்வருமாறு:–

01 வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும்போது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்து கொள்ளக்கூடாது.

02. வெளிநாடு செல்லும் பயணச் செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.

03. அவர் வெளிநாட்டில் இருக்கும்போது சென்னை மாநகராட்சி பணியைத் துறக்க விண்ணப்பிக்க கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்படமாட்டாது.

04. வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இது போன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.

05. தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளிலிருந்து தனியர் அவர்கள் தெரிவித்துள்ள நாட்டிற்கு பயணம் செல்ல 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

06. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் ஆணையர் அவர்களின் முன்னனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் இவ்வலுவலருக்கு வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளிலிருந்து 6 மாதங்களுக்கு அவரால் தெரிவிக்கப்பட்டிருக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு செல்ல மட்டுமே பொருந்தும் என தெரிவித்து, டாக்டர் திருமதி.கே.புனிதவள்ளி, மருத்துவ அலுவலர் அவர்கள் அமெரிக்கா நாட்டிற்கு பயணம் செல்வதற்கு தடையின்மை சான்றிதழ் வழங்கியதற்கும், மற்றும் 18.11.2008 முதல் 16.01.2009 வரை 60 நாட்கள் ஈட்டியவிடுப்பில் செல்ல 13.10.2008 தேதியிட்ட ஆணை வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.குந(ம)ம.கு.ந.எண்.எப்15/3202/2003

ஆணையாளர் அவர்களின் 17.10.2008 நாளிட்ட குறிப்பு

30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :630/2008 பொருள் எண்.30

பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

மாவட்ட குடும்ப நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அயனாவரம் மண்டலத்தில் தொகுப்பாளர் மற்றும் எழுத்தராக பணிபுரியும் திரு.எஸ்.ராஜு அவர்கள் மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிந்த போது 31.03.2003 முதல் முன்னனுமதி இல்லாமல் அடிக்கடி விடுப்பு துய்த்ததற்கு மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்களால் பலமுறை எச்சரிக்கப்பட்டும் திருந்தாமல் 04.11.2003 முதல் தொடர்ந்து முன் அறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை, எனவே, இவர் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி 18.11.2003 அன்று தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டார்.

திரு.எஸ்.ராஜு, தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் அவர்கள் மீது சென்னை மாநகராட்சி மூன்று மற்றும் நான்காம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)—ன் கீழ் கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் கேட்கப்பட்டது.

அன்னார் முன்னனுமதியின்றி கீழ்கண்ட நாட்களுக்கு பணிக்கு வரவில்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31/03/2003 | முதல் | 20/04/2003 | வரை | மருத்துவ விடுப்பு | 21 நாட்கள் |
| 02/05/2003 | " | 27/05/2003 | " | ஈட்டிய விடுப்பு | 25 " |
| 02–06–2003 | " | 11/06/2003 | " | " | 10 " |
| 30/06/2003 | " | 21/07/2003 | " | " | 22 " |
| 29/08/2003 | " | 03/09/2003 | " | மருத்துவ விடுப்பு | 6 " |
| 08/09/2003 | " | 16/09/2003 | " | " | 9 " |
| 29/09/2003 | " | 30/09/2003 | " | சம்பளமில்லா விடுப்பு | 2 " |
| 15/10/2003 | " | 16/10/2003 | " | " | 2 " |
| 22/10/2003 | " | 28/10/2003 | " | " | 7 " |
| | | | | | 104 |

இதன் மூலம் அலுவலக பணிக்கு குந்தகம் விளைவித்தது.

1. மேலும் இவர் 04.11.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.

   இதனால் அலுவலக விதியை மீறியதோடு பணிக்கு குந்தகம் விளைவித்தது.

2. முன்னறிவிப்பின்றி வேலைக்கு வராமல் இருப்பதை வாடிக்கையாக கொண்டிருப்பது

3. இவர் நாகம்மையார் நகர் நலவாழ்வு மையத்தில் பணிபுரிந்த போது அங்கு பணிபுரியும் அலுவலர்களுக்கு ஜனவரி 2003 மாதத்திற்கான ஊதியத்தை பெற்று தராததின் மூலம் பணியில் பொறுப்பற்ற தன்மை மற்றும் நிர்வாக நலனில் அக்கறையின்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணை தனியர் இவ்வலுவலகத்திற்கு தெரிவித்த

வீட்டு முகவரிக்கு அனுப்பப்பட்டு 15 நாட்களுக்குள் விளக்கம் கேட்கப்பட்டது. பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட இக்குற்றச்சாட்டு குறிப்பாணை தனியர் இம்முகவரியில் இல்லை என தெரிவித்து மீண்டும் இத்துறையில் பெறப்பட்டது. பின்னர் தனியர் 12.02.2004 அன்று இவ்வலுவலகத்திற்கு வந்து குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்டார்.

திரு.எஸ்.ராஜு, தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் அவர்கள் தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் ஏதும் அளிக்கவில்லை. இவரை விளக்கம் அளிக்கக் கோரியும், தவறும் பட்சத்தில் இருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டுகளின் மீது இறுதி முடிவு எடுக்கப்படும் என தெரிவித்து மீண்டும் 18.03.2004 அன்று தனியருடைய முகவரிக்கு குறிப்பாணை அனுப்பப்பட்டும் தனியரிடமிருந்து விளக்கம் ஏதும் பெறப்படவில்லை.

<u>மா.குந(ம)ம.கு.ந.எண்.எப்15/3202/2003</u>

ஒழுங்கு நடவடிக்கை நடைமுறையின்படி, இந்நேர்வில் விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டார். இவர் தனியரிடம் 08.06.2004 அன்று நேர்முக விசாரணை நடத்தி தனியர் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் நிருபணமானதாக 28.06.2004 தேதியிட்ட தனது அறிக்கையை அளித்துள்ளார்.

இந்நேர்வின் மீது இறுதி முடிவு எடுக்கும் பொருட்டு விசாரணை அலுவலரின் அறிக்கையின் நகலுடன் 01.07.2004 தேதியிட்ட குறிப்பாணை தனியர் தெரிவித்த முகவரிக்கு அனுப்பப்பட்டு 15 நாட்களுக்குள் கூடுதல் விளக்கம் கேட்கப்பட்டது.

திரு.எஸ்.ராஜு, தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் அவர்கள் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்களுக்கு அனுப்பியுள்ள 24.09.2004 தேதியிட்ட கடிதத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லா காரணத்தால் (பெப்டிக் அல்சர்) தன்னால் பணிக்கு வர இயலவில்லை என்றும், இதன் காரணமாக தான் ஈட்டிய விடுப்பு மற்றும் மருத்துவ சான்றிதழுடன் கூடிய மருத்துவ விடுப்பு எடுத்ததாகவும் இவ்விடுப்புகள் தன்னுடைய பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து தன்னை விடுவித்து தன்னை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ள கோரினார்.

திரு.எஸ்.ராஜு, தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் அவர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மீது இறுதி ஆணையாக தனியரின் ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும் தனியரை மீண்டும் பணியில் சேரவும் 22.03.05 அன்று உத்தரவிடப்பட்டது. இவ்வுத்தரவின்படி தனியர் 04.04.2005 அன்று மீண்டும் பணியில் சேர்ந்துள்ளார்.

இவர் தமக்கு வழங்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்ய கோரி நியமனக்குழுவிற்கு மேல்முறையீடு செய்ததன் பொருட்டு இவரது மேல்முறையீட்டு மனு நியமனக்குழுவால் பரிசீலிக்கப்பட்டு நியமனக்குழு நிர்வாகம் தனியருக்கு வழங்கிய தண்டனையான மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் செய்தததை உறுதி செய்து தீர்மான எண்.144/2006, நாள்.19.05.06–ன் மூலம் தீர்மானித்தது.

இத்தீர்மானத்தின்படி, திரு.எஸ்.ராஜீ, தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் அவர்களுக்கு நிர்வாகம் வழங்கிய மூன்றாண்டுகளுக்கு ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தததை உறுதி செய்து சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு நாள்.12.07.06–ன் படி ஆணையிடப்பட்டு தனியருக்கு இவ்வாணை 26.07.06 அன்று சார்பு செய்யப்பட்டது.

இவர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் 04.11.2003 முதல் 17.11.2003 வரை மற்றும் தனியர் தற்காலிக நீக்கத்தில் இருந்து 18.11.2003 முதல் 03.04.2005 வரையிலான காலம் ஓராண்டிற்கு மிகையாக உள்ளதால் இக்காலத்தினை வரன்முறைப்படுத்த இவர் பொருட்டு அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசாணை பெறவேண்டும்.

எனவே, திரு. எஸ்.ராஜு, தொகுப்பாளர் மற்றும் எழுத்தர், புளியந்தோப்பு மண்டலம் அவர்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் 04.11.2003 முதல் 17.11.2003 வரை மற்றும் தனியர் பணி நீக்கத்தில் வைக்கப்பட்டிருந்த 18.11.2003 முதல் 03.04.2005 வரையிலான காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ6.ந.க.எண்.அ4/5909/2004**
**ஆணையாளர் அவர்களின் 04.09.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :631/2008 பொருள் எண்.31

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.டி.பென்சிலைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–90, பகுதி–17, மண்டலம்–6, என்பவர் 30.06.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக குறிப்பாணை வழங்கப்பட்டது.

தனியர் 30.06.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து சென்னை மாநகராட்சி, பணியாளர்கள் 3 மற்றும் 4ம்நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணைவிதி 9(2)ன்படி கீழ்கண்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டது.

**குற்றச்சாட்டுகள்:–**

1. 30.06.2001 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்று விட்டது.
2. முன்னறிப்பின்றி பணிக்கு வராததால், கோட்டங்களில் உள்ள பணிகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியது.
3. சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் உண்டாக்கியது.

தனியர் குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக்கொண்டு கீழ்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்தார்.

**குற்றச்சாட்டு –1க்கு பணியாளரது விளக்கம்** தனக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததாகவும், அத்துடன் நடந்து வரும் போது தன் மீது மாட்டு வண்டி மோதியதால், வலது காலில் அடிபட்டு சிகிச்சை பெற்று வந்ததாகவும், தன்னால் பணிக்கு வர இயலவில்லை எனவும், மேலும் தான் எழுதப் படிக்கத் தெரியாதவன் என்றும், இதனால் முன்னறிவிப்பு செய்திட தன்னால் இயலவில்லை எனவும், முன் அனுமதி பெறாதது தனது தவறாகும் எனவும், இருப்பினும் இனிவரும் காலங்களில் இது போன்று நடந்து கொள்ளமாட்டேன் என தெரிவித்தார்.

**குற்றச்சாட்டு –2க்கு பணியாளரது விளக்கம்** தான் பணிக்கு வராததால் கோட்டப் பணிகள் பாதிப்புக்குள்ளானதை ஏற்றுக் கொள்வதாகவும், இருப்பினும் தனது பணியில் இது போன்று ஏற்படாதவாறு நடந்து கொள்வேன் என தெரிவித்தார்.

**குற்றச்சாட்டு –3க்கு பணியாளரது விளக்கம்** எழுதப் படிக்கத் தெரியாததுடன், தனக்கு அலுவலக விடுப்பு விதிமுறைகளை அறியாதவன் என்றும், இதனால் பணிக்கு வர இயலாததை முன்னறிவிப்பு செய்திட இயலவில்லை என தெரிவித்தார்.

இதன் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்ட பணியாளரை நேர்முக விசாரணை செய்ய டாக்டர். ஜெகதீசன், உதவி சுகாதார அலுவலர்–6, அவர்கள் விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டார்.

விசாரணை அலுவலரான டாக்டர்.ஜெகதீசன், உதவி சுகாதார அலுவலர்–6, பணிமாற்றத்தில் சென்றதால், அவரிடத்தில் பணியமர்த்தப்பட்ட உதவி சுகாதார அலுவலர், டாக்டர்.ரேவதி ரோஸ்லிண்ட், அவர்கள் குற்றம் சுமத்தப்பட்ட பணியாளரை நேர்முக விசாரணை செய்து கீழ்கண்டவாறு தனது அறிக்கையை அளித்தார்.

**குற்றச்சாட்டு –1க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை** முன்னறிவிப்பு செய்யாமல் பணிக்கு வராதது தவறு என்று குற்றப் பணியாளர் ஒப்புக் கொண்டுள்ளார். எனவே, இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

**குற்றச்சாட்டு –2க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை** தான் பணிக்கு வராததால் கோட்ட பணிகள் பாதிப்புக்குள்ளானதை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் கட்டாயம் பணிகள் பாதிக்கப்பட்டிருக்கும் எனவே, இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

**குற்றச்சாட்டு –3க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை** முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் பணிகள் பாதிக்கப்பட்டு, அதனால் சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட்டிருக்கும் எனவே, இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

மேற்கண்ட பணியாளர், முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்திற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை விசாரணைக்குட்பட்டு 14.08.2002 அன்று பணியில் சேர உத்தரவு வழங்கப்பட்டது. தனியர் 28.12.2002 அன்று பணியில் சேர்ந்தார்.

**ம.அ6.ந.க.எண்.அ4/5909/2004**

உதவி ஆணையாளர் (பொ.நி.ம.ப) அவர்களின் 24.02.2003 தேதியிட்ட உத்தரவின்படி, விசாரணை அலுவலரின் அறிக்கை தனியருக்கு சார்பு செய்யப்பட்டு, மேல்விளக்கம் கோரப்பட்டது.

தனியர் விசாரணை அலுவலர் அறிக்கை 16.03.2003 அன்று பெற்றுக்கொண்டு விளக்கம் அளிக்காமல் விட்டுவிட்டார்.

பல நினைவூட்டு குறிப்பாணைகள் அனுப்பப்பட்டன. உதவி செயற்பொறியாளர், பகுதி–17, அவர்களுக்கும் குறிப்புகள் அனுப்பி தனியரிடமிருந்து விளக்கம் பெற்று அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் விசாரணை அலுவலர் அறிக்கை மீது மேல்விளக்கம் பெறப்படவில்லை.

உதவி செயற்பொறியாளர், பகுதி–17, அவர்களின் 01.12.2004 தேதியிட்ட குறிப்பில் தனியர் மீண்டும் 25.12.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் தன்னிச்சையாக இருந்து விட்டார் எனவும், பல குறிப்பாணைகள் வழங்கப்பட்டன எனவும் தெரிவித்தார்.

தனியர் குறிப்பாணையை பெற்றுக்கொண்டு தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தனது சொந்த ஊருக்கு சென்ற காரணத்தினால் தன்னால் கடந்த 25.12.2003 முதல் பணிக்கு வர இயலவில்லை எனவும், தற்போது தன்னை பணியில் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டியுள்ளார். தனியரின் விளக்கம் ஏற்கும்படியாக இல்லை.

எனவே, தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியாளர்கள் 3 மற்றும் 4ம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதிகள் 9(2)ன் கீழ் பின்வரும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

**குற்றச்சாட்டுகள்:–**

1. 25.12.2003 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் தன்னிச்சையாக நின்று விட்டது.
2. ஏற்கனவே முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்ட நிலையில், மீண்டும் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்று விட்ட செயலானது தனியர் தனது பணியின்பால் அக்கறையின்றியும், பொறுப்பின்றியும், விதிகளை மதியாமல் தன்னிச்சையாக செயல்படுவதை எடுத்துக் காட்டுகிறது.
3. தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்று விட்டதால், கோட்டம்–90ல் துப்புரவு பணிகள் மிகவும் பாதிக்கப்பட காரணமானார்.
4. நடத்தை விதி–20க்கு முற்றிலும் முரண்பாடாக நடந்துக் கொண்டதால், மாநகராட்சியில் பணி வகிக்க தகுதியற்ற நிலையினை அடைந்தது.

தனியர் குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்டு விளக்கம் அளிக்காததால் நினைவூட்டுக்கள் அனுப்பப்பட்டன. பின்னர் காலதாமதமாக தனியர் தனது விளக்கத்தை கீழ்கண்டவாறு அளித்தார்.

**குற்றச்சாட்டு –1க்கு பணியாளரது விளக்கம்** 25.12.2003 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்ததற்கு தனக்கு ஏற்கனவே மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததாகவும், மீண்டும் அதே நோய் வந்துள்ளதால் முன்னறிவிப்பு செய்திட இயலவில்லை. எனவும், முன் அனுமதி பெறாதது தனது தவறுதான் எனவும், இனிவரும் காலங்களில் இது போன்று நடந்து கொள்ளமாட்டேன் என தெரிவித்தார்.

**குற்றச்சாட்டு –2க்கு பணியாளரது விளக்கம்** ஏற்கனவே முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததற்கு மஞ்சள் காமாலை நோயால் அவதிப்பட்டதாகவும், மீண்டும் அதே நோய் வந்துள்ளதால், முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்று விட்டதாகவும், தனது தவறை ஒப்புக் கொள்வதாகவும், இனி தான் பணியில் அக்கறையுடனும், பொறுப்புடனும், விதிகளை மதித்து நடந்து கொள்வதாகவும் தெரிவித்தார்.

**குற்றச்சாட்டு –3க்கு பணியாளரது விளக்கம்** தான் பணிக்கு வராததால் கோட்டப் பணிகள் பாதிப்புக்குள்ளானது ஒப்புக் கொள்வதாகவும், இனி பணியில் இது போன்று தவறு ஏற்படாதவாறு நடந்து கொள்வதாகவும் தெரிவித்தார்.

**குற்றச்சாட்டு –4க்கு பணியாளரது விளக்கம்** தனக்கு எழுத படிக்க தெரியாததால் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்து விட்டதாகவும், இனி விதிகளின்படி நடந்துக் கொண்டு தனது பணியில் அக்கறையுடன் பணி செய்வேன் என தெரிவித்தார்.

தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் நேர்முக விசாரணை மேற்கொள்ள திரு.என்.சஞ்சீவி, ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அலுவலர், அவர்கள் விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டார்.

**ம.அ6.ந.க.எண்.அ4/5909/2004**

விசாரணை அலுவலர் குற்றப் பணியாளரை நேர்முக விசாரணை மேற்கொண்டு தனது விசாரணை அறிக்கையில் குற்றச்சாட்டுக்களுக்கு அளித்துள்ள விளக்க கடிதத்திலும், தனியர் மீது சாட்டப்பட்டுள்ள நான்கு குற்றச்சாட்டுக்களையும் முழுமையாக ஒப்புக் கொண்டு குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்குமாறு வேண்டியுள்ளார் எனவும், திரு.டி.பென்சிலைய்யா, குற்றப் பணியாளர் மீது சாட்டப்பட்டுள்ள நான்கு குற்றச்சாட்டுக்களுமே நிரூபணமாகியுள்ளதாக தெரிவித்தார்.

03.11.2005 நாளிட்ட இவ்வலுவலக குறிப்பாணையில், விசாரணை அலுவலரின் 25.10.2005 தேதியிட்ட விசாரணை அலுவலரின் அறிக்கை தனியருக்கு சார்பு செய்து மேல் விளக்கம் அளிக்க கோரப்பட்டது.

தனியர் விசாரணை அலுவலர் அறிக்கை பெற்றுக் கொண்டு 15.11.2005 நாளிட்ட தனது மேல் விளக்கத்தில் விசாரணை அலுவலர் அறிக்கையினை படித்து அறிந்ததாகவும், அதன் மீது எவ்வித மேல் முறையீடும் செய்ய விரும்பவில்லை எனவும் தன்னை இந்த ஒருமுறை மன்னித்து மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளுமாறும், தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நீக்கிட வேண்டியுள்ளார். இத்தனியர் மீண்டும் 27.02.2006 அன்று மீண்டும் பணியில் சேர்ந்துள்ளார்.

மேலும், 30.06.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததன் மீது விசாரணை நடைபெற்று அதனை அறிந்தேன் எனவும், தனக்கு மீண்டும் உடல்நிலை சரியின்மையால் அவ்விசாரணை அறிக்கையின் மீதும் 16.11.2005 தேதியிட்ட கடிதத்தில் எவ்வித மேல் விளக்கமும் அளிக்க இயலவில்லை என தெரிவித்து அக்குற்றச்சாட்டுக்களிலிருந்தும் தன்னை விடுவிக்கும்மாறும் வேண்டினார்.

தனியர் மீது தொடரப்பட்ட இரு நிகழ்வுகளில் ஒழுங்கு நடவடிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களின் தன்மை, தனியரது விளக்கம் மற்றும் விசாரணை அலுவலரின் அறிக்கை ஆகியன கவனமுடன் நன்கு பரிசீலிக்கப்பட்டதில், தனியர் அளித்த விளக்கம் திருப்தியளிப்பதாகவும், ஏற்புடையதாகவும் இல்லை என்பதால், தனியரது ஊதிய உயர்வை மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், பணிக்கு வராத காலம் 30.06.2001 முதல் 27.12.2002 வரை மற்றும் 25.12.2003 முதல் 26.02.2006 வரை ஓராண்டை கடந்துள்ளபடியால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று வரன்முறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு தளர்வு செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

அரசுக் கடித எண்.5461/மா.ந3/2008-1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.14.03.2008ல் மன்றத் தீர்மானம் பெற்று அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத இரு நிகழ்வுகளான 30.06.2001 முதல் 27.12.2002 வரை மற்றும் 25.12.2003 முதல் 26.02.2006 வரை உள்ள காலம் ஓராண்டை கடந்துள்ளதால், அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**ம.அ3.ந.க.எண்.சி4/59/2007**
**ஆணையாளர் அவர்களின் 23.10.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :632/2008 பொருள் எண்.32

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.இ. கோபால், துப்புரவு பணியாளர், (எஸ்.ஆர்.பி) பகுதி–9, மண்டலம்–3 அவர்கள் கடந்த 17.01.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்தினால் அப்பணியாளருக்கு குறிப்பாணை மற்றும் குற்றச்சாட்டு குறிப்பாணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டது.

01) தாங்கள் 17.01.2001 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வரத் தவறியது.

02) 30.11.2001, 17.05.2002 நாளிட்ட குறிப்பாணை மற்றும் குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு விளக்கம் அளிக்கத் தவறியது.

03) தாங்கள் முன்னறிவிப்பின்றி அடிக்கடி வேலைக்கு வராததால் கண்ணியம் மிக்க கடமையைச் செய்யத் தவறியதுடன் அலுவலக பணிக்கு குந்தகம் விளைவித்தது.

அப்பணியாளர் இக் குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்டு தனது விளக்கத்தினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

01) 17.01.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததற்கு காரணம் தான் பாரிசவாயு நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டு கால் கைகள் செயலிழந்த நிலையில் இருந்ததால் பணிக்கு ஆஜர் ஆக இயலவில்லை என்று கூறியுள்ளார்.

02) 30.11.2001 மற்றும் 17.05.2002 ஆகிய நாளிட்ட குறிப்பாணையில் தனது வீட்டு விலாசத்திற்கு அனுப்பியிருந்தாலும், தானும் தனது குடும்பத்தாரும் அங்கு இல்லாமல் சொந்த ஊரான கிராமத்திற்கு சென்றுவிட்டபடியால் குறிப்பாணைகள் பெற்றிட தவறிவிட்டேன் எனவும், ஆகையால் குறிப்பாணைகளுக்கு விளக்கம் அளிக்க இயலவில்லை என வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் கூறியுள்ளார்.

03) முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் கண்ணியம் மிக்க கடமையைச் செய்யத் தவறியதின் காரணம் நோய் வாய்ப்பட்டு பாதிக்கப்பட்டு, நடக்க முடியாத சூழ்நிலையில் இருந்ததேயாகும் என்று தன் விளக்கத்தினை தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன் என்று கோரியுள்ளார்.

அப்பணியாளரது விளக்கத்தினை ஏற்று துணை ஆணையாளர் (பணிகள்) அவர்களின் 12.12.2004 நாளிட்ட உத்தரவின்படி அப்பணியாளர் மீது உள்ள ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து மீண்டும் பணியில் சேர அனுமதி ஆணை வழங்கப்பட்டது. அவ்வுத்திரவின்படி மண்டல அலுவலர்–3 அவர்களின் செயல்முறை ஆணை 22.12.2004 அன்று வழங்கப்பட்டது. பணியாளர் செயல்முறை ஆணையைப் பெற்றுக் கொண்டு 23.12.2004 அன்று மீண்டும் பணியில் சேர்ந்தார்.

அப்பணியாளர் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு, விசாரணை அலுவலராக திரு.என். சஞ்சீவி, தொழிலாளர் துணை ஆணையாளர் (ஓய்வு) அவர்களை நியமனம் செய்து குறிப்பாணை வழங்கப்பட்டது. விசாரணை அலுவலர் தனது விசாரணையை 08.02.2005 அன்று நடத்தி தனது விசாரணை அறிக்கையை கீழ்கண்டவாறு 16.03.2005 அன்று சமர்ப்பித்துள்ளார்.

17.01.2001 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்துள்ளதற்கு 30.11.2001 மற்றும் 17.05.2002 அன்றும் இரண்டு குறிப்பாணைகள் அனுப்பப்பட்டும் அவற்றிற்கு எந்த விளக்கமும் அளிக்காமலும் பணிக்கும் திரும்பாமலும் இருந்துள்ளதால் 19.10.2004 தேதியிட்ட அக்குற்றச்சாட்டு குறிப்பாணை அனுப்பப்பட்டுள்ளன என கூறப்பட்டு அதன் அடிப்படையில் அவர் மீது 3 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அக்குற்றச்சாட்டுகளை படித்து விளக்கி அக்குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொள்கிறாரா அல்லது மறுக்கிறாரா என்று கேட்டதற்கு அவர் தான் குற்றச்சாட்டுகளை மறுக்கவில்லை என்றும் தனக்கு அக்காலகட்டத்தில் கை, கால் எல்லாம் வீங்கி அதற்கு தான் சிகிச்சை பெறுவதற்காக தன் சொந்த கிராமத்திற்கு சென்று ஒரு நாட்டு மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும் அந்த கிராமம் திண்டுக்கல் நகரிலிருந்து 96 கி.மீ தொலைவில் கேரள மாநிலத்திற்கு அருகில் உள்ளதாகவும் அதனால் அங்கிருந்து தன் அலுவலகத்திற்கு முன்னறிவிப்பும் கொடுக்க முடியாமல் போய்விட்டதாகவும் பிறகு தன் உடல்நிலை தேறிய உடன் தன் கிராமத்திலிருந்து சென்னைக்கு திரும்பி 23.12.2004 அன்று பணியில் சேர்ந்து பணி செய்து வருவதாகவும் எனவே தன்னை இம்முறை மன்னித்துவிடுமாறு கேட்டுக் கொள்வதாகவும் பதிலளித்தார். ஆக அவர் அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்தே அவர் 17.01.2001 முதல் 22.12.2004 வரை எவ்வித முன் அறிவிப்புமின்றி பணிக்கு வராமல் இருந்துள்ளதாக நன்கு புலனாகிறது.

எனவே அதன் அடிப்படையில் அவர் மீது சாட்டப்பட்டுள்ள 3 குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகியுள்ளதாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என்று கூறியுள்ளார். இவ் விசாரணை அறிக்கை ஒன்று பணியாளருக்கு சார்பு செய்து கூடுதல் விளக்கம் கீழ் கண்டவாறு பெறப்பட்டது.

**<u>ம.அ3.ந.க.எண்.சி4/59/2007</u>**

திரு. இ. கோபால், துப்புரவு பணியாளர், (எஸ்.ஆர்.பி) பகுதி–9, மண்டலம்–3, 17.01.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் ம.அ.3.ந.க.எண்.சி4/59/04 நாள் 17.05.2002ன்படி வழங்கிய குறிப்பாணை காலதாமதாகவும் (சென்னையில் இல்லாததால்) பெற்றேன் என்றும் இதற்கு பதிலை 27.10.2004 அன்று விளக்கமாக வழங்கினேன் என்றும், தனது கை, கால்கள் செயலிழந்து சிகிச்சைக்காக திண்டுக்கல்லுக்கு அப்பாற் 96 கி.மீ தொலைவில் கேரள மாநிலத்திற்கு அருகில் உள்ள கிராமத்திற்கு சென்று அங்கேயே தங்கிவிட்டபடியால் அலுவலகத்திற்கு தகவல் எதுவும் வழங்க இயலாமல் போனது எனவும் தெளிவாக கூறியுள்ளேன் என்றும் 27.10.2004 அன்று என் நிலைமையை விளக்கமாக கடிதத்தின் மூலம் புலப்படுத்திய பின்பு 22.12.2004 அன்று கையொப்பமான மண்டல அலுவலர்–3 அவர்களின் செயல்முறை ஆணைப்படி மீண்டும் பணியில் 23.12.2004 அன்று சேர்ந்தேன் எனவும் விசாரணை அலுவலர் அவர்களின் விசாரணையின் போது தெரியப்படுத்தினேன் என்றும், ஆனால் விசாரணை அலுவலர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அறிக்கையில் எனது மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணம் ஆவதாக கூறியுள்ளார் என்றும் கடந்த 17.01.2001 முதல் பணியில் சேரும் நாளுக்கு முந்தைய நாள் 22.12.2004 வரையிலான மூன்று ஆண்டுகள் 11 மாதம் 5 நாட்களுக்கு எனக்கு சம்பளம் இல்லாத விடுப்பாக்கப்பட்டதால் இக்கால கட்டங்களில் குடும்பம் மிக்க வறுமை நிலையில் வாடியதோடு கடன்பட்டு அக்காலங்களை தள்ளினேன் என்பதை தங்களுக்கு குறிப்பிட விரும்புகிறேன் என்று கூறியுள்ளார்.

ஆகவே ஏறக்குறைய சுமார் 4 வருடங்களுக்கு எனது உடல்நிலை பாதிப்பால் சம்பளம் இல்லா இழப்பும் கடன் வாங்கி குடும்பத்தை நடத்திட்டதும் எனக்கு வழங்கிட்ட பெரும் தண்டனையாக தான் கருதுகிறேன். எனவே இனிவரும் நாட்களில் எவ்வித பிழையுமின்றி எனது பணியை மிக நல்ல முறையில் செய்திடுவேன் என்றும் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் ஒழுங்காக பணியை மேற்கொள்வேன் என்கிற உத்திராவாதத்தாலும் தனக்கு எவ்வித தண்டனையும் வழங்காது தன் மீது நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வந்திட ஆவன நடவடிக்கை புரிந்து உதவிடுமாறு இவ்விளக்க கடிதத்தின் மூலம் தங்களை பணிவன்புடனும், தாழ்மையுடனும் கேட்டுக் கொள்கிறேன் என்று கோரியுள்ளார்.

எனவே திரு.இ.கோபால், நிரந்தர துப்புரவு பணியாளர், எஸ்.ஆர்.பி, பகுதி–9, மண்டலம்–3 அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அதற்கு பணியாளரின் விளக்கம் விசாரணை அலுவலரின் அறிக்கை அதற்கு தனியரின் கூடுதல் விளக்கம் ஆகிய தொடர்புடைய ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. விசாரணை அறிக்கை முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. குற்றச்சாட்டுகள் நிரூபணமான நிலையில் அன்னாருக்கு மூன்று ஆண்டு காலத்திற்கு ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும் இறுதி ஆணை வழங்கப்பட்டது. மேலும் தனியர் பணிக்கு வராத காலமான 17.01.2001 முதல் 22.12.2004 வரை உள்ள காலம் ஓராண்டுக்கு மேல் உள்ளதால் அடிப்படை விதி 18(1)ஐ தளர்வு செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பி வரன்முறைப்படுத்தப்படும் என செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

திரு.இ.கோபால், நிரந்தர துப்புரவு பணியாளர், எஸ்.ஆர்.பி, பகுதி–9, மண்டலம்–3 அவர்கள் 17.01.2001 முதல் 22.12.2004 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த இத்தனியர் பணியில் சேர்ந்த நாள் 18.01.1998 ஆகும். 5 ஆண்டுகள் பணி பூர்த்தியடையாத நிலையில் 6 மாதங்களுக்கு மேல் பணிக்கு வராமல் உள்ள பணியாளர்களுக்கு அடிப்படை விதி 18(1)ஐ தளர்வு செய்யப்பட வேண்டும் என்பதால், அடிப்படை விதி 18(1)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ3.ந.க.எண்.சி3/818/02

ஆணையாளர் அவர்களின் 23.10.2008 நாளிட்ட குறிப்பு

## 30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :633/2008 பொருள் எண்.33

### பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

திரு.எம். மதிவாணன், துப்புரவு பணியாளர், எஸ்.ஆர்.பி. பகுதி–9, மண்டலம்–3 அவர்கள் கடந்த 27.09.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்தினால் அப்பணியாளருக்கு குறிப்பாணை மற்றும் குற்றச்சாட்டு குறிப்பாணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டது.

1) தாங்கள் 27.09.2001 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வரத்தவறியது.

2) 29.11.2001 மற்றும் 08.05.2002 நாளிட்ட குறிப்பாணைக்கு விளக்கம் அளிக்கத் தவறியது.

3) தாங்கள் முன்னறிவிப்பின்றி அடிக்கடி வேலைக்கு வராததால் கண்ணியம் மிக்க கடமையைச் செய்யத் தவறியதுடன் அலுவலக பணிக்கு குந்தகம் விளைவித்தது.

தனியர் இக்குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்டு தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

தான் கடந்த 27.09.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து தன் உடல்நலம் சரியில்லாமல் வேலைக்கு வர இயலவில்லை எனவும் தான் தனது சொந்த ஊருக்கு சென்று வைத்தியம் பார்த்துக் கொண்டேன் எனவும் ஆகையால் தான் அலுவலகத்துக்கு வந்து விடுமுறை சொல்ல இயலவில்லை எனவும் அப்பொழுது தனது தம்பி திடீரென்று சில ஊர் பிரச்சினையில் சிக்கி தகராறில் இறந்து விட்டார் எனவும், அதனால் தனது மனநிலை சரியில்லாமல் போய்விட்டது எனவும், அந்த நேரத்தில் அம்மாவும், அப்பாவும் இறந்து விட்ட காரணத்தினால் வீட்டிற்கு பெரிய மகன் தான் என்பதால் எல்லா பிரச்சனைகளும் தன்மேல் விழுந்துவிட்டது எனவும் ஆகையால் இந்த சூழ்நிலையில் வேலைக்கு வராமல் போய்விட்டது எனவும், எனது குடும்ப சூழ்நிலையை கருதி தன் மேல் கருணை வைத்து இந்த ஒருமுறை மன்னித்து வேலைக்கு சேர்த்துக் கொள்ளுமாறு மிக பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்றும், இனிமேல் இந்த மாதிரி தவறு வராமல் பார்த்துக் கொள்கிறேன் என்றும் கோரியுள்ளார்.

அப்பணியாளரது விளக்கத்தினை ஏற்று மண்டல அலுவலர்–3 அவர்களின் 29.07.2003 நாளிட்ட உத்தரவின்படி அப்பணியாளர் மீது உள்ள ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து மீண்டும் பணியில் சேர அனுமதி வழங்கப்பட்டது. தனியர் இச்செயல்முறை ஆணையை பெற்றுக் கொண்டு 08.08.2003 அன்று மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டு பணியில் சேர்ந்தார்.

அப்பணியாளரை விசாரணை செய்ய விசாரணை அலுவலர் திரு. சபாநாதன், உதவி செயற் பொறியாளர், பகுதி–8 அவர்களை நியமனம் செய்து செயல் முறை ஆணை 04.09.2003 அன்று வழங்கப்பட்டது. விசாரணை அலுவலர் தனது விசாரணையை 19.07.2004 அன்று நடத்தி விசாரணை அறிக்கையை 30.11.2004 அன்று கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1) பணியாளர் அளித்திட்ட விளக்கம் ஏற்புடையதல்ல. பணியாளர் தன்னிச்சையாக பணிக்கு வராமலிருந்தது அவரது பணியில் கடமை தவறுதலையும் அக்கறையின்மையினையும் எடுத்துக் காட்டுவதல்லாமல் பணியாளரது பொறுப்பற்ற தன்மையினையும் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. ஆதலால், இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

2) பணியாளர் பணிக்கு எவ்வித முன்னறிவிப்பின்றி வராதது குறித்து குறிப்பாணை அஞ்சல் வாயிலாக அனுப்பப்பட்டும் குறிப்பாணை பெற்றிடாமல் தன் விளக்கம் அளித்திட இயலாதது குறித்து தற்போது விளக்கம் அளித்திட்டது ஏற்புடையதல்ல மேலும் பணியாளர் தனது பணியினை செவ்வனே செய்திடாமல் முன்னறிவிப்பின்றி அவ்வப்போது பணியாளர் பணிக்கு வராமல் உள்ளது. கண்ணியம் மிக்க கடமையினை செய்யத் தவறியதுடன் பொறுப்பற்றதன்மையினையும் எடுத்துக் காட்டுகிறது. ஆதலால் இக்குற்றச்சாட்டு நிரூபணம் ஆகிறது.

3) பணியாளரது தன்விளக்கம் ஏற்புடையதாக இல்லை. எனவே இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது என்று தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

நான் கடந்த 27.09.2001 முதல் பணிக்கு வராததன் காரணத்தை விளக்கம் அளித்து அதன் பின்பு விசாரணை அலுவலரின் விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டு தனது தெளிவான விளக்கங்களை அச்சமயம் எடுத்துரைத்து உள்ளேன் எனவும் அந்த விசாரணை அறிக்கையை பெற்றுக் கொண்ட பின்பு மேலும் தனி விளக்கத்தை வழங்கிட தனக்கு அறிவுறுத்தப்பட்டது. இதன்படி தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு போதிய கல்வி அறிவு இல்லாததாலும் குறிப்பாணை வழங்கிட்ட சமயத்தில் ஊரில் தான் இல்லாததாலும் காலந்தாழ்ந்தது என தெளிவு படுத்தியுள்ளேன் எனவும் விளக்கம் அளித்துள்ளார்.

**ம.அ3.ந.க.எண்.சி3/818/02**

மேலும் 27.09.2001 முதல் மீண்டும் பணியில் சேர்ந்த 08.08.2003 வரையிலான காலம் சுமார் 1 வருடம் 10 மாதங்கள் 20 நாட்களுக்கு தனக்கு சம்பளம் இல்லாத இழப்பாக்கி தனது குடும்ப உறுப்பினர்கள் திடீரென காலமான நிலையில் தெளிவற்ற மன சூழ்நிலையில் மன உளைச்சலும் வாழ்வை வெறுத்து மரணத்தை நாடும் துர்பாக்கியமான ஒரு அவல சூழ்நிலைக்கும் ஆளாக்கப்பட்டேன் எனவும், இதனால் தனது குடும்பம் மிக்க வறுமையான சூழ்நிலையில் உள்ளது எனவும் இக்காலக்கட்டங்களில் தான் பெற்ற வேதனையும் மனத்துயரமும் சொல்லில் அடங்காது எனவும் தன்னால் பணியை செய்திட முடியாத நிலையிலும் பணிக்கு ஆஜர் ஆக முடியாத நிலைக்கும் தள்ளப்பட்டேன் எனவும் இவ்விளக்கத்தின் மூலம் தெளிவுப்படுத்துவதாகவும், ஏறக்குறைய சுமார் 2 வருடங்கள் சம்பளம் இல்லாமல் அவதியுற்றதே தனக்கு பெரிய இழப்பும் தண்டனையும் ஆகும் எனவும், தனக்கு எவ்வித தண்டனையும் வழங்காது பணியை தொடர்ந்து புரிந்திட ஆவன நடவடிக்கையில் உதவிடும்படி இவ்விளக்கத்தின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் இனி தன் பணியை மிக நல்ல முறையில் திருப்திகரமாக செய்திடுவேன் என்றும் உறுதி அளிப்பதுடன் இனி ஏதும் தப்புகளோ (அல்லது) இதுபோல விளைவு நிகழ்ந்தாலோ தன் மீது தக்க நடவடிக்கையை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்து இவ்விளக்கம் அளித்துள்ளார்.

எனவே தனியர் மீதுள்ள ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாக பணியாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அதற்கு பணியாளரின் விளக்கம் விசாரணை அலுவலரின் அறிக்கை மற்றும் தனியரின் கூடுதல் விளக்கம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களும் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. விசாரணை அலுவலரது அறிக்கை முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நிருபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் கடுமையானவை, அவை கடுமையான தண்டனைக்கு உரியவை எனினும் கருணையுடன் அணுகப்பட்டதில் திரு.மதிவாணன், துப்புரவு பணியாளர், கோட்டம்–எஸ்.ஆர்.பி, பகுதி–9, மண்டலம்–3 அவர்களுக்கு மூன்று ஆண்டு காலத்திற்கு ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து இறுதி ஆணை வழங்கப்பட்டது. மேலும் தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 27.09.2001 முதல் 07.08.2003 வரையிலான காலம் ஓராண்டை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பி அரசின் தளர்வாணை பெற்று வரன்முறைப்படுத்தப்படும் என செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

எனவே திரு.எம். மதிவாணன், துப்புரவு பணியாளர், சார்ஜென்ட் அலுவலகம், ரிப்பன் மாளிகை, மண்டலம்–3 அவர்கள் கடந்த 27.09.2001 முதல் 07.08.2003 வரை எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## ம.அ3.ந.க.எண்.சி1/2081/2002
## ஆணையாளர் அவர்களின் 23.10.2008 நாளிட்ட குறிப்பு

## 30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :634/2008 பொருள் எண்.34

### பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

திரு.பி.அந்தோணி, நிரந்தர துப்புரவு பணியாளர், எஸ்.ஆர்.பி. பகுதி–9, மண்டலம்–3 அவர்கள் கடந்த 07.06.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்தினால் குறிப்பாணை மற்றும் குற்றச்சாட்டு குறிப்பாணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டது.

2) தாங்கள் 07.06.2002 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வரத்தவறியது.

3) 8.07.2002 நாளிட்ட குறிப்பாணைக்கு விளக்கம் அளிக்க தவறியது.

4) தாங்கள் முன்னறிவிப்பின்றி அடிக்கடி வேலைக்கு வராததால் கண்ணியம் மிக்க கடமையைச் செய்யத் தவறியதுடன் அலுவலக பணிக்கு குந்தகம் விளைவித்தது.

பணியாளர் இக்குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்டு தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1) திடீரென ஊருக்கு சென்ற இடத்தில் உடல் நலம் பாதிக்கப்பட்டதால் கடந்த 07.06.2002 முதல் பணிக்கு வராமல் போக நேர்ந்தது என்று கூறியுள்ளார்.

2) 07.06.2002 நாளிட்ட குறிப்பாணையை தான் பெறாததாலும் ஊரில் இல்லாததாலும் சென்ற இடத்தில் நோய்வாய்ப்பட்டு அவதியுற்றதாலும் இக்குறிப்பாணைக்கு பதில் கொடுக்க தவறிட நேர்ந்தது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

3) ஊருக்கு சென்ற இடத்தில் திடீரென நோய்வாய்ப்பட்டதாலும் இது குறித்து அலுவலகத்திற்கு தெரிவிக்க எவரும் இல்லை எனவும் போதிய அறிவு (கல்வி) இல்லாமையால் தவறு நேர்ந்தது எனவும் தெரிவிக்கிறேன் என்றும் மேலும் இது போல் இனி நடக்காமல் தான் நடந்து கொள்கிறேன் எனவும் இதன் மூலம் உறுதி அளிக்கிறேன் எனவும் கருணைக் கூர்ந்து மீண்டும் தன்னை பணிக்கு எடுத்துக் கொண்டு மிகவும் வறுமைக்கோட்டின் கீழே தற்போது உழலும் தனது குடும்பத்தைத் காத்திடும்படியும் மிக்க பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்றும் கோரியுள்ளார். அப்பணியாளரது விளக்கத்தினை ஏற்று மண்டல அலுவலர்–3(பொ) அவர்களின் 19.09.2003 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி அப்பணியாளர் மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டார். தனியர் 24.09.2003 அன்று பணியில் சேர்ந்துள்ளார்.

விசாரணை அலுவலராக திரு.சூரிய நாராயணன், வழக்குரைஞர் அவர்கள் நியமிக்கப்பட்டார். விசாரணை அலுவலர் தனது விசாரணையை 27.05.2004 அன்று நடத்தி தனது விசாரணை அறிக்கையை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1) தனியர் தனது விளக்கத்தில் தான் 07.06.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது உண்மைதான் என்று தெரிவித்துள்ளார் மற்றும் தனக்கு போதிய கல்வி அறிவு இல்லாததால் தான் உடல்நிலை சரியில்லாமல் பணிக்கு வராத காலத்தில் மருத்துவ சான்றிதழ் பெற்று தரவில்லை என்று தெரிவித்துள்ளார். இது தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரதவறியதற்கு தகுந்த காரணமாக ஏற்றுக் கொள்ளும் வகையில் இல்லை. இவர் சமர்ப்பித்துள்ள 03.05.2003 தேதியிட்ட கடிதத்திலும் தகுந்த காரணங்கள் எதையும் தெரிவிக்கப்படவில்லை நோய்வாய்பட்டு அதனால் பணிக்கு வராமல் இருந்ததால் அதற்கு ஆதாரமான எந்த ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் நிர்வாக தரப்பில் இவர் அடிக்கடி முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருப்பது வழக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டது. 18.07.2002 அன்று எஸ்.ஆர்.பி உதவி செயற்பொறியாளர், பகுதி–9 அவர்களின் குறிப்பாணைக்கு எந்தவித பதிலும் தனியர் அளிக்கவில்லையென தெரிகிறது. எனவே தனியர் தன் தவற்றை மன்னித்து குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டாலும் அவர் மீதான குற்றத்தை விடுவிக்க அலுவலக காரணமில்லாததால் இவர் மீதான குற்றச்சாட்டை உறுதி செய்யலாம் என கருதுகிறேன் என தெரிவித்துள்ளார்.

2) உதவி செயற் பொறியாளர், பகுதி–9 அவர்களின் குறிப்பாணை தனியர் பெற்றுக் கொள்ளாமல் வெளியூரில் இருந்திருக்கிறார் என்றும் அப்போது உடல் நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தாலும் குற்றச்சாட்டு குறித்து தனக்கு தெரிந்திருந்தால் குறிப்பாணைக்கு உரிய விளக்கம் அளித்திருப்பேன் என்று கூறினாலும் இதை ஏற்க முடியாததாகவே உள்ளது. எனவே தனியர் 18.07.2002 நாளிட்ட குறிப்பாணைக்கு விளக்கம் அளிக்க தவறியதாக ஒப்புக் கொள்வதால் இந்த குற்றச்சாட்டை உறுதி செய்யலாம் என கருதுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

**ம.அ3.ந.க.எண்.சி1/2081/2002**

3) தனியர் தமக்கு மஞ்சள்காமாலை நோய் இருந்ததால் உடல் பாதிக்கப்பட்டு இருந்தது என்பதை உரிய சான்றுகள் மூலம் நிரூபிக்கவில்லை ஆதலால் இவர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததற்கு இதை தகுந்த காரணமாக கொள்ளலாகாது என்று கூறி இவர் மீதான குற்றச்சாட்டு நிரூபணம் ஆவதாக கருதலாம் என்று கூறி தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

இவ்விசாரணை அறிக்கை நகல் ஒன்று பணியாளருக்கு சார்பு செய்து அதன் மீது கூடுதல் விளக்கம் கீழ்கண்டவாறு பெறப்பட்டது.

எஸ்.ஆர்.பி. பகுதி–9, மண்டலம்–3 துப்புரவு பணியாளராக பணிபுரியும் தான் தங்களுக்கு எழுதிக்கொள்வது யாதெனில் கடந்த 07.06.2002 முதல் தான் பணிக்கு வரவில்லை என்றும் இதற்கு உ.செ.பொ.பகுதி–9, அவர்களின் குறிப்பாணையும் மண்டல அலுவலர்–3(பொ) அவர்களின் குறிப்பாணையும் வழங்கப்பட்டது. இக்குறிப்பாணைகளை உரிய நேரத்தில் தன்னால் பெற இயலவில்லை காரணம் அச்சமயம் தனது நோய்க்காக ஊரில் சிகிச்சையை மேற்கொண்டிருந்தேன் என்றும் கல்வியறிவு இல்லாததால் இது குறித்து அலுவலகத்திற்கு உரிய நேரத்தில் தெரிவிக்க தவறிவிட்டேன் என விசாரணையின் போது கூறியுள்ளேன் எனவும் கூறியுள்ளார்.

மேலும் பணியின் மீது பொறுப்பு இல்லை எனக் கூறியதில் தனக்கு உடன்பாடு ஏதும் இல்லை எனவும், உண்மையில் பணிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடக்கவில்லை எனவும் மீண்டும் தெளிவுபடுத்துகிறேன் என்றும் இக்குற்றச்சாட்டுகளிலிருந்து தன்னை விடுவிக்க கோருகிறேன் என்றும் 07.06.2002 முதல் 23.09.2003 வரையிலான நாட்களுக்கு சம்பளம் பெறாமல் மிக்க வறுமையான சூழ்நிலையில் குடும்பத்தைக் காத்திட முடியாமல் மிகவும் மன உளைச்சலால் உந்தப்பட்டுள்ளேன் எனவும் இதுவே தனக்கு மிகப்பெரிய தண்டனையாக உள்ளது எனவும், இதனால் பின்னாளில் தான் ஓய்வு பெற்றாலும் ஓய்வூதியம், ஓய்வூதிய தொகுப்பு மற்றும் பணிக்கொடை குடும்ப ஓய்வூதியம் ஆகியவைகளும் பெரும் இழப்பை சந்திக்கும் சூழ்நிலை உள்ளது எனவும், ஆகவே ஐயா அவர்கள் கருணை கூர்ந்து தனது இவ்விளக்கத்தை ஏற்று மேலும் எவ்வித தண்டனையும் வழங்காது தன்னை மன்னித்து பணியை தொடர்ந்து புரிந்திட உதவிடும்படி கேட்டுக் கொள்கிறேன் எனவும் மேலும் இனிவரும் நாட்களில் பணிக்கு எவ்வித குந்தகமுமின்றி நல்ல முறையில் திருப்திகரமாக பணியினை செய்வேன் என்றும் உறுதி அளிக்கிறேன் என்றும் அவ்வாறு இல்லாமல் தவறின் தன் மீது தக்க தண்டனையை மேற்கொள்ளளலாம் எனவும் கூடுதல் விளக்கத்தில் தெரிவித்துள்ளார்.

திரு.பி.அந்தோணி, நிரந்தர துப்புரவு பணியாளர், எஸ்.ஆர்.பி. பகுதி–9, மண்டலம்–3 அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அதற்கு பணியாளரின் விளக்கம் விசாரணை அலுவலர் அறிக்கை, விசாரணை அறிக்கையின் மீது பணியாளரின் கூடுதல் விளக்கம் ஆகிய தொடர்புடைய ஆவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் கடுமையானவை. இவை தண்டனைக்குரியவை எனினும் நிகழ்வு கருணையுடன் அணுகியதில் தனியரின் ஊதிய உயர்வினை மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்ய இறுதி ஆணை வழங்கப்பட்டது. மேலும் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 07.06.2002 முதல் 23.09.2003 வரையிலான காலம் ஓராண்டை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

எனவே, திரு.பி.அந்தோணி, நிரந்தர துப்புரவு பணியாளர், எஸ்.ஆர்.பி, பகுதி–9, மண்டலம்–3 என்பவர் 07.06.2002 முதல் 23.09.2003 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக ஊதிய உயர்வினை மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், பணிக்கு வராத காலத்தை அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பி அரசு ஆணை பெற்று வரன்முறைப்படுத்தவும் செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

எனவே, திரு.பி.அந்தோணி, நிரந்தர துப்புரவு பணியாளர், எஸ்.ஆர்.பி, பகுதி–9, மண்டலம்–3 என்பவர் 07.06.2002 முதல் 23.09.2003 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டுக்கு மேல் உள்ள காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :635/2008 பொருள் எண்.35

### பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

சென்னை மாநகராட்சி, பகுதி–21, மண்டலம்–7, கோட்டம்–109ல் நிரந்தர துப்புரவு பணியாளராக பணிபுரியும் திரு.கே.மணி, அவர்கள் 12.04.1996 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் குறிப்பாணை வழங்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டது. விளக்கம் ஏதும் பெறப்படாததால் அன்னார் மீது சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

**குற்றச்சாட்டுகளின் விவரம்;–**

1. தாங்கள் 12.04.1996 முதல் எந்தவித முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.
2. தாங்கள் பணிக்கு வராத காரணத்தினால் மாநகராட்சி பணிகளுக்கு குந்தகம் ஏற்பட்டுள்ளது.
3. தாங்கள் குறிப்பாணையை நேரில் பெற்று இதுநாள் வரை பதில் தராதது மூலம் உயர் அலுவலர்களின் ஆணைகளை உதாசீனப்படுத்தியுள்ளீர்கள்.

தனியருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை பதிவு அஞ்சல் மூலம் அவரால் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்த முகவரிக்கு அனுப்பப்பட்டது. முகவரியில் நபர் இல்லை என அஞ்சல் திரும்பப் பெறப்பட்டது.

அன்னார் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ள செயற்பொறியாளர், மண்டலம்–9, அவர்கள் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டு 05.11.1997 அன்று நடைபெற இருந்த விவரம், அன்னாருக்கு பதிவு தபால் மூலம் 21.10.1997 அன்று தெரிவிக்கப்பட்டது. அன்னார் விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்ததால் விசாரணை அலுவலர் ஒரு தலைப்பட்சமாக முடிவெடுத்து அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாவதாக அறிக்கை அளித்தார்.

தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் 07.09.1998 அன்று தனியரை நிரந்தர பணி நீக்கம் செய்வது என்று தற்காலிக முடிவு எடுக்கப்பட்டது. இத்தற்காலிக முடிவின் பேரில் அவரது விளக்கம் கோரி குறிப்பாணை பதிவு அஞ்சல் தபால் மூலம் அனுப்பப்பட்டது. பதிவு தபால் சார்பு செய்யப்படாமல் ஆள்இல்லை என்று திரும்ப பெறப்பட்டது. எனினும் தனியர் தன்னை மீள பணியில் அனுமதிக்கக்கோரி இவ்வலுவலகத்தை நேரில் அணுகிய போது காரணம் கேட்கும் குறிப்பாணை 08.03.1999 அன்று நேரடியாக சார்பு செய்யப்பட்டது.

தனியர் 11.03.1999 நாளிட்ட கடிதத்தில் தனது உறவினர்கள் முன்விரோத காரணமாக செய்வினை செய்திருக்கிறார்கள் என்றும், ஆகவே, உடல்நிலை பாதிக்கப்பட்டு சித்தபிரமை பிடித்தது போல் ஆகிவிட்டதால் ஆங்கிலம் மருத்துவம் மூலம் சரியாகாமல் இருந்ததால் சொந்த கிராமத்தில் (ஆந்திரா மாநிலம்) தங்கி வைத்தியம் எடுத்துக்கொண்டதாகவும், தற்போது பூரண குணமடைந்து விட்டதாகவும் பணிக்கு முன்னறிவிப்பின்றி வராமல் இருந்தது தவறு என்றும், பணிக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கம் இல்லை என்றும், குடும்ப சூழ்நிலையின் காரணமாக வீட்டை காலிசெய்து சொந்த கிராமத்திற்கு சென்று விட்டதால் கடிதங்கள் பெறப்படவில்லை என்றும் குடும்பத்தை காப்பாற்ற வேண்டிய நிலையில் இனிமேல் முறையாக பணிக்கு வருவேன் என்றும் தன்னை மன்னிக்கும்படியும் விளக்கமளித்தார்.

அன்னாரின் விளக்கம் ஏற்புடையதாக இல்லாததால் மேற்படி அன்றைய தேதியில் செயல்முறையில் இருந்த அடிப்படைவிதி 18(3)ன்படி நடவடிக்கை எடுக்க முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அப்போது அடிப்படைவிதி 18(3) குறித்து தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் நிலுவையில் இருந்த வழக்கு முடிவுக்கு வராமல் இருந்ததால் இறுதி தண்டனை வழங்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. மேலும், மேற்படி ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமின்றி இவரை மீண்டும் பணியில் சேர அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி அன்னார் 16.06.2000 அன்று பணியில் சேர்ந்தார்.

அடிப்படை விதி18(3) குறித்து வழக்கு முடிவு பெற்றதன் தொடர்ச்சியாக இவ்விதி அரசாணை எண்.154ன் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள்.08.08.2000ன்படி திருத்தம் செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக தனியர் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் விசாரணை அலுவலர் அறிக்கை, தண்டனை குறித்த உத்தேச முடிவின் பேரில் இவர் அளித்த விளக்கம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன. தகவல் இன்றி பணிக்கு வராதது நின்றுவிட்டதற்கு தனியர் தெரிவித்துள்ள எந்த காரணமும் ஏற்கத்தக்கதாக இல்லை. இவர் மீது தொடரப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டுள்ளன. நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் கடுமையானவை. இவ்வகை குற்றங்களின் மூலம் நிர்வாகப் பணிகளுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார். எனவே, நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக இவரை நிரந்தரமாக பணியிலிருந்து நீக்கம் செய்து ஆணை வழங்கப்பட்டது. இவ்வாணையை தனியர் 15.11.2003 அன்று பெற்றுக்கொண்டார்.

<u>ம.அ7.ந.க.எண்.அ2/2218/1997</u>

திரு.கே.மணி, நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்ட துப்புரவு பணியாளர் தனது 17.11.2003 நாளிட்ட மனுவின் மூலம் நியமனக்குழுவிற்கு மேல்முறையீடு செய்துள்ளார். அன்னாரின் மேல்முறையீட்டு மனுவில் தான் முன்பு துப்புரவு பணியாளராக கோட்டம்–109, பகுதி–21, மண்டலம்–7ல் வேலை செய்து கொண்டிருந்த போது முன்விரோதம் காரணமாக என் உறவினர்கள் செய்வினை செய்துவிட்டதால் சித்தப்பிரமை பிடித்து 12.04.1996 முதல் வேலைக்கு வரமுடியவில்லை. உடனடியாக தக்க சமயத்தில் லீவு லெட்டர் கொடுத்தனுப்ப உதவிக்கு யாரும் கிடையாது. என்றும், ஆஸ்பிடல் மருந்து மூலம் வைத்தியம் பார்த்து குணமாகாததால் தான் ஆந்திரா மாநிலத்திற்கு சென்று வைத்தியம் செய்துக்கொண்டு பூரணகுணமடைந்து வந்து 16.06.2000ல் பணியில் சேர்ந்து வேலை செய்து வரும் போது 16.11.2003 தேதியிலிருந்து நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்டேன் என்றும், தற்சமயம் தான் வேலை இல்லாமலிருக்கின்றேன் என்றும், தான் நிரபராதி என்றும் கருணை உள்ளம் கொண்ட தாங்கள் தயவு செய்து தன்மீது இறக்கம் கொண்டு தனக்கு மீண்டும் பணியில் சேர ஆணை தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இம்மேல்முறையீட்டு மனு நியமனக்குழுவால் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. தனியரின் விளக்கம், குடும்ப சூழ்நிலை மற்றும் கடந்த காலத்தில் தண்டனை ஏதும் பெறாமல் பணியாற்றி வந்துள்ளதை கருத்தில் கொண்டும், மனிதாபிமான அடிப்படையிலும் நிர்வாகம் தனியரை நிரந்தர பணிநீக்கம் செய்து வழங்கிய தண்டனையை மாற்றியமைத்து மீண்டும் பணியில் சேர அனுமதித்து, திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகள் தனியரின் ஊதிய உயர்வினை நிறுத்தம் செய்து தண்டனை வழங்கவும், பணிக்கு வராத காலத்தை விதிகளின்படி வரன்முறைப்படுத்தவும் நியமனக்குழுவின் தீர்மானம் பெறப்பட்டது.

நியமனக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் மீண்டும் 20.08.2004 முதல் பணியில் சேர்க்கப்பட்டார். தனியர் பணிக்கு வராத காலம் 12.04.1996 முதல் 15.06.2000 வரையிலும் அதன்பின்னர் நிரந்தர பணிநீக்க காலம் 16.11.2003 முதல் 19.08.2004 வரையிலும் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

தொ.நோ.ம.மனை.ந.க.எண்.அ2/105/2006
ஆணையாளர் அவர்களின் 20.10.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :636/2008 பொருள் எண்.36

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.கே.சீனிவாசன், துலக்குநர், தொற்றுநோய், மருத்துவமனை அவர்கள் 35 ஆண்டுகள் சென்னை மாநகராட்சி பணி செய்துள்ளதாகவும், தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும் குடும்ப சூழ்நிலையின் காரணமாகவும் தன்னால் தொடர்ந்து பணி செய்ய இயலாததால் தன்விருப்ப ஓய்வில் செல்ல தனது 03.02.2004 நாளிட்ட தலைவர், நியமனக்குழு அவர்களுக்கு சமர்ப்பித்த கடிதத்தை 3 மாத கால அறிவிப்பாக கருதி அவரை தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு கேட்டு கொண்டார். இதனடிப்படையில் ஆணையரின் ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டதில், ஆணையர் அவர்களின் 30.04.2004 நாளிட்ட குறிப்பில் தனியர் 1986–87ம் ஆண்டுகளில் முன்னறிவிப்பின்றி (09.06.1986 முதல் 23.09.1987 வரை 472 நாட்கள்) பணிக்கு வராத குற்றத்திற்காக ஒழுங்கு நடவடிக்கை எதுவும் தொடரப்பட்டதாக அறிய இயலவில்லை என்றும் பணிக்கு வராத காலம் ஓராண்டுக்கு மிகுந்திருந்தும் அரசின் தளர்வாணை பெற்று வரன்முறைப்படுத்த 16 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்தப்படாத நிலையில் தனியரை தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிப்பது குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் ஆணையருக்கு உண்டு என்ற அரசாணை எண்.350, P&A.R நாள்.07.10.1991ல் அறிவுருத்தியிருப்பதன் அடிப்படையில் திரு.கே.சீனிவாசன், துலக்குநர், சுகாதாரத்துறை, தொற்றுநோய் மருத்துவமனையில் பணிபுரிபவரின் தன்விருப்ப ஓய்வு கோரிய மனுவை நிராகரித்து 30.04.2004 நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது. மேலும் தனியர் பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப முறையான நடவடிக்கை தொடரவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக சமர்ப்பிப்பது என்னவெனில் தன்விருப்ப ஓய்வு கோரிய திரு.கே.சீனிவாசன், துலக்குநர், அவர்களின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் பக்கம்–7ல் அன்னார் LLP from 09.06.1986 to 31.08.1987 என பதியப்பட்டுள்ளது. பின்னர் பக்கம் 26ல் 09.06.1986 to 30.08.1997 (389 days) LLP என்றும் அதனைத் தொடர்ந்து 09.06.1986 to 23.09.1987 =472 days LLP Rejoined duty at CD Hospital. 24.09.1987 என்றும் பதியப்பட்டு உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–7ல் அவர்களின் ஒப்பம் பெறப்பட்டுள்ளது. மேலும் விடுப்பு காலம் பக்கம் 27ல் 09.06.1986 முதல் 31.08.1987 வரை மருத்துவ சான்றிதழின் பேரில் விடுப்பு ஆக வரன்முறைப்படுத்தி உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–7அவர்களின் ஒப்பம் பெறப்பட்டுள்ளது. தனியர் தொற்றுநோய் மருத்துவமனையில் 24.09.1987 அன்று முதல் பணியில் சேர்நதுள்ளார். எனத் தெரியவந்தது இதனடிப்படையில் மேற்படி தனியர் பணிக்கு வராத காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் அக்குற்றத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா எனவும், அவ்வாறு ஒழுங்கு நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் மண்டலம்–7க்கு குறிப்பு அனுப்பி கோரப்பட்டதில் மண்டல அலுவலர்–7, உதவி சுகாதார அலுவலர் அவர்கள் இந்த பொருள் தங்களுக்கு சம்பந்தப்பட்டதில்லை என்று எழுதி அனுப்பியுள்ளார்.

இயக்குநர் தொற்றுநோய் மருத்துவமனை அவர்களால் சென்னை மாநகராட்சி பதிவறைக்கு அனுப்பப்பட்ட குறிப்பில் தனியரை மருத்துவக்குழுமத்திற்கு அனுப்பப்பட்ட குறிப்பாணை எண்.சி/11/11087/87, நாள்.26.06.1987 மற்றும் சு.து.ந.க.எண்.சி11/13636/87, நாள்.19.09.1987 ஆகிய கோப்புகள் பதிவுரு அறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உடனடியாக தொற்றுநோய் மருத்துவமனைக்கு தெரிவிக்குமாறும், இக்கோப்புகள் பதிவுரு செய்யப்பட்டு இருப்பின் மேல் நடவடிக்கை எடுக்க கோப்பினை அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. சென்னை மாநகராட்சி பதிவறை பகுதியிலிருந்து இக்கோப்பு பற்றிய விவரங்கள் அறியப்படவில்லை என Record Requisation slip மூலம் உரிய அலுவலரின் ஒப்பம் பெற்று கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

திரு.கே.சீனிவாசன், துலக்குநர், அவர்கள் தொற்றுநோய் மருத்தவமனையில் 24.09.1987 அன்று முற்பகல் பணியில் சேருமுன் ஏற்கனவே பணிபுரிந்த மண்டலம்–7ல் தனியர் பணிக்கு வராத 09.06.1986 முதல் 23.09.1987 வரையிலான காலத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட கோப்பு கிடைக்கப்பெறாத நிலையில் மேற்கண்ட தனியர் பணிக்கு வராத காலம் ஓராண்டினைக் கடந்துள்ளதால் அக்காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2) மற்றும் 18(3)னை தளர்வு செய்து அரசின் தளர்வாணை பெற்றபின்னரே வரன்முறைப்படுத்தப்படவேண்டும்.

<u>தொ.நோ.ம.மனை.ந.க.எண்.அ2/105/2006</u>

தனியர் 31.07.2009 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்லயிருப்பதால், அன்னார் பணிக்கு வராத காலம் **09.06.1986** முதல் **23.09.1987** வரையிலும் ஏற்கனவே சம்பளமில்லா விடுப்பாக வழங்கப்பட்ட குறிப்பாணை ரத்து செய்யவும்,

தனியர் பணிக்கு வராத காலம் **09.06.1986** முதல் **23.09.1987** வரை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி **18(2)**னை தளர்வு செய்து அரசாணை பெற அரசுக்கு செயல்குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:தொ.நோ.ம.மனை.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ5.ந.க.எண்.சி2/7036/2000**

**ஆணையாளர் அவர்களின் 03.11.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :637/2008 பொருள் எண்.37

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

05.10.2001 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையில் திரு.என்.லஷ்மைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–74, பகுதி–15, மண்டலம்–5, என்பவர் 16.02.1995 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து விதிகள் 9(2)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்டு மேல்முறையீடு செய்யப்பட்டு நியமனக்குழு அதனை பரிசீலித்து நிர்வாகம் வழங்கிய தண்டனையை மாற்றி அன்னாருக்கு இரண்டாண்டுகள் ஊதிய உயர்வினை திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்தும் பணியில் சேரவும் மற்றும் பணிநீக்க காலத்தை தகுதியுள்ள விடுப்பாக பாவிக்கவும், தனியர் பணிக்கு வராத காலமான 16.02.1995 முதல் 10.09.1999 வரை தகுதியுள்ள விடுப்பாக வரன்முறைப்படுத்தியும் ஆணை வழங்கப்பட்டது.

24.06.2004 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி தனியர் 04.04.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து விதிகள் 9(2)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்டு தனியரது மேல்முறையீடு மனுவினை நியமனக்குழு பரிசீலித்து மனுதாரரின் விளக்கம் குடும்ப சூழ்நிலை மற்றும் 30.06.2004 பி.ப முதல் வயது முதிர்வு பெற வேண்டியதையும் கருத்தில் கொண்டும் மனிதாபிமான அடிப்படையில் நிர்வாகம் தனியருக்கு வழங்கிய நிரந்தர பணிநீக்க தண்டனையை மாற்றியமைத்து மீண்டும் பணியில் சேர அனுமதித்தும் அன்னாரின் ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகள் ஊதிய உயர்வினை நிறுத்தம் செய்யவும் தண்டனையை நடைமுறைப்படுத்த இயலாத பட்சத்தில் அதற்கு இணையாக தொகையினை கணக்கீட்டு பிடித்தம் செய்யவும் தனியர் பணிக்கு வராத காலத்தை விதிகளின்படி, வரன்முறைப்படுத்தவும் செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

மேற்கண்ட உத்தரவின்படி தனியர் 29.06.2004 அன்று மீண்டும் பணியில் சேர்ந்து 30.06.2004 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றார்.

தனியர் 16.02.1995 முதல் 10.09.1999 வரை மற்றும் 04.04.2000 முதல் 28.06.2004 வரை இரு நிகழ்வுகளில் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டைக் கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2) மற்றும் 18(3)யை அரசுக்கு முன்மொழிவு அனுப்பி தளர்வாணை பெற்று வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, தனியர் இரு நிகழ்வுகளில் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த அரசுக்கு முன்மொழிவு அனுப்ப கீழ்கண்ட இனங்களின் மீது நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. முதல் நிகழ்வில் தனியர் 16.02.1995 முதல் 10.09.1999 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தை நியமனக்குழு தீர்மான எண்.371/99, நாள்.29.07.1999 மற்றும் மன்றத் தீர்மான எண்.375/01, நாள்.23.07.2001ல் தகுதியுள்ள விடுப்பாக வரன்முறைப்படுத்தி தீர்மானம் வழங்கப்பட்டதை ரத்து செய்து விதிகளின்படி வரன்முறைப்படுத்த அனுமதி வேண்டியும்,

2. இரு நிகழ்வுகளில் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலங்களான 16.02.1995 முதல் 10.09.1999 வரை மற்றும் 04.04.2000 முதல் 28.06.2004 வரையுள்ள காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2) மற்றும் 18(3)யை தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ5.வ.து.ந.க.எண்.ஆர்2/785/07
ஆணையாளர் அவர்களின் 07.11.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :638/2008 பொருள் எண்.38

**தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்க அனுமதி**

திரு.எஸ்.வெங்கைய்யா, வரி வசூலிப்பவர், வருவாய்த்துறை, மண்டலம்–5, அவர்கள் சென்னை மாநகராட்சியில் தற்காலிக துப்புரவு பணியாளராக பணியில் சேர்ந்து 23.06.1984 முதல் நிரந்தர துப்புரவு பணியாளராக பதவி உயர்வு பெற்று பின்பு 30.06.1997 முதல் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். பின்பு சென்னை மாநகராட்சி உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் செயல்முறை ஆணை எண்.பொ.து.ந.க.எண்.இ6/18039/99, நாள்.06.07.1999ன்படி 13.08.1999 அன்று வரிவசூலிப்பவராக பணியில் சேர்ந்து 30.06.2007 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார்.

தனியரது தாய்மொழி தெலுங்கு. இவர் பணியிலிருக்கும் காலத்தில் தமிழ்நாடு தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. என்பதனை காரணம் காட்டி தனியருக்கு ஓய்வு கால சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு தற்காலிக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

தனியர் நிரந்தர துப்புரவு பணியாளர், பணியில் 23.06.1984 முதல் 30.06.1997 வரையிலும், இளநிலை உதவியாளராக 01.07.1997 முதல் 05.07.1999 வரையிலும், 06.07.1999 முதல் 30.06.2007 வரையில் வரி வசூலிப்பவராக பணிபுரிந்து ஓய்வு பெற்றார். தனியர் 23 ஆண்டுகள் (தகுதியுள்ள பணிக்காலம்) எவ்வித குற்றச்சாட்டுகளும் இன்றி பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் ஆவார். தனியர் மீது எவ்வித குற்றச்சாட்டும் நிலுவையில் இல்லை. இவர் பணியாற்றும் போது இவரது பணிகள் திருப்திகரமாக இருந்தது. இவர் கடைசியாக ஊதிய உயர்வு பெற்ற நாள் 01.04.2003 இவருக்கு 01.04.2004 முதல் 4 வருட காலம் ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இதன்பொருட்டு தனியரின் 18.08.2008 நாளிட்ட கடிதத்தில் அன்னார் 1972ம் ஆண்டு துப்புரவு தொழிலாளியாக பணியில் சேர்ந்து 1997ம் ஆண்டு இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்று அதன் பின்னர் 1999ம் ஆண்டு முதல் வரி வசூலிப்பவராக பதவி மாற்றம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்ததாகவும், பதவி உயர்வு வழங்கும் போதே 50 வயதைக் கடந்துவிட்டதாகவும், போதுமான நேரம் களப்பணியிலேயே இருந்ததால் தேர்வு எழுதவில்லை என்று தெரிவித்துள்ளார். தனியர் தமிழ் மொழியில் தேர்ச்சி பெறாமைக்கு சிறப்பினமாகக் கொண்டு தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசாணை பெறுவது அவசியமாகிறது.

எனவே, ஓய்வு பெற்ற திரு.எஸ்.வெங்கைய்யா, வரிவசூலிப்பவர், அவர்களுக்கு தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசாணை பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :639/2008 பொருள் எண்.39

**<u>தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்க அனுமதி</u>**

மண்டலம்–2ல் திரு.பி.பி.பரமேஸ்வரன், அவர்கள் சுகாதார பிரிவில், மலேரியா துறையின் அடிப்படை சுகாதார ஆய்வாளராக பணியாற்றி 31.05.2001ல் வயது முதிர்வு ஓய்வு பெற்றவர் ஆவார். மன்றத் தீர்மானம் எண்.566/2003, நாள்.20.10.2003ன்படி தனியர் தமிழ் மொழியில் தேர்ச்சி பெறாமைக்கு அரசாணை பெறும் பொருட்டு (தீர்மானம் பெற்று) அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது. அரசு சென்னை மாநகராட்சி கோரிக்கையினை நிராகரித்து விட்டது.

ம.அ2.உ.ந.அ2.ந.க.எண்.அ1/335/2001 மண்டல அலுவலகத்தின் குறிப்பில் தனியர் 26.03.2007 அன்று மரணமடைந்து விட்டதாகவும், தனியரின் மனைவி திருமதி. என்.ஸ்ரீதேவி அவர்கள் குடும்ப ஓய்வூதியம் மற்றும் இதரப்பயன்கள் பெற வேண்டி மனு செய்துள்ளமையால், தனியரின் தமிழ் மொழி தேர்வு தொடர்பான பணிகள் முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில், மறைந்த ஓய்வு பெற்ற அடிப்படை சுகாதார பணியாளர் திரு.பி.பி.பரமேஸ்வரன், அவர்கள் தமிழ் மொழி தேர்ச்சி பெறாமைக்கு விலக்களித்தும், தனியரின் துணைவியார் திருமதி.என். ஸ்ரீதேவி, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமும் வழங்க வேண்டியுள்ளதால் மன்றத் தீர்மானம் பெறுவது அவசியமாகிறது.

எனவே, நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" தனியருக்கு தமிழ்மொழி தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து தளர்வாணை வழங்க 20.05.2004 நாளிட்ட அரசு கடிதத்தில் மறுக்கப்பட்டிருப்பினும் தனியர் 26.03.2007ல் காலமாகி விட்டதை கருத்தில் கெண்டு அரசு மறுபரிசீலனை செய்து சிறப்பு நிகழ்வாக தளர்வாணை வழங்க கோரி மீண்டும் அரசுக்கு எழுத நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.2.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/ 1329 /2008**
**ஆணையாளர் அவர்களின் 22.09.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :640/2008 பொருள் எண். 40

**குப்பை தரம் பிரித்தலில் 100 விழுக்காட்டினை எய்த ஊக்கப்பரிசு, பாராட்டு சான்று வழங்கவும், கௌரவிக்கவும் வழிமுறைகள் வகுத்தல்**

2008–2009ம் ஆண்டு சென்னை மாநகராட்சி நிதி நிலை தொடக்க உரை அறிவிப்பில் திடக்கழிவு மேலாண்மை துறை தொடர்பான பொருட்பாட்டில் குப்பையில்லா சென்னை என்னும் கனவை நனவாக்க முதன் முதலில் 100 விழுக்காடு குப்பையை தரம் பிரித்தலை மக்கள் ஏற்கும் வண்ணம் பணியாற்றுகின்ற இதனை முதன் முதலில் நிறைவேற்றுகின்ற இரண்டு துப்புரவு ஆய்வாளர்களுக்கும், இரண்டு துப்புரவு மேஸ்திரிகளுக்கும் தலா ரூபாய் 10,000/– ஊக்கப்பரிசும், குப்பையை 100 விழுக்காடு தரம் பிரித்தலை நிறைவேற்றிக்காட்டும் இரண்டு நல சங்கங்களுக்கு, தலா ரூ.5,000/– ஊக்கப்பரிசும், குப்பையை தரம்பிரித்தலை அடையாளம் காட்டும் வண்ணம் நிறைவேற்றும் எல்லா ஊர் நல சங்கங்களுக்கு ரூ.1000/– ஊக்கப்பரிசும், சான்றிதழ்களும், நினைவு பரிசுகளும் வழங்கவும் மேலும் 100 விழுக்காடு குப்பையை தரம்பிரித்தலில் தங்களை ஈடுபடுத்தி முன்நின்று மக்களை ஊக்குவிக்கும் மாமன்ற உறுப்பினர்களை கௌரவிக்கவும் அறிவிக்கப்பட்டுள்ளதை நிறைவேற்றும் வகையில் மன்ற தீர்மானம் எண்.399/2008, நாள்: 30.07.2008 ன் படி கீழ்வரும் இனங்களுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

1) குப்பையை தரம் பிரித்தலை 100 விழுக்காடு தான் பணிபுரியும் பகுதிகளிலுள்ள வீடுகளில் ஈடுபட செய்கின்ற இரண்டு துப்புரவு ஆய்வாளர்களுக்கும் மற்றும் இரண்டு துப்புரவு மேஸ்திரிகளுக்கும் தலா ரூ.10,000/– ஊக்கப்பரிசாக வழங்குதல்

2) குப்பையை தரம் பிரித்தலை குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான குடியிருப்புகளில் 100 விழுக்காடை நிறைவேற்றும் முதல் இரண்டு நலச்சங்கங்களுக்கு தலா ரூ.5000/– ஊக்கப்பரிசு வழங்குதல்

3) குப்பையை தரம் பிரித்தலை சென்னை மாநகராட்சிக்கு அடையாளம் காட்டும் வண்ணம் நிறைவேற்றும் எல்லா ஊர் நலச்சங்கங்களுக்கும் தலா ரூ.1000/– ஊக்கப்பரிசாக வழங்கவும், மேலும் திட்டத்தை நிறைவேற்றும் மேற்கண்ட பொதுநல சங்கங்களுக்கு பாராட்டுச் சான்றிதழும், நினைவுப்பரிசும் வழங்குதல்,

4) மேலும் இந்த திட்டத்தை தம் பகுதி மக்களை ஊக்குவித்து 100 விழுக்காடு தரம் பிரித்து ஏற்படுத்தி தர முன்னின்று பணிபுரியும் மாமன்ற உறுப்பினர்களை கௌரவித்தல்

5) இதற்கு தேவைப்படும் நிதியினை சென்னை மாநகராட்சி தனது நிதியிலிருந்து செலவிடுதல்

துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் துப்புரவு மேஸ்திரிகளை ஊக்கப்பரிசுக்காக தேர்வு செய்வது குறித்து கீழ்வரும் வழிமுறைகளை பின்பற்றலாம்.

1. மண்டல அலுவலர்கள் ஒவ்வொரு வார்டின் துப்புரவு ஆய்வாளரின் மற்றும் துப்புரவு மேஸ்திரியின் பணியினையும் சீர்தூக்கி பார்த்து ஒரு மண்டலத்திலிருந்து இரண்டு துப்புரவு ஆய்வாளரையும் இரண்டு துப்புரவு மேஸ்திரிகளையும் தேர்வு செய்து தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

2. தலைமை அலுவலகம் அவர்களில் இரண்டு துப்புரவு ஆய்வாளர்களையும் மற்றும் இரண்டு துப்புரவு மேஸ்திரிகளையும் மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மக்கள் நல சங்கங்கள் பரிசு பெற கீழ் கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கலாம்.

1. நலச்சங்கங்கள் அல்லது குடியிருப்போர் சங்கங்கள் அல்லது குடியிருப்போர் நல சங்கங்கள், முறைப்படி ஒரு சங்கமாகவோ அல்லது ஒரு கூட்டுறவு சங்கமாக சங்கங்களுக்கான பதிவாளர் அலுவலகத்தில் அல்லது கூட்டுறவு சங்கங்களுக்கான பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2. குறிப்பிட்ட நலச்சங்கம், குறைந்த பட்சமாக அந்த தெருவில் அந்த பகுதியில் உள்ள குடியிருப்போர் எண்ணிக்கையில் குறைந்தது 50 சதவிகிதத்தை உறுப்பினர்களாக கொண்டிருக்க வேண்டும்.

3. நலச்சங்கங்கள், குப்பை தரம் பிரித்தலை உறுப்பினர்களுக்கு விளக்கும் வகையில் குறைந்தது மாதம் ஒரு முறையேனும் கூட்டம் நடத்தியிருக்க வேண்டும்.

4. மக்கும் குப்பையை அவர்களின் கட்டடத்திற்குள்ளேயே உரமாக மாற்றும் நலச்சங்கங்களையும் அந்த நலச்சங்கத்தின் செயல்பாடு உள்ள பகுதியில் உள்ள மக்கள் குப்பையை தரம் பிரித்து வழங்குவதையும் கருத்தில் கொண்டு அவர்களை முதன்மை படுத்த வேண்டும்.

**திக.மே.து.ந.க.எண்.அ7/ 1329 /2008**

5. நலச்சங்கங்கள் குப்பை தரம் பிரித்தல் குறித்து அவர்களின் செயல்பாடு பற்றி மண்டல அலுவலரிடம் அறிக்கை சமர்ப்பித்திருக்க வேண்டும்.

மேற்சொன்ன வழிமுறைகளை கடைபிடித்து மண்டல அலுவலர்கள் அவர்களின் மண்டலத்தின் ஆட்சிநிலவரைக்குள்(territorial jurisdiction) உள்ள இரண்டு நல சங்கங்களை தேர்வு செய்து தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

மண்டல அலுவலர்கள் அனுப்பும் நலச்சங்கங்களின் பட்டியலில் உள்ள அனைத்து நலச்சங்கங்களுக்கும் பரிசுத்தொகை வழங்கலாம். அவர்களில் இரண்டு நலச்சங்கங்களுக்கு ரூபாய் 5,000/–ம் மற்ற சங்கங்களுக்கு ரூ.1,000/–ம் வழங்கலாம்.

அடுத்ததாக மாமன்ற உறுப்பினர்களை கௌரவிக்க அவர்களை தேர்வு செய்ய கீழ்வரும் காரணிகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

1. மாமன்ற உறுப்பினர்களுக்கு அந்தந்த வார்டுகளில் உள்ள மக்கள் நலச்சங்கங்களுடன் அவர்கள் குப்பையை தரம் பிரித்தலில் மற்றும் குப்பையை வீடுகளிலேயே உரமாக மாற்றும் செயல்பாட்டில் உள்ள ஈடுபாடு.

2. அந்தந்தந்த வார்டுகளில் மக்களிடையே குப்பை தரம்பிரித்தலில் மாமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பின் அளவு

3. குப்பை தரம் பிரித்தல் அந்தந்த வார்டுகளில் செயலாக்கப்படும் அளவு மேற்சொன்ன காரணிகளை கருத்தில் கொண்டு மண்டல அலுவலர்கள் அவர்களின் மண்டலத்தின் ஆட்சி நிலவரைக்குள் உள்ள வார்டுகளில் இருந்து மாமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்து தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

அவ்வாறு மண்டல அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து மாமன்ற உறுப்பினர்களையும் மாமன்றத்தில் நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கலாம்.

இவ்வாறு பரிசுத் தொகை, ஊக்கப்பரிசு, சான்றிதழ் மற்றும் கௌரவித்தல் ஆகியவைகளுக்காகவும் மற்றும் துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேஸ்திரி, நலச்சங்கங்கள் தேர்வு செய்யப்பட பின்பற்றப்பட வேண்டிய மேற்சொன்ன வழிமுறைகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.298 /2008, நாள்: 16.10.2008-ன்படி இதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டும் என்ற திருத்தத்துடன் இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> 24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.269/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.(ம).ந.க.எண்.எம்1/2475/97**

**ஆணையாளர் அவர்களின் 17.10.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :641/2008 பொருள் எண். 41

**அடிப்படை சுகாதார ஆய்வாளர் மற்றும் பணியாளர்களுக்கு பல்நோக்கு சுகாதார பயிற்சி அளிக்க அனுமதி**

அரசு ஆணை நிலை எண். 1936 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள்: 29.09.1982ன் படி தமிழ்நாடு பொது சுகாதார ஆய்வாளர்கள் மற்றும், அடிப்படை சுகாதார பணியாளர்கள் அனைவரும் பல்நோக்கு சுகாதார திட்டத்திற்கு மாற்றப்பட்டு முறையே அவர்கள் பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர்கள் மற்றும் பல்நோக்கு சுகாதார உதவியாளர்கள் என பெயர் மாற்றப்பட்டு அவர்களின் ஊதிய விகிதங்களும் திருத்தி அமைக்கப்பட்டது என்றும், மேற்குறிப்பிட்ட பல்நோக்கு சுகாதார திட்டம் சென்னை மாநகராட்சியின் மாமன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பினும் சென்னை மாநகராட்சியில் மட்டும் அத்திட்டம் அமுல்படுத்தப்படாமல் உள்ளது என்றும், இதனால் கடந்த ஊதிய குழு பரிந்துரைகளில் ஒரே சீராக வழங்கப்பட்ட ஊதிய விகிதங்கள் கடந்த இரண்டு ஊதியக்குழு பரிந்துரைகளில் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அடிப்படை சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் அடிப்படை சுகாதார பணியாளர்களின் ஊதிய விகிதங்கள் திருத்தி அமைக்காததால், அரசு பொது சுகாதார இயக்குநரகத்தில் பணிபுரிபவர்களை விட குறைவான ஊதியத்தையே பெற்று வருகிறார்கள் என்றும், சென்னை மாநகராட்சியில் பல்நோக்கு சுகாதாரத் திட்டம் அமுல்படுத்தாத போதிலும் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அடிப்படை சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் அடிப்படை சுகாதார பணியாளர்கள் அரசு பொது சுகாதாரத் துறையில் பணிபுரிபவர்களும் ஒரே மாதிரியான பணிகளை செய்து வருகிறார்கள் என்றும், மேலும் சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் குடும்ப நலத்துறையில் பல்நோக்கு சுகாதாரத் திட்டத்தில் பல்நோக்கு சுகாதார பணியாளர் பணி அமர்த்தபட்டு பணி செய்கிறார்கள் என்றும், இப்பணியாளர்களுக்கும் அரசு பொது சுகாதார பணியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது என்றும், மேலும் நான்காவது ஊதியக்குழு வரை அடிப்படை சுகாதார பணியாளர்களுக்கு இணையாகவும், அடிப்படை சுகாதார ஆய்வாளர்களுக்கு குறைவாகவும் ஊதிய விகிதம் பெற்று வந்த நுண்நோக்கியாளர்கள் ஊதியம் பொது சுகாதார இயக்குநரகத்திற்கு இணையாக திருத்தப்பட்டு அதிகப்படியான ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது என்றும், இதனால் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அடிப்படை சுகாதார பணியாளர்கள் மற்றும் அடிப்படை சுகாதார ஆய்வாளர்கள் ஊதிய விகிதம் கணிசமாக குறைந்து விட்டது.

மேலும் சென்னை மாநகராட்சியில் 38 அடிப்படை சுகாதார ஆய்வாளர்கள் அனுமதிக்கப்பட்டு வயது முதிர்வு ஓய்வு மற்றும் தன்விருப்ப ஓய்வில் சென்றதால் தற்சமயம் 5 அடிப்படை சுகாதார ஆய்வாளர் மட்டும் பணியில் உள்ளனர் என்றும், அதே போல் 223 அடிப்படை சுகாதார பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டு தற்சமயம் 139 அடிப்படை சுகாதார பணியாளர்கள் மட்டும் பணியில் உள்ளார்கள் என்றும், இவர்கள் சென்னை மாநகர எல்லைக்குள் மலேரியா நோய் தடுப்புப் பணிகள் மட்டுமில்லாமல் யானைக்கால் நோய் தடுப்பு, டெங்கு காய்ச்சல் தடுப்பு, லெப்டோஸ்பைரோசிஸ் என்னும் எலிகளால் பரவும் காய்ச்சல் தடுப்பு, மலேரியா நோய் பரப்பும் கொசு வளரவிடாமல் தடுப்பது, காலரா நோய் தடுப்பு, காசநோய் தடுப்பு, கினிவாம் பூச்சி ஆய்வு, மற்றும் நோய்த்தடுப்பு போன்ற பணிகளுடன் அவ்வப்போது சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் போலியோ முகாம், சுகாதார கல்வி முகாம், குடிசை பகுதிகளில் சுகாதார கல்வி முகாம் போன்ற நலப்பணிகளில் பணி செய்வதுடன், இயற்கை சீற்றங்களில் ஏற்படும் பாதிப்புகளின் போது காற்று மற்றும் குடிநீரால் பரவும் நோய்கள் பரவாமல் தடுக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்றும், சென்னை மாநகராட்சியில் தற்போது பணிபுரியும் அடிப்படை சுகாதார ஆய்வாளர்கள்/ பணியாளர்கள் அனைவரும் ஒரே பதவியில் 20 ஆண்டுகளுக்கு மேல் எவ்வித பதவி உயர்வுகள் இல்லாமல் பணி செய்து வருகிறார்கள் என்றும், இருப்பினும் இவர்கள் அரசு பொது சுகாதார இயக்குநரகத்தில் பணி செய்து வரும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதிய விகிதங்களைவிட குறைவாகவே ஊதியம் பெறுகிறார்கள் என்றும், இப்பணியாளர்களில் பெரும்பாலானவர்கள் ஓய்வு பெற இன்னமும் சில ஆண்டுகளே உள்ளன என்றும், சென்னை மாநகராட்சியில் பல்நோக்கு சுகாதார திட்டத்தை அமுல்படுத்தி அரசு பணியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்குவதால் சென்னை மாநகராட்சிக்கு ஒரு வருடத்திற்கு ஏற்படும் அதிகபடியான கூடுதல் செலவு ரூ.29 இலட்சம் என கணக்கிடப்பட்டு இச்செலவு சென்னை மாநகராட்சியின் வருவாயிலிருந்து செலவிடப்படும் என்றும் அரசுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும், சென்னை மாநகராட்சியில் பொது ஊழியர்கள் சங்க பொது செயலாளர், அடிப்படை சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் அடிப்படை சுகாதார பணியாளர்களுக்கு மற்ற நகராட்சிகளில் செயல்படுவது போல் பல்நோக்கு சுகாதார திட்டத்தை சென்னை மாநகராட்சியில் அமுல்படுத்தி பொது சுகாதார இயக்குநரகத்தில் பணிபுரிபவர்களுக்கு வழங்கப்படும் ஊதிய விகிதம் வழங்குவது குறித்து உயர்நீதி மன்ற ஆணையில் மனுதாரரின் கோரிக்கையை பரிசீலித்து விதிகளின் படி நீதிமன்ற ஆணை பெற்ற மூன்று மாதங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிடப்பட்டது என்று தெரிவித்ததை தொடர்ந்து அரசு தனது 10.04.2008 நாளிட்ட ஆணையில் சென்னை மாநகராட்சியில் பல்நோக்கு சுகாதார திட்டத்தை அமுல்படுத்த சென்னை மாநகராட்சியில் கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு அடிப்படை சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் அடிப்படை சுகாதார பணியாளர்களுக்கு 6 (ஆறு) மாத குறுகிய கால பயிற்சியை சென்னை மாநகராட்சியில் தொற்று நோய் மருத்துவமனையில் அளித்து பயிற்சி நிறைவு பெற்ற பிறகு அவர்களுக்கு சுகாதார ஆய்வாளர் நிலை–2 என்ற பதவி மாற்றம் அளித்து அப்பதவிக்குண்டான ஊதியமான ரூ. 3200–85–4900 அளிக்கலாம் என ஆணை பிறப்பித்துள்ளது.

**சு.து.(ம).ந.க.எண்.எம்1/2475/97**

1. 6 (ஆறு) மாத குறுகிய கால பயிற்சிக்கு தகுதி பெற அடிப்படை சுகாதார ஆய்வாளர்கள்/அடிப்படை சுகாதார பணியாளர்கள் குறைந்த பட்சம் எஸ்.எஸ்.எல்.சி முடித்திருக்க வேண்டும்.
2. இவர்களுக்கு பயிற்சிக்கு தேர்ந்தெடுப்பதற்கு தகுதியாவதற்கு முன் 15 ஆண்டுகள் பணி செய்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
3. பயிற்சி முடிக்கப்பட்ட பின்னரே பெயர் மாற்றம் செய்யப்படவேண்டும்.
4. பணியாளர் பயிற்சியின் போது விடுப்பில் செல்லக் கூடாது.
5. பயிற்சி பெற்றஉடன் தேர்வு நடத்தி உரிய சான்றிதழ் வழங்க வேண்டும். அதன் நகல் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதியப்படவேண்டும்.
6. இப்பயிற்சிக்கான பாடத்திட்டத்தை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்குநரைக் கலந்து சென்னை மாநகராட்சி ஆணையர் முடிவு செய்ய வேண்டும்.
7. மன்றத் தீர்மானம் பெற வேண்டும்.

அரசாணை நிலை 59ல் உள்ள நிபந்தனை 6ல் குறிப்பிட்டுள்ளபடி இப்பயிற்சிக்கான பாடத்திட்டத்தை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்குநரை கலந்து சென்னை மாநகராட்சி ஆணையர் முடிவு செய்ய வேண்டும் என தெரியப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பயிற்சிக்கான பாடத்திட்டங்களின் விவரங்களை, தெரிவிக்குமாறு 06.06.2008 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டது.

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை அவர்கள் 18.06.2008 நாளிட்ட கடிதத்தில்

2. ஆறு மாத கால பல்நோக்கு சுகாதார பயிற்சித் திட்டம் (Condensed Training Programme) சென்னை மாநகராட்சி சார்ந்த அடிப்படை சுகாதார ஆய்வாளர்கள்(ம) அடிப்படை சுகாதார பணியாளர்களுக்கும் இத்துறை சார்ந்த பாடத்திட்டத்தின்படி இத்துறையின் பயிற்சி நிறுவனங்களில் அளிப்பதுதான் ஏற்புடையதாகும். இதற்கென ஒவ்வொரு பயிற்சி பெறும் பயிற்சியாளருக்கும் தோராயமாக ரூ.10,000 வீதம் செலவு செய்ய வேண்டி வரும் எனவும்,

2. இத்துறை சார்ந்த பொது சுகாதார பயிற்சி நிறுவனத்தில் மேற்குறிப்பிட்ட 6 மாத கால பயிற்சியை கட்டணத்துடன் பெற்றுக் கொள்ள சென்னை மாநகராட்சி முன் வருமானால் அதற்கான தொடர் நடவடிக்கைகளை இத்துறை மேற்கொள்ளும் என மாநகராட்சிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது சென்னை மாநகராட்சி, தொற்று நோய் மருத்துவமனையில் பல்நோக்கு சுகாதார பயிற்சியளிப்பதற்கு போதுமான உள் கட்டமைப்பு வசதி மற்றும் பயிற்றுநர்கள் (Infrastructure and non availability of teaching staff) இல்லாத காரணத்தினால் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி சென்னை மாநகராட்சி தொற்று நோய் மருத்துவமனையில் பயிற்சியளிப்பதற்கு பதிலாக தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறையில் பயிற்சியளிப்பதற்கும் மேலும் சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு அரசின் கீழ் இயங்கிவரும் உள்ளாட்சி அமைப்பாய் இருப்பதால், ஒரு நபருக்கு பயிற்சிக்கான செலவு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்)க்கு பதிலாக ரூ.4,000/– (ரூபாய் நான்காயிரம்) என நிர்ணயம் செய்து பயிற்சி வழங்குமாறு 18.08.2008 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதன் மீது, இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை அவர்களின் 29.08.2008 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சி தமிழக அரசின் கீழ் இயங்கி வரும் உள்ளாட்சி அமைப்பாக இருப்பினும் தாங்கள் கோரியவாறு பயிற்சி செலவை ரூ.4,000/– ஆக நிர்ணயம் செய்ய இயலாத நிலை உள்ளது. இவ்வாறு குறைத்து பயிற்சி செலவை நிர்ணயம் செய்தால் மாநில கணக்காய்வின் தணிக்கைத் தடை ஏற்படும் வாய்ப்பு உள்ளது. 6 மாத கால பல்நோக்கு சுகாதார பயிற்சி திட்டம் அளித்திட ஒரு பயிற்சியாளருக்கு ரூ.10,000 தேவைப்படுகிறது. இதுவே குறைந்தபட்ச செலவினமாகும். எனவே, தாங்கள் இதன்பால் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு பயிற்சிக்கு தேவைப்படும் பணியாளர்கள் பட்டியலுடன் உரிய நிதியை இத்துறைக்கு வழங்கினால் இத்துறை சிறப்பான பயிற்சியை மாநகராட்சி பணியாளர்களுக்கு அளிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்குநர்அவர்களின் 18.06.2008 மற்றும் 29.08.2008 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சென்னை மாநகராட்சியில் பணி செய்து வரும் அடிப்படை சுகாதார பணியாளர்கள் மற்றும் அடிப்படை சுகாதார ஆய்வாளர்களுக்கு 6 மாத கால பயிற்சியினை தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை அளிப்பதற்கும், பயிற்சி கட்டணமாக மேற்கண்ட இயக்குநரகம் தெரிவித்த நிபந்தனைக்குட்பட்டு தேர்வு செய்த ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூபாய் 10,000/– வீதம் தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறைக்கு வழங்குவதற்கு, ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டதை தொடர்ந்து நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. அரசாணை நிலை எண். 59, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மாந3/ துறை நாள்: 10/04/2008ஐ சென்னை மாநகராட்சியில் அமுல்படுத்தவும்,

2. சென்னை மாநகராட்சியில் 15 ஆண்டுகள் தொடர்ந்து பணி செய்து வரும் அடிப்படை சுகாதார பணியாளர்கள் மற்றும் அடிப்படை சுகாதார ஆய்வாளர்களுக்கு 6 மாத கால பல்நோக்கு சுகாதார பயிற்சியை (Condensed Training Programme) தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறையில் அளிப்பதற்கும்,
3. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் பயிற்சி கட்டணமாக ரூ.10,000/– தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறைக்கு வழங்கவும்,
4. பயிற்சி பெறும் 45 நபர்களுக்கு செலவாகும் தொகை ரூ.4,50,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) கணக்கு குறியீட்டு எண்.115 (பயிற்சி)லிருந்து செலவிடவும்,
5. தற்பொழுது போதிய நிதி கணக்கு குறியீட்டு எண்.115ல் இல்லாத காரணத்தினால் ரூ.4,50,000/–(நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பயிற்சி கட்டணம் வழங்க நிதி கணக்கு குறியீட்டு எண். 115ல் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவும்,
6. அடிப்படை சுகாதார ஆய்வாளர் மற்றும் அடிப்படை சுகாதார பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு ஒரு முறை மட்டும் கட்டணம் செலுத்தி பல்நோக்கு சுகாதார பயிற்சி அளிக்கவும், பயிற்சியாளருக்கு பயிற்சிக்காலத்தை பணிக்காலமாக கருதவும்,

24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.273/2008 , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.ஐ.டி.ஐ./057/2008**
**ஆணையாளர் அவர்களின் 13.10.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :642/2008 பொருள் எண்.42

**சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – தொழிற் பயிற்சி நிலைய அலுவலர்களுக்கு மேலும் ஓராண்டு பணி நீட்டிப்பு வழங்க அனுமதி வேண்டி**

அரசாணை எண் 292 ந.நி.ம.கு.வ.துறை நாள் 06.08.04 மற்றும் மன்ற தீர்மானம் எண் 367/2004 நாள் 30.09.2004 படி, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் சமுதாய இட ஒதுக்கீடு சுழற்சி முறையில் தொழிற் பயிற்சி நிலைய பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் கால சம்பள ஏற்ற முறையில் குறைந்த பட்ச சம்பளம் தொகுப்பூதியமாக பணியமர்த்த கூறப்பட்டுள்ளது. அதன்படி மன்றத் தீர்மானம் எண் 393/2006 நாள் 31.08.2006 மற்றும் மன்றத் தீர்மானம் எண் 437/2006 நாள்31.08.2006 மன்றத் தீர்மானங்கள் மற்றும் க.து.ந.க.எண் : டி1/105/2007 மேல் ஆணையர் அவர்களின் ஆணை மற்றும் செயல் முறை ஆணை நாள் : 18.10.2007 ஆணையரின் ஆணைப்படி கீழ்கண்ட பணியாளர்கள் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் ஒப்பந்த முறையில் பணியமர்வு செய்யப்பட்டு பணி செய்து வருகிறார்கள். பணியாளர்களில் வரிசை எண் 1–4 வரை உள்ள நான்கு நபர்களுக்கும் ஏற்கனவே மன்றத் தீர்மானம் எண் 619/2007 நாள் 28.11.2007 ன் படி ஓர் ஆண்டுக்கு ஒப்பந்த அடிப்படையில் 01.12.2008 வரை பணி நீட்டிப்பு பெறப்பட்டுள்ளது.

| வ எண். | பெயர் | பதவி | மாதாந்திர தொகுப்பு ஊதியம் | பணி சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | M.கோவிந்தராஜ் | முதல்வர் | ரூ. 8000/– | 16.11.2006 |
| 2 | S. சுதாகர் | பயிற்சி அலுவலர் | ரூ. 6500/– | 16.11.2006 |
| 3 | R கிரிஜா | இளநிலை பயிற்சி அலுவலர் (COPA - Theory) | ரூ. 5000/– | 01.12.2006 |
| 4 | R மேகலா | இளநிலை பயிற்சி அலுவலர் (COPA - Practical) | ரூ. 5000/– | 01.12.2006 |
| 5 | K.B.ரமேஷ் | இளநிலை பயிற்சி அலுவலர் (Plumber - Practical ) | ரூ. 5000/– | 01.11.2007 |

மத்திய அரசின் அங்கீகாரம் DGE&T -6/22/6/2006-TC நாள் 20.03.2007, பெறப்பட்டு தொழிற் பயிற்சி நிலைய ஆறுப் பாடப் பிரிவில் கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் பாடப் பிரிவுக்கு 2007 – 2008 கல்வி ஆண்டில் 40 பயிற்சி மாணவர்கள் சேர்க்கப்பட்டு அனைவருக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டு அகில இந்திய தொழிற் பயிற்சி தேர்வு எழுதி உள்ளனர். மேலும் குழாய் பொருத்துநர் பாடப் பிரிவு தொடங்க DGET அங்கீகாரம் கடிதம் எண் DGE&T -6/22/6/2006-TC நாள் 28.03.2008 படி மத்திய அரசின் NCVT அனுமதி பெறப்பட்டுள்ளது.

மற்ற நான்கு பாடப் பிரிவிற்கு (பொருத்துநர், மெக்கானிக் மோட்டார் வாகனம், எலெக்ட்ரீசியன், எலெக்ட்டானிக் மெக்கானிக்) தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் இயந்திரம் பொறியியல் துறை மற்றும் மின்சாரத்துறை மூலம் கொள்முதல் பணிகள் தொழிற் பயிற்சி நிலையத்தில் தற்போது பணியில் உள்ள ஆசிரியர்கள் மூலம் நடைபெற்று இதில் பொருத்துநர், மெக்கானிக் மோட்டார் வாகனம் மற்றும் எலெக்ட்ரீசியன் பாட பிரிவுக்கு மத்திய அரசு NCVT அங்கீகாரம் பெற முதல் கட்ட ஆய்வு 05.09.2008 அன்று மேற் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இறுதிக்கட்ட நிலைகுழு ஆய்வுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் (Copa) மற்றும் குழாய் பொருத்துநர் பாடப் பிரிவில் 2008 – 2009ம் கல்வி ஆண்டுக்கு பயிற்சியில் அரசு விதிகளின்படி பயிற்சி மாணவ மாணவியர் சேர்க்கை நடைபெற்று பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

**க.து.ந.க.எண்.ஜ.டி.ஜ./057/2008**

கல்வி நிலைய பணியிடம் ஓர் தொடர் நிகழ்வு என்பதாலும் தொடர்ந்து மாணவ மாணவியர்களுக்கு கல்வி கற்பிக்க ஆசிரியர் பணியிடம் அவசியமாகின்றது மேலும் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் தொடர்ந்து சிறப்பான முறையில் இயங்க மேற்கண்ட பணியாளர்களின் பணியிடம் மிகவும் அவசியமாகிறது.

இந்நிலையில்

அ) மேற்கண்ட தொழிற் பயிற்சி நிலைய பணியாளர்களுக்கு அவர்களின் பதவியில், முதல்வர் மற்றும் பயிற்சி அலுவலர்க்கு 16.11.2007ல் இருந்தும், கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் பாடப் பிரிவு இளநிலை பயிற்சி அலுவலர் ஆகியோருக்கு 01.12..2007 ல் இருந்தும் ஏற்கனவே பணி நீடிப்பு செய்தது போல் மீண்டும் ஓராண்டிற்கும், குழாய் பொருத்துநர் பாடப் பிரிவு இளநிலை பயிற்சி அலுவலர்க்கு மேலும் ஓராண்டிற்கு ஏற்கனவே செய்த ஒப்பந்த முறையில் பணி நீடிப்பு செய்யவும்;

ஆ) மேற்படி தொழிற் பயிற்சி நிலைய பணியாளர்களுக்கு மாதாந்திர தொகுப்பூதிய செலவீனம் கல்வித்துறை தொழிற்பயிற்சி நிலையம் (24) 116 நிரந்தரமற்ற பணியாளர்கள் ஊதியம் என்ற தலைப்பின் கீழ் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கவும், மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு,

நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"10.11.08 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மானஎண். 84 /08நாள் 10.11.08 –ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்துநிலைக்குழு வரிவிதிப்பு (ம) (நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.. "

"19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.277 /08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

க.து.ந.க.எண்.டி1/086/2008
ஆணையாளர் அவர்களின் 17.09.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :643/2008 பொருள் எண்.43

**சமுதாயக் கல்லூரி பணியாளர்களின் பணி நீட்டிப்பு மற்றும் தொகுப்பூதியத்தை உயர்த்தி வழங்க அனுமதி வேண்டுதல்.**

சென்னை மாநகராட்சி, மாமன்றம் இயற்றிய தீர்மான எண்.115 நாள்.22.2.1999 அடிப்படையில் கல்வித்துறையின் கீழ் 4 சமுதாயக் கல்லூரிகள் ( பிப்ரவரி 1999 முதல் 2 கல்லூரிகளும், மார்ச்சு 1999 முதல் 1 கல்லூரியும், ஆகஸ்டு 1999 முதல் நான்காவது கல்லூரியும்) மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. இந்திய நாட்டில் ஒரு மாநகராட்சி சமுதாயக் கல்லூரிகளைத் தொடங்கி நடத்தி வருவது என்பது இதுவே முதல் முறையாகும்.

மேற்காண் கல்லூரிகளின் நிர்வாகப் பணிகளை திறம்பட செவ்வனே செய்வதற்கும், மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய நிர்வாகப் பணிகளையும் கூடுதலாக செய்திடவும், 1 இளநிலை உதவியாளர் (திருமதி. எம்.மகாலெட்சுமி) மற்றும் 1 கணிணி தட்டச்சாளர் ( திருமதி. ஆர். மகாலெட்சுமி) ஆகியோர் பிப்ரவரி 1999 முதலும், 1 அலுவலக உதவியாளர் (திரு. கே. சேகர்) ஆகஸ்டு 1999 முதல் அப்போதைய துணை ஆணையர் (கல்வி) அவர்களால் நேரடியாகவும், தற்காலிகமாகவும் தொகுப்பூதிய அடிப்படையில் பணியமர்த்தப்பட்டனர்.

இம்மூவரின் மாதந்திரத் தொகுப்பூதியம் மன்றத் தீர்மானம் எண் 363 நாள் 30.09.2002, மன்றத் தீர்மானம் எண் 85 நாள் 21.05.2004, மன்றத் தீர்மானம் எண் 34 நாள் 20.01.2005, மன்றத் தீர்மானஎண்.57 நாள்.2.2.2006 மற்றும் மன்றத் தீர்மான எண்.136 நாள் 25.4.2007 ன்படி மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து தொடர்ந்து வழங்கப்படுகின்றது. மன்றத்தீர்மானம் எண் 620 நாள் 28.11.2007ன்படி, திருமதி. எம். மகாலெட்சுமி ( இளநிலை உதவியாளர்) மற்றும் ஆர். மகாலெட்சுமி ( கணிப்பொறி/ தட்டச்சு இயக்குபவர்) மற்றும் திரு. கே. சேகர் (அலுவலக உதவியாளர்) ஆகிய மூவரும் 01.11.2007 முதல் ஓராண்டு பணி நீட்டிப்புடன், மாதாந்திரத் தொகுப்பூதியம் முறையே ரூ.4000/–, ரூ.4000/– மற்றும் ரூ.2100/–ம் பெற்று வருகின்றனர். இம்மூவரின் பணி காலம் 31.10.2008வுடன் முடிவடையும் நிலையில், பணியின் அவசியம் கருதி, மேலும் ஓராண்டுக்கு 01.11.2008 முதல் தொடர அனுமதி வேண்டப்படுகிறது.

இம்மூவரும் சென்னை மாநகராட்சி சமுதாயக் கல்லூரிகளில் தற்போது செயல்பட்டு வரும்,

*“ தேசிய திறந்த நிலைப்பள்ளியின் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சியின் பணிகள் NIOS ( National Institute of Open Schooling / Accredited Vocational Institute – 690039)“

*சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலை வாய்ப்புத் திட்டம் வழங்கும் தொழிற் பயிற்சிப் பணிகள் – (SJSRY - Vocational Training)

*குறுகிய கால தொழிற் பாடப் பிரிவுகளான பி.பி.ஓ (BPO) , கஸ்டமர் ரிலேஷன்ஸ் அன்டு சேல்ஸ் ( Customer Relations and Sales ) மற்றும் ஹாஸ்பிடாலிட்டி சர்வீஸ் (Hospitality Services ) போன்ற பயிற்சிகள் சமுதாயக் கல்லூரி(தெற்கு)யின் அலுவலக பணிகள்..

* குறுகிய கால தொழிற் பாடப் பிரிவுகளான பி.பி.ஓ (BPO)இன்பர்மேஷன் டெக்னாலஜி ஏனபுல்டு சர்வீஸ் (Information Technology Enabled Services (ITES) எலெட்ரிக்கல் டெக்னீசியன்(Electrical Technician) கட்டிங் அன்டு டெய்லரிங்(Cutting and Tailoring) போன்ற பயிற்சிகள் சமுதாயக் கல்லூரி(வடக்கு)இன் அலுவலக பணிகளையும் கூடுதலாகச் செய்கின்றனர்.

இக்கூடுதல் பணிப்பளு, 9 ஆண்டுகளுக்கு மேலான பணி அனுபவம் மற்றும் இன்றைய விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டும், தார்மீக அடிப்படையில் தொகுப்பூதியத்தை உயர்த்த வேண்டியும் , கீழ்க்கண்ட மூவருக்கும்,

(1) 01.11.2008 முதல் மேலும் ஓராண்டு பணி நீட்டிப்பு வழங்கவும்,

(2) பணிப்பளு, அனுபவம், தகுதி மற்றும் தற்போதைய விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இம்மூவரின் மாதந்திரத் தொகுப்பூதியத்தை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கவும்,

<u>க.து.ந.க.எண்.டி1/086/2008</u>

| வ.எண் | பணியாளர் பெயர் மற்றும் கல்வித்தகுதி | பதவி | தொகுப்பூதியம் | | இதர குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| | | | வழங்கப்படுவது | உயர்த்த வேண்டுவது | |
| 1 | திருமதி.எம்.மகாலெட்சுமி எம்.ஏ (ஆங்கிலம்), டி.சி.ஏ அரசு நடைமுறை நூல் தேர்ச்சி ( G.O.M) | இளநிலை உதவியாளர் | ரூ. 4000/– | ரூ.4250/– | மிகக் குறைந்த ஊதியம் – குடும்பச் செலவை ஓரளவு ஈடு செய்ய வேண்டியும் மேலும் தற்போதைய விலைவாசியை கருத்தில் கொண்டும் |
| 2 | திருமதி.ஆர்.மகாலெட்சுமி எம்.ஏ(பொருளாதாரம்) டிப்ளமோ இன் ஆபிஸ் ஆட்டோமேசன், தட்டச்சு ( தமிழ், ஆங்கிலம் ) – முதுநிலை, அரசு நடைமுறை நூல் தேர்ச்சி (GOM) | கணிப்பொறி/ தட்டச்சு இயக்குபவர் | ரூ.4000/– | ரூ.4250/– | |
| 3 | திரு. கே.சேகர் 8ஆம் வகுப்பு தேர்ச்சி | அலுவலக உதவியாளர் | ரூ.2100/– | ரூ.2250/– | |

(3) மாநகராட்சி வருவாய் நிதி – துறை – கல்வி – பிரிவு 25 – சமுதாயக் கல்லூரி – கணக்குக் குறியீடு எண் – 116 நிரந்தரமற்றப் பணியாளர் ஊதியம் என்றத் தலைப்பில் 2008– 2009 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ.1,50,000/– லிருந்து, தொடர்ந்து வழங்குவதற்கும்,

நிலைக்குழுக்கள் (கல்வி), மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் (நியமனக் குழு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"06.10.08 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மானஎண். 80/08 நாள் 06.10.08 ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் (நியமனக்குழு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.. "

"24.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.246/2008 , நாள்: 24.10.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

க.து./தொ.ப.நி/டி1/119/2007

ஆணையாளர் அவர்களின் 29.09.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :644/2008 பொருள் எண்.44

**தொகுப்பூதியத்திலிருந்து காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் முற்றிலும் சமுதாயத்தில் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்கள் பயன் பெறவேண்டி தொடங்கப்பட்ட ஒன்று. இவர்களிடம் இருந்து பெறப்படும் மிகக் குறைந்த கட்டணம் கொண்டு தொழிற் பயிற்சி நிலையம் நடத்துவது இயலாது. இந்நிலையில் இத்தொழிற் பயிற்சி நிலையம் இயங்கிட ஆகும் அனைத்து திட்டச் செலவுகளையும் மாநகராட்சி நிதியிலே மேற்கொள்ள கேட்டு ஆணையர் அவர்கள் மூலம் அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்திற்கு வழங்கப்பட்ட அரசாணை எண் 292 நாள் 06.08.2004ல் உள்ள 22 பதவிகளில் 6 பதவிகள் தொழில் நுட்பம் அல்லாத அமைச்சு பணியாளர்கள் ஆகும். இப்பதவிகளுக்கு சென்னை மாநகராட்சி பொதுத்துறையின் பணி விதிகள் கடைபிடிக்கவும், மீதம் உள்ள 16 தொழில்நுட்பம் சார்ந்த பதவிகளுக்கு அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் கடைபிடிக்கும் பணிவிதிகளை இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை, கிண்டி – 32 அவர்களிடம் இருந்து பெற்று பணிவிதிகள் வரைவு செய்ய ஆணையர் அவர்களின் ஆணை பெற்று மன்ற ஒப்புதல் மற்றும் அரசின் ஒப்புதல் பெற தனியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அது சமயத்தில் மேற்கண்ட இந்த மூன்று பணியாளர்களின் பணிவிதிகளும் சேர்த்துக் கொள்ளப்படும் என்று கருத்து தெரிவிக்கப்படுகிறது.

பணியாளர்களின் சேம நிதி மற்றும் ஓய்வூதியம் தொடர்பாக தற்பொழுது மாநகராட்சியில் பணியாற்றும் அலுவலர்கள்/ பணியாளர்களுக்கும் கடைபிடித்து வரும் விதிமுறைகளையே தொழிற் பயிற்சி நிலையத்தில் பணியாற்றும் அலுவலர்கள்/ பணியாளர்களுக்கும் விரிவு படுத்தலாம்..

எனவே,

1) தற்போது சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் பணிபுரிந்து வரும் திரு. எம். கோவிந்தராஜ் – முதல்வர், திரு. எஸ். சுதாகர் – பயிற்சி அலுவலர் – மற்றும் திரு. கே. ராஜாகுமார் – இளநிலை பயிற்சி அலுவலர்–பணியாளர்கள் பெற்று வரும் தொகுப்பூதியத்தில் இருந்து காலமுறை ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்குவதற்கும்,

2) பணியாளர்களின் சேம நிதி மற்றும் ஓய்வூதியம் தொடர்பாக தற்பொழுது மாநகராட்சியில் பணியாற்றும் அலுவலர்கள்/பணியாளர் களுக்கு கடை பிடித்து வரும் விதிமுறைகளையே தொழிற் பயிற்சி நிலையத்தில் பணியாற்றும் அலுவலர்கள்/ பணியாளர்களுக்கும் விரிவு படுத்தவும்,

3) தற்சமயம் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் பணியாற்றி வரும் அலுவலர்/பணியாளர்களுக்கு மாநகராட்சி நிரந்தர பணியாளர்களுக்கு வழங்கி வரும் ஊதிய கணக்கு தலைப்பிலேயே வழங்குவதற்கும்,

4) தனியர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பயனின்றி பணிக்காலமாக கணக்கிடுவதற்கும்,

5) அரசாணை எண். 292 நாள் .06.08.2004ல் கூறப்பட்டுள்ள அமைச்சு பணியாளர்களின் பதவிகளுக்கு தற்சமயம் சென்னை மாநகராட்சி அமுலில் உள்ள விதிகளை பின்பற்றவும் ,

6) அரசாணை எண்.292 நாள்.06.08.2004ல் கூறப்பட்டுள்ள தொழில்நுட்பம் சார்ந்த பதவிகளுக்கு அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் கடைபிடிக்கும் பணிவிதிகளை இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, கிண்டி – 32 அவர்களிடம் இருந்து பெற்று பணிவிதிகள் வரைவு செய்யவும்.

**க.து./தொ.ப.நி/டி1/119/2007**

**1** முதல் **6** வரை உள்ள இனங்களுக்கு மாமன்றத்தின் அனுமதி பெற்று அரசின் ஒப்புதல் பெற, மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு கல்வி மற்றும் நிலைக்குழு வரிவிதிப்பு மற்றும் நிதி மற்றும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"**06.10.08** அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மானஎண்.**82/08** நாள் **06.10.08** –ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் (நியமனக்குழு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.. "

**24.10.2008** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.**247/2008** , நாள்: 24.10.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.சி1/00354/2008
ஆணையாளர் அவர்களின் 17.11.2008 நாளிட்ட குறிப்பு

30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :645/2008 பொருள் எண்.45

மருத்துவ அலுவலர் பணி நியமனம் பொறுப்பேற்ற விவரம்

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் காலியாக இருந்த மருத்துவ அலுவலர் பணியிடங்களை பூர்த்தி செய்ய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெயர் பட்டியல் கோரப்பட்டு 15.2.2008 அன்று நேர்காணல் நடத்தப்பட்டது.

வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற பெயர் பட்டியலில் பின்வரும் நபர்களுக்கு 20.3.2008 தேதியிட்டு பணி நியமனத்திற்கான ஆணை வழங்கப்பட்டது.

| வ.எண் | வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பதிவு எண். | பெயர் மற்றும் விலாசம் | பிறந்த தேதி | இன சுழற்சி |
|---|---|---|---|---|
| 1 | 2002 F 06918<br>S.F<br>20.05.2002 | V. .ஸ்ரீ தேவி,<br>54/2 பீச் ரோடு,<br>கலாச் சேத்திரா காலனி<br>பெசன்ட் நகர்,<br>சென்னை – 90 | 26.12.1978<br>30Years | MBC<br>Non – Priority<br>(Women) |
| 2 | 2001 M 12435<br>SF<br>28.08.2001 | J. முகம்மது இஸ்மாயில்<br>7/26 F டைப் சிட்கோ நகர்<br>வில்லிவாக்கம்,<br>சென்னை – 49 | 08.12.1974<br>33Years | General Turn<br>N.P |

மன்றத் தீர்மான எண்.386/2008 நாள்.30.07.2008 ன்படி மேற்படி நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டது. V. .ஸ்ரீ தேவி என்பவருக்கு பணி நியமன ஆணை வழங்க தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரமும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பெறப்பட்ட பட்டியலின்படி மேற்படி நபரான டாக்டர்.V.ஸ்ரீதேவி, என்பவருக்கு வழங்கப்பட்ட பணி நியமன ஆணையை தொடர்ந்து இவர் 06.06.2008 தேதியில் பணியில் சேர்ந்துள்ளார். இவர் பணியில் சேர்ந்த விவரம் மன்றத்தின் தகவலுக்காகவும், அரசின் உறுதியாக்கம் பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.சு.ந.க.எண்.ஈ2/18130/08
ஆணையாளர் அவர்களின் 18.11.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :646/2008 பொருள் எண்.46

**உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு**

சென்னை மாநகராட்சி வருவாய்த்துறையில் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பணியிடம் 29 ஆகும். இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 15ந் தேதி. (15.05.2008).

2008–2009ம் ஆண்டு உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டில் 15.05.2008 என்ற மைய நாளாகக்கொண்டு தயாரிக்கப்படவேண்டியுள்ளது. சென்னை மாநகராட்சி 1970ம் ஆண்டு பொதுப் பணிவிதிகளின்படி உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான நியமன முறை மற்றும் தகுதிகள் பின்வருமாறு :

| | Class/ Category and Name of the post / Scale of pay | Method of Appointment | Qualification |
|---|---|---|---|
| 1. | **CLASS-II**<br>Asst. Revenue Officer<br>Rs.8000-275-13500 | (a) By promotion from the post of Assessor. | (i) A Graduate of a Recognised University.<br>(ii) Must be an approved probationer in the category of Superintendent of Taxes or must have served as Assessor for a period of not less than five years;<br>(iii) A pass in the Account Test for subordinate Officers Parts I and II or any other Accounts Test prescribed by the Government or equivalent thereto;<br>(iv) A pass in the Revenue Test Parts I and II prescribed for the Tamil Nadu Revenue Subordinate Service or any other Revenue Test prescribed by the Government or equivalent thereto. |
| | | (b) By appointment on deputation. | (i) A Graduate of a Recognised University; and<br>(ii) Must have served as Municipal Commissioner, Seecond Grade or Third Grade for a period of not less than five years. |

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் உதவி வருவாய் அலுவலர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 பிரிவு 85 (3) (பி)ன்படி இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு இப்பதவியினை நிரப்பும் அதிகாரம் ஆகியவற்றை மன்றம் பெற்றுள்ளது.

வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க ஊட்ட பதவியில் உள்ள வரிமதிப்பீட்டாளர்களின் பணிமூப்பு பட்டியல் பின்வருமாறு :–

**பொ.து.ந.க.எண்.ஈ2/18130/08**

| வ.எண். | வரிமதிப்பீட்டாளர்களின் பெயர் (திருவாளர்கள்) | வரிமதிப்பீட்டாளர் பதவியில் சேர்ந்த நாள் / ஓய்வு பெற்ற நாள் மற்றும் ஏனைய விவரம் |
|---|---|---|
| 1 | எஸ். ஏசையன் | 31.08.2007 வயது முதிர்வு ஓய்வு |
| 2 | ஜெ. முரளிதர் | 02.03.1998 தகுதி பெற்றுள்ளார் |
| 3 | ஐசக் மாசிலாமணி | 25.06.1998 தகுதி பெறவில்லை |
| 4 | ஆர். எத்திராஜிலு | 18.08.1999 தகுதி பெறவில்லை |
| 5 | ஜி. கங்கமுத்து | 30.06.2008 வயது முதிர்வு ஓய்வு |
| 6 | ஜே.ஜி. நரசிம்மன் | 09.08.2000 தகுதி பெறவில்லை |
| 7 | ஜி. கிருஷ்ணமூர்த்தி | 11.08.2000 தகுதி பெற்றுள்ளார் ஒழுங்கு நடவடிக்கை |
| 8 | எஸ். தண்டபாணி | 16.10.2000 தகுதி பெறவில்லை |
| 9 | கே. மதனகோபால் | 17.06.2002 தகுதி பெற்றுள்ளார் |
| 10 | கே. பெத்தபாத்துருடு | 30.06.2008 வயது முதிர்வு ஓய்வு |
| 11 | ஆர். பலராமன் | 31.05.2008 வயது முதிர்வு ஓய்வு |
| 12 | என். வரதராஜன் | 30.09.2008 வயது முதிர்வு ஓய்வு |
| 13 | ஈ. டில்லிபாபு | 30.09.2008 வயது முதிர்வு ஓய்வு ஒழுங்கு நடவடிக்கை |

(i) மேற்படி பட்டியலின்படி வ.எண்.2 மற்றும் 9லுள்ள நபர்கள் பணிவிதிகளின்படி அனைத்து தகுதிகள் பெற்றுள்ளதால் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம்.

(ii) வ.எண்.3,4,6,8 லுள்ள நபர்கள் அரசால் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாததால் இவர்களது பெயரினை தவிர்க்கலாம்.

(iii) வ.எண்.1,5,10,11,12,13லுள்ள நபர்கள் வயது முதிர்வு ஓய்வு பெற்றுள்ளதால் இவர்களது பெயரினை தவிர்க்கலாம். (வ.எண்.13லுள்ள நபர் மீது கடுங் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால், அவ்வொழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தககமின்றி வயது முதிர்வு ஓய்வில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளார்)

(iv) வ.எண்.7லுள்ள நபர், தகுதி பெற்றுள்ள போதிலும் இவர் மீது கடுங் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு துறை சம்பந்தமாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் விதிகளின்படி, இவர்களது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதிலிருந்து ஒத்திவைக்கலாம்.

எனவே, (அ) 2008–2009ம் ஆண்டுக்கு 15.05.2008ஐ மைய நாளாகக்கொண்டு உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு தயாரிக்கப்பட்டுள்ள பின்வரும் தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

| வ.எண். | வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி முழு தகுதி பூர்த்தி செய்துள்ள பணிமூப்பின்படி வரிமதிப்பீட்டாளர்களின் பெயர் (திருவாளர்கள்) |
|---|---|
| 1 | ஜெ. முரளிதர் |
| 2 | கே. மதனகோபால் |

(ஆ) 2008–2009ம் ஆண்டு ஏற்பட்டுள்ள உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடத்தினை மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள முழு தகுதி பூர்த்தி செய்துள்ள நபர்களைக்கொண்டு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு அளித்து ரூ.8000–275–13500 ( இதர படிகளுடன் ) என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணிநியமனம் செய்திடவும்,

(இ) மேற்படி பணிநியமனம் வழங்கப்பட்ட பின்பு அரசின் உறுதியாக்கம் பெற உரிய செயற்குறிப்புகள் அரசுக்கு அனுப்பவும்,

மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.ஈ1/34261/2008.
ஆணையாளர் அவர்களின் 18.11.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :647/2008 பொருள் எண்.47

**உதவி செயற்பொறியாளர் தெரிவுப் பட்டியல்**

சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப் பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியன மன்றம் பெற்றுள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜுன் மாதம் முதல் தேதி ஆகும். இப்பதவிக்கான ஊட்டப்பதவி உதவி/இளநிலை பொறியாளர் பதவியாகும்.

உதவி செயற்பொறியாளர் பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| Assistant Executive Engineer (other than Assistant Divisional Engineer (Electrical)<br>ரூ.8000=275=13500 | By promotion from the categories of Junior Engineers and Assistant Engineers, Head Draftsman and Surveyors in the Corporation Engineering Subordinate Services;<br>(G.O. Ms. No.296, M.A. & W.S., dated 12.03.1990) in the ratio of 3 : 1 between the Degree holders and the Diploma holders ; of<br>(G.O. Ms. No.138, M.A. & W.S., dated 09.02.1990) | (i) (a) B.E. Degree (Civil or Mechanical) of any University or Institution recognized by the University grants Commission for purposes of its grant or any other qualification considered equivalent thereto;<br>(b) Must have served as Assistant Engineer in the Corporation Engineering Subordinate Service, Municipal Engineer, Grade II, Junior Engineer or Supervisor (Public Health) for a period of not less than five years on duty:<br>Provided that a person who acquires an engineering degree or its equivalent during his service as Junior Engineer in the Corporation Engineering Subordinate Service will be eligible for appointment as Assistant Executive Engineer if he has put in three years of service in the Corporation Engineering Subordinate Service after getting the Engineering degree or its equivalent. The person so acquiring the Engineering degree or its equivalent will be placed immediately below the person holding the post of Assistant Engineer on the date of acquiring the above qualification; or<br>(G.O. Ms. No. 138, MA and WS, dt. 9-2-1990.)<br>(c) Municipal Engineer Grade II or Assistant Engineer (Public Health) or<br>(d) Diploma in Civil or Mechanical Engineering of the State Board of Technical Education and Training or any other qualifications considered equivalent thereto:<br>Provided that Draftsman, Overseers and Surveyors of the Corporation Engineering Subordinate Service promoted as Junior Engineer in the same service; Head Surveyors and Head Draftsman of the Corporation Engineering Subordinate Service Municipal Engineer Grade-III or Supervisor (Public Health) Possessing the qualifications referred to in item (d) above shall be eligible for appointment as Asst. Exe. Engrs. Only if they have put in a total service of not less than 10 years in one or more categories or as Municipal Engineer Grade III or as Supervisor (Public Health) and<br>(G.O. Ms. No. 907 RD and LA dt. 20-5-1981.)<br>(ii) A pass in the Account Test for Public Works Department Officers and Subordinates. |

கடந்த ஆண்டு 2007–2008 ஆம் ஆண்டிற்கான உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வுக்கான காலிபணியிடங்கள் இல்லாத காரணத்தால் 01.06.2007 ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய தெரிவுப்பட்டியல் இன்மை பட்டியலாக வெளியிடப்பட்டது.

**பொ.து.ந.க.எண்.ஈ1/34261/2008.**

நடப்பு பட்டியல் ஆண்டான 01.06.2008 முதல் 31.05.2009 வரையில் உதவி செயற் பொறியாளர் பதவியில், பணியிடமாற்றம் பதவி உயர்வு மற்றும் ஓய்வு காரணமாக மொத்தம் உத்தேசமாக கீழ்கண்டவாறு 14 காலிப்பணிடங்கள் எழ வாய்ப்பு உள்ளது.

| விவரம் | எண்ணிக்கை |
|---|---|
| உதவி செயற் பொறியாளர் பதவியில் காலிப்பணியிடங்கள் | 4 |
| வயது முதிர்வு காரணமாக ஒய்வு பெறுபவர்கள் | 2 |
| செயற் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றதால | 8 |
| மொத்தம் | 14 |

3:1 என்ற விகிதாச்சார முறையின்படி, கடந்த மூப்பப்பட்டியலில் பட்டயம் பெற்ற இளநிலை பொறியாளருடன் தெரிவுப் பட்டியல் முடிவடைந்துள்ளதால், இந்த பட்டியல் ஆண்டில் 01.06.2008 மைய நாளில் தெரிவுப் பட்டியல் மூன்று பட்டம் பெற்ற உதவி பொறியாளர் என்ற நிலையில் தெரிவுப்பட்டியல் துவக்கப்பட்டு, பணிமூப்பு மற்றும் விகிதாச்சார அடிப்படையில் பின்வருமாறு அமைகிறது.

| தகுதி வாய்ந்த பட்டம் பெற்ற உதவி பொறியாளர்கள் | தகுதி வாய்ந்த பட்டயம் பெற்ற இளநிலை பொறியாளர்கள் |
|---|---|
| 1. ஆர். முரளி, வார்டு எண்.141,<br>2. கே. சுந்தரேசன், வார்டு எண்.90<br>3. சி. லாரன்ஸ், வார்டு எண்.154<br>4. எ. குமார், வார்டு எண்.100<br>5. பி.எஸ். சீனிவாசன், வார்டு எண்.23<br>6. காமராஜ், பேருந்து சாலை துறை<br>7. பிரதீப் குமார், மண்டலம்–7<br>8. ஜெ. ஜெயகாந்த், கட்டிடத்துறை<br>9. சகுபார் உசேன், கட்டிடத்துறை<br>10. கே. சுந்தரராஜன், மண்டலம்–3<br>11. சுபாஷ், மண்டலம்–5<br>12. சாந்தி.வி, மண்டலம்–2<br>13. அம்பா சங்கர், மண்டலம்–10<br>14. டி.கே. கணேசன், பாலங்கள் துறை | 1. எஸ். ஜெயக்குமார், வார்டு எண்.152,<br>2. சி. ரகுபதி<br>3. கே. தங்கவேலு, பேருந்து சாலை துறை<br>4. ஹரிபாபு, மண்டலம்–7<br>5. டி. தியாகராஜன், பேருந்து சாலை துறை |

மேற்படி பட்டம் பெற்ற உதவி பொறியாளர் பட்டியலில் வரிசை எண்.3ல் உள்ள உதவி பொறியாளர் திரு. சி. லாரன்ஸ், வரிசை எண்.4ல் உள்ள உதவி பொறியாளர் திரு.ஏ. குமார், ஆகிய இருவர் மீதும் மற்றும் பட்டயம் பெற்ற இளநிலை பொறியாளர் பட்டியலில் வரிசை எண்.2ல் உள்ள திரு.சி. ரகுபதி, இளநிலை பொறியாளர் மற்றும் வரிசை எண்.3ல் உள்ள திரு.கே. தங்கவேலு, இளநிலை பொறியாளர் ஆகியோர் மீது, கட்டடங்கள் கட்டப்பட்ட நிகழ்வில் தனியர்கள் மீது துறைசார்ந்த நடவடிக்கையினை மேற்கொள்ள ஆணையிடப்பட்டு விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு விசாரணை நடைப்பெற்று வருகிறது.

எனவே இவர்களது பெயர்களை தெரிவுப்பட்டியலிருந்து நீக்கலாம். மேலும் பட்டம் பெற்ற பட்டியலில் வரிசை எண். 13ல் உள்ள திரு.அம்பாசங்கள், உதவி பொறியாளர் அவர்கள் மூன்றாண்டுகாலம் சம்பளமில்லா விடுப்பு (14.06.2006 முதல் 13.06.2009 வரை) எடுத்து வெளிநாட்டில் வேலைவாய்ப்பிற்கு சென்றுள்ளார். எனவே இவரது பெயரையும் இந்த தெரிவுப்பட்டியலிருந்து ஒத்திவைக்கலாம்.

எனவே, 1.06.2008ஐ மைய நாளாகக் கொண்டு 3:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் தயாரிக்கப்படும் உதவி செயற் பொறியாளர் பதவிக்கான தெரிவிப்பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| வரிசை எண். | உதவி/இளநிலை பொறியாளரின் பெயர் திருவாளர்கள் | துறை/மண்டலம் | பட்டம்/பட்டயம் |
|---|---|---|---|
| 1 | ஆர். முரளி, வார்டு எண்.141, | மண்டலம்=9 | பட்டம் |
| 2 | கே. சுந்தரேசன், வார்டு எண்.90 | மண்டலம்=6 | பட்டம் |
| 3 | பி.எஸ். சீனிவாசன், வார்டு எண்.23 | மண்டலம்=2 | பட்டம் |
| 4 | எஸ். ஜெயக்குமார், வார்டு எண்.152 | மண்டலம்=10 | பட்டயம் |
| 5 | காமராஜ் | பேருந்து சாலை துறை | பட்டம் |
| 6 | பிரதீப் குமார் | மண்டலம்–7 | பட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 7 | ஜெ. ஜெயகாந்த் | கட்டிடத்துறை | பட்டம் |
| 8 | ஹரிபாபு | மண்டலம்–7 | பட்டயம் |
| 9 | சகுபார் உசேன் | கட்டிடத் துறை | பட்டம் |
| 10 | கே. சுந்தரராஜன் | மண்டலம்–3 | பட்டம் |
| 11 | சுபாஷ் | மண்டலம்–5 | பட்டம் |
| 12 | டி. தியாகராஜன் | பேருந்து சாலை துறை | பட்டயம் |
| 13 | சாந்தி | மண்டலம்–2 | பட்டம் |
| 14 | டிகே. கணேசன் | பாலங்கள் துறை | பட்டம் |

மேற்படி பட்டியலில் உள்ள உதவி பொறியாளர்/இளநிலை பொறியாளர் அனைவரும் உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வுக்கு அனைத்து கல்வி மற்றும் பணி தகுதிகளும் பெற்றுள்ளபடியால் இவர்களுக்கு உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கலாம்.

அ) உதவி செயற்பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களிலும், தெரிவுப்பட்டியல் காலாவதியாகும் ஓராண்டு காலம் வரை (The Panel shall be valid for a period of one year from the date of approval by the competent authority), வயது முதிர்வு மற்றும் பதவி உயர்வு போன்ற பல்வேறு காரணங்களில் உதவி செயற்பொறியாளர் பதவியில் ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களில், தெரிவுப்பட்டியலில் உள்ள தகுதியானவர்களுக்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.8000–275–13500 என்ற கால முறை ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளித்திடவும்,

ஆ) உதவி செயற்பொறியாளர் பதவியில் பணிமூப்பு நிர்ணயம் செய்வது குறித்து நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பு பெற்ற பின்னர், தீர்ப்பின் அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் பதவிஉயர்வில் பணிஉறுதியாக்கம் செய்வது குறித்து அரசுக்கு தக்க பிரேரணையினை அனுப்பவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதனை மன்றம் தள்ளி வைக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/722/2008**

**ஆணையர் அவர்களின் 14.11.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :648/2008 பொருள் எண்.48

**பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைப்பதற்கு பதிலாக அதே சந்திப்பில் செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு தீர்ப்பாளர் (Adjudication) வழங்கிய தீர்ப்புக்கு மன்றத்தின் அனுமதி கோரல்**

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த கீழ்கண்ட நான்கு சந்திப்புகளில் மேம்பாலங்கள் அமைக்க திட்டமிடப்பட்டது.

(1) வடக்கு உஸ்மான் சாலை மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர்.சாலை (கோடம்பாக்கம் நெடுஞ்சாலை) சந்திப்பு, கோட்டம் 107, மண்டலம் 7 மற்றம் கோட்டம் 119, மண்டலம் 8.
(2) உஸ்மான் சாலை மற்றும் துரைசாமி சாலை சந்திப்பு, கோட்டம் 126 மற்றும் கோட்டம் 127, மண்டலம் 8.
(3) கோபதி நாராயணா சாலை மற்றும் திருமலை சாலை சந்திப்பு, கோட்டம் 108, மண்டலம் 7 மற்றும் கோட்டம் 128, மண்டலம் 8.
(4) பசும்பொன் முத்துரமலிங்கம் சாலை (சேமியர்ஸ் சாலை) மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பு, கோட்டம் 116, மண்டலம் 8.

2006ம் ஆண்டில் DEPC (Turnkey) முறையில் ஒப்பங்கள் கோரப்பட்டு, திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட், மும்பை ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 02.01.2007 நாளிட்ட கடிதம் மூலம் பணி ஆணை மொத்த ஒப்பத்தொகை ரூ.40.81 கோடிக்கு வழங்கப்பட்டு, பணி 20.02.2007 அன்று துவங்கப்பட்டது. முதலாவதாக வடக்கு உஸ்மான் சாலை மற்றும் எம்.ஜி.ஆர். சாலை (கோடம்பாக்கம் நெடுஞ்சாலை) சந்திப்பில் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு 30.03.2008 அன்று போக்குவரத்திற்கு திறந்துவிடப்பட்டது அடுத்து உஸ்மான் சாலை மற்றும் துரைசாமி சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு 14.08.2008 அன்று போக்குவரத்திற்கு திறந்துவிடப்பட்டது.

மூன்றாவது மேம்பாலப்பணியான கோபதி நாராயண சாலை மற்றும் திருமலை சாலை சந்திப்பில் நடைபெற்று வரும் மேம்பாலப்பணி டிசம்பர் 2008ல் முடிவடைய உள்ளது. நான்காவது மேம்பாலப்பணி துவங்கப்பட வேண்டும். அனைத்து பணிகளும் 19.05.2008 அன்று முடிவடைய வேண்டும். ஒப்பந்ததாரர் தனது 15.02.2008 நாளிட்ட கடிதம் மூலம் 19.03.2009 வரை ஒப்பக்கால நீட்டிப்பு கேட்டுக் கொண்டதையடுத்து 30.11.2008 வரை ஒப்பக்கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

நான்காவது மேம்பாலப்பணியான பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை (சேமியர்ஸ் சாலை) மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் மேம்பாலம் தொடங்குமுன், இச்சந்திப்பின் அருகே அமைந்துள்ள பைகிராப்ட்ஸ் நகர் நலச்சங்கம், ஸ்ரீ பால வினாயகர் பக்தர்கள் சங்கம் மற்றும் டர்ன்புல்ஸ் சாலை அடுக்குமாடி சொந்தக்காரர்கள் நலச்சங்கம் ஆகியோர் பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கப்பட்டால் உண்டாகும் பயனை விட முத்துராமலிங்கம் சாலையின் குறுக்கே செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை மேம்பாலம் அமைக்கப்பட்டால் பெருமளவு பயனளிக்கும் என்று தங்களது கடிதங்கள் மூலம் கருத்து தெரிவித்திருந்தனர்.

பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கும் திட்டமானது சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக எடுக்கப்பட்ட வாகனப்போக்குவரத்து ஆய்வுகளின் அடிப்படையில் அமைந்த திட்டமாகும். 1998ம் ஆண்டில் எல் அண்ட் டி ராம்போல் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் அளித்த வாகனப் போக்குவரத்து ஆய்வறிக்கையில், செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை பாலம் அமைக்கும் திட்டத்தையே முதல் பரிந்துரையாக அளித்துள்ளனர். எனினும், இத்திட்டத்தை செயல்படுத்த நிலம் கையகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும் என தெரிவித்தது. அச்சமயம் கலந்தறிதற்குரியவர்க்கு கொடுக்கப்பட்ட முக்கிய குறிப்பானது நிலம் கையகப்படுத்துதலை தவிர்க்க வேண்டுமென்பதால், கலந்தறிதற்குரியவர்கள் இரண்டாவது பரிந்துரையாக பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கும் திட்டத்தை அளித்தது. எனினும், இச்சந்திப்பில் மேம்பாலம் கட்ட 2006ம் ஆண்டில் தான் முடிவு செய்யப்பட்டது. எனவே, நலச்சங்கங்களின் கோரிக்கை குறித்து அண்ணா பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து பொறியியல் துறை மற்றும் கூடுதல் ஆணையர், காவல் (போக்குவரத்து) துறை ஆகியோரிடம் கருத்துரு கோரப்பட்டது.

அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் கூடுதல் ஆணையர், காவல் (போக்குவரத்து) துறை ஆகியோர் ஆய்வுகள் மேற்கொண்டு பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை குறுக்கே செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலையின் வழியாக மேம்பாலம் அமைக்கப்படுவதே இச்சந்திப்பில் போக்குவரத்து நெரிசலை குறைக்க ஏதுவாக இருக்கும் என ஆய்வறிக்கைகள் சமர்ப்பித்தனர்.

பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைப்பதற்கு பதிலாக பாலத்தின் ஒழுங்கினை மட்டுமே மாற்றி அதே சந்திப்பில் செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை மேம்பாலம் அமைப்பதற்கும் மற்றும் திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அவர்கள் மூலமாகவே முன்னரே அளித்த விலைவிகிதத்தின்படி (Pro-rata basis) மேற்கொள்வதற்கும் ஒப்பக்குமத்தின் பரிந்துரை பெற்று மன்றத்தின் தீர்மான எண்.646/2007, நாள்.29.12.2007 மூலம் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. இதன் அடிப்படையில் திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அவர்களுக்கு செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை மேம்பாலம் அமைக்கும் பணியை மேற்கொள்ள 31.12.2007 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மேலும், மாற்று பால ஒழுங்கிற்கு (Alignment) அரசாணை நிலை எண்.165, நாள்.04.09.2008 மூலம் அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அவர்கள் இப்பணியை மேற்கொள்ள தேவையான திருத்திய பால ஒழுங்கு வரைபடத்தினை தயாரித்து 17.01.2008 அன்று இசைவு கோரி கடிதம் அளித்தனர். அதன் அடிப்படையில் திருத்திய பால ஒழுங்கிற்கு ஒப்புதல் 11.02.2008 நாளிட்ட கடிதம் மூலம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அவர்கள் 16.02.2008 நாளிட்ட கடிதத்தில், மாற்று பால ஒழுங்கின காரணமாக இப்பணியைப் புதிய பணியாக கருத வேண்டும் என்றும் ஒப்ப காலத்தின் பின்னரே இப்பணி மேற்கொள்ள வேண்டியிருப்பதால் பழைய விலைகளில் இப்பணியை மேற்கொள்ள இயலாது என்றும், ஒப்ப விதி 85.2ன்படி (clause 85.2 of General Condition of Contract) புதிய பணிக்கு திருத்திய விலைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறி, திருத்திய கட்டுமானத் தொகையாக ரூ.9.40 கோடி கோரினர். 03.03.2008 நாளிட்ட இவ்வலுவலகக் கடிதம் மூலம் இப்பணி ஏற்கனவே திட்டமிட்ட அதே சந்திப்பில் பால ஒழுங்கு மட்டுமே மாற்றம் செய்யப்பட்டதால் இப்பணியை புதிய பணியாக கருத இயலாது எனவும், ஒப்ப விதி 85.1ன்படி (clause 85.1 of General Condition of Contract) இப்பணியை மாற்றங்களுடன் (variation) கூடிய பழைய பணியாகவே கருத வேண்டும் என்றும் எனவே அவர்கள் ஏற்கனவே அளித்துள்ள விலைகளின்படி இப்பணியை சுமார் ரூ.7.00 கோடி தொகைக்கு மேற்கொள்ள வேண்டும் என்றும் ஒப்பந்ததாருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதற்கு ஒப்பந்ததாரர் 10.03.2008 நாளிட்ட கடிதம் மூலம் மறுப்பு தெரிவித்து மேலும் இம்மேம்பாலப் பணியிடத்தினை 31.03.2008ற்கு முன்னர் வழங்கப்பட்டால் மட்டுமே பணியினை ரூ.9.40 கோடிக்கு மேற்கொள்ள இயலும் எனவும் தெரிவித்தனர். மேலும் இதே கருத்தினை வலியுறுத்தி 17.03.2008 நாளிட்ட கடிதம் அளித்துள்ளனர்.

23.06.2008 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் ஒப்பந்ததாரரின் திருத்திய கட்டுமானத்தொகையான ரூ.9.40 கோடி ஏற்க இயலாது என தெரிவிக்கப்பட்டது. இக்கருத்தினை ஒப்பந்ததாரர் ஏற்க இயலாத காரணத்தினால் ஒப்ப விதி 24.1ன்படி (clause 24.1 of General Condition of Contract) நியாய விசாரணைக்கு (adjudication) சென்றனர். ஒப்ப ஆவணத்தில் நியாய விசாரணை தீர்ப்பாளராக திரு.ஆர்.நாடிமுத்து அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் திரு.ஆர்.நாடிமுத்து அவர்கள் ஏற்கெனவே உள்ள வேலைப்பளுவின் காரணமாக தீர்ப்பாளர் பணியினை மேற்கொள்ள இயலாது என தெரிவித்தார். எனவே புதிய தீர்ப்பாளராக திரு.பி.கே.தானுபிள்ளை, B.Sc.(Engg) MIRC., MIE, தலைமை பொறியாளர் (ஓய்வு), நெடுஞ்சாலைத்துறை அவர்கள் நியமனம் செய்யப்பட்டார்.

தீர்ப்பாளர் அவர்கள், சென்னை மாநகராட்சி அலுவலர்களிடமும் மற்றும் திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அலுவலர்களிடமும் 20.08.2008, 05.09.2008 மற்றும் 26.09.2008 ஆகிய நாட்களில் விசாரணை நடத்தினார். இவ்விசாரணையின்போது இத்திட்டம் புதிய திட்டம் இல்லை என்றும் ஏற்கனவேயுள்ள ஒப்பத்தில் இடம்பெற்றுள்ள பணி என்றும் பால ஒழுங்கு மட்டுமே மாறுபடுகிறது என்றும் இதனால் ஒப்ப விதி 85.1ன்படி (clause 85.1 of General Condition of Contract) ஏற்கனவே ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள விலை இதற்கு பொருந்தும் என்றும் சென்னை மாநகராட்சியின் தரப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டது. மேலும் பணியிடத்தில் சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்களை அகற்றும் பணி நடைபெற்று வருவதால் மாற்று பால ஒழுங்கு பணியிடம் ஒப்பந்ததாரருக்கு வழங்க இயலவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஒப்பந்ததாரர் தரப்பில், ஒப்ப விதி 85.1ன்படி (clause 85.1 of General Condition of Contract) குறிப்பிட்டுள்ள மாறுபாடுகள் (variations) ஏற்கனவேயுள்ள பால ஒழுங்கிற்கு மட்டுமே பொருந்தும் என்றும் பால ஒழுங்கு மாறுபடுவதால் இதை புதிய பணியாகவே கருத வேண்டும் என்றும், மேலும் பணியிடம் இதுவரை வழங்கப்படாததால் ஏற்கனவேயுள்ள ஒப்ப உடன்படிக்கை செல்லத்தக்கதல்ல என்பதால் புதிய விலைகள் கோருவதற்கு தாங்கள் தகுதி பெற்றவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், இப்பணியினை மேற்கொள்ள ஒப்பந்ததாரர் மூன்று தேர்வுரிமைகளை (Options) 20.08.2008 அன்று நடைபெற்ற விசாரணையின்போது தெரிவித்தனர். அவைகள்

(1) பிப்ரவரி 2008ல் தாங்கள் அளித்த கட்டுமானத் தொகையான ரூ.9.40 கோடியுடன் பிப்ரவரி 2008ஐ அடிப்படையாகக் கொண்டு விலையேற்றத்தையும் ஈடு செய்து (escalation) சேர்த்து வழங்குவது.

அல்லது

(2) நான்கு மேம்பாலங்களுக்கும் ஒப்பத்தில் அளித்துள்ள விலைகளுடன் சேர்த்து ஒப்ப தேதியான 19.05.2008 தேதிக்குப் பின்னர் வழங்கப்படும் அனைத்து அளவுகளுக்கான பட்டிகளில் (quantities billed), ஒப்பம் சமர்ப்பிக்கப்பட்ட நாளினை அடிப்படையாகக் கொண்டு விலையேற்றத்தையும் ஈடு செய்து (escalation) சேர்த்து வழங்குவது,

அல்லது

(3) ஒப்ப உடன்படிக்கையிலிருந்து பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை (சேமியர்ஸ் சாலை) மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் மேம்பாலப்பணியினை நீக்கி ஏனைய பணிகளுக்கு ஒப்பத்தின்படி கணக்கினை சரிபார்த்து வழங்குவது.

**16.09.2008** நாளிட்ட கடிதம் மூலம் திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அலுவலர்கள் தங்களுக்கு சம்மந்தமில்லாத கழிவுநீர், குடிநீர் குழாய்களை மாற்றியமைப்பதில் தாமதம், போக்குவரத்து காவல் துறையினர் அனுமதி அளிப்பதில் ஏற்பட்ட தாமதம் போன்ற காரணங்களுக்காக உஸ்மான் சாலை மற்றும் துரைசாமி சாலை சந்திப்பில் மேம்பாலப்பணி **212** நாட்கள் காலதாமதமாக நடைபெற்றது என்றும்மேலும் கோபதி நாராயணா சாலை மற்றும் திருமலை சாலை சந்திப்பில் மேம்பாலப்பணி **350** நாட்கள் காலதாமதமாக நடைபெற்றது என்றும் தீர்ப்பாளரிடம் தெரிவித்தனர்.

**25.09.2008** நாளிட்ட கடிதம் மூலம் சென்னை மாநகராட்சி தரப்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டது. இக்கடிதத்தில் மேம்பாலப்பணி காலதாமதத்திற்கான காரணங்கள் ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த வடிவமைப்புகளை சரிபார்த்து தரும் அரசு கல்வி நிறுவனத்தினிடமிருந்து சரிபார்த்த வடிவமைப்புகளைப் பெற வடிவமைப்பினை சரிபார்த்து சமர்ப்பிக்கப்பட்டதில் ஒப்பந்தாரரால் ஏற்பட்ட காலதாமதம் மற்றும் போக்குவரத்தினை மாற்று வழியில் செல்ல ஏற்பட்ட காலதாமதம் ஆகும். இவ்விரு காலதாமதங்களும் சென்னை மாநகராட்சியினால் ஏற்படுத்தப்பட்ட காலதாமதங்கள் அல்ல என்றும் மேலும் விழா காலங்களில் ஏற்பட்டதாக ஒப்பந்ததாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்கதக்கதல்ல என்றும் எனவே உஸ்மான் சாலை மற்றும் துரைசாமி சாலை சந்திப்பில் மேம்பாலப்பணி மற்றும் கோபதி நாராயண சாலை மற்றும் திருமலை சாலை சந்திப்பில் மேம்பாலப்பணிகளில் காலதாமதத்தினால் விலையேற்றத்தை ஈடு செய்து (escalation) அளிக்க இயலாது என்றும் அதற்கான வழிமுறைகள் ஒப்ப விதிகளில் குறிப்பிட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

தீர்ப்பாளர் தனது **07.10.2008** தேதியிட்ட செயல்முறை ஆணையில், இரு தரப்பினராலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும் கடிதங்களையும் விரிவாக ஆராய்ந்து தான் கண்டறிந்தவற்றை விரிவாக ஆராய்ந்து தான் கண்டறிந்தவற்றை வரிசைபடுத்தியுள்ளார்.

(1) திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அவர்கள் செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை மேம்பாலப் பணிக்கு கோரியுள்ள திருத்திய விலைகளும் மற்றும் பிற பாலப்பணிகளில் கோரியுள்ள விலையேற்ற தொகையும் ஈடு செய்து (escalation), பணிகளை முடிக்க ஏற்பட்டுள்ள காலதாமதமே முக்கிய காரணமாகும். எனவே இவ்வழக்கில் முடிவு செய்ய வேண்டியது காலதாமதத்திற்கான காரணங்கள் ஒப்பந்ததாரரால் ஏற்பட்டதா இல்லையா என்பதே ஆகும்.

(2) மாற்று ஒழுங்கில் அமையவுள்ள செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை மேம்பாலப்பணிக்கான பணியிடத்தை இன்றைய தேதியிலும் ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்காததால் பாலப்பணி தொடங்குவதில் ஏற்பபட்ட காலதாமதத்திற்கு ஒப்பந்ததாரர் காரணமல்ல.

(3) ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த வடிவமைப்புகளை சரிபார்ப்பதில் ஏற்பட்ட காலதாமத்திற்கு ஒப்பந்ததாரர் பொறுப்பல்ல.

(4) கழிவுநீர் குழாய்களை மாற்றியமைப்பதில் ஏற்பபட்ட தாமதம், போக்குவரத்து காவல் துறையினர் வாகன போக்குவரத்தில் மாற்றம் செய்வதில் ஏற்பபட்ட தாமதம், பணியிடத்திற்கான தடுப்புகளை அமைக்க போக்குவரத்து காவல் துறையினர் அனுமதி அளிப்பதில் ஏற்பபட்ட தாமதம் ஆகியவற்றிற்கும் ஒப்பந்ததாரர் பொறுப்பல்ல.

(5) சென்னை மாநகராட்சி தரப்பில் குறிப்பிடப்பட்ட ஒப்ப விதி **85.1**ன்படி (clause 85.1 of General Condition of Contract), இனங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கான தொகை வழங்குவதாகும். ஆனால் ஒப்பந்தாரர் கோரியுள்ள திருத்திய விலைகளுக்கான காரணங்கள் பணியிடத்தை ஒப்படைக்காதலும் மற்றும் முற்றிலும் வேறு பால ஒழுங்கு மாற்றமுமே ஆகும்.

(6) சென்னை மாநகராட்சி தரப்பில் குறிப்பிடப்பட்ட ஒப்ப விதி **64.5**ன்படி (clause 64.5 of General Condition of Contract) ஒப்பந்ததாரரின் தவறால் ஏற்படும் காலாதாமதத்திற்கு ஒப்ப கால நீட்டிப்பு வழங்கப்படும் ஆனால் அந்த நீட்டிப்பு காலத்திற்கு விலையேற்ற தொகையை ஈடு செய்தோ (escalation) அல்லது வேறு வகையான ஈடு செய்தல் தொகையோ கொடுக்க இயலாது என்பதாகும். ஆனால் இந்த வழக்கில் ஏற்பபட்ட காலதாமதம் ஒப்பந்ததாரரால் ஏற்பட்டதல்ல.

(7) சென்னை மாநகராட்சி தரப்பில் குறிப்பிடப்பட்ட ஒப்ப விதி **54.7**ன்படி (clause 54.7 of General Condition of Contract) மரங்கள் அகற்றுவதிலும், பூமிக்குக் கீழும் மேலும் உள்ள சேவைத்துறையினரின் கம்பிவடங்கள் மற்றும் குழாய்களை மாற்றியமைப்பதிலும் ஏற்படும் காலதாமத்திற்கு ஒப்பந்ததாரர் எவ்விதமான உரிமையும் கோர இயலாது ஆனால் அக்காலதாமதத்திற்கு கால நீட்டிப்பு வழங்கப்படும் என்பதாகும். ஆனால் இவ்வொப்ப விதி ஒரு சிறிய கால தாமதத்திற்கே பொருந்துமேயன்றி அதிக அளவான காலதாமதத்திற்கு பொருந்தது. இவ்வழக்கில் அதிக அளவில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

(8) சென்னை மாநகராட்சி தரப்பில் குறிப்பிடப்பட்ட ஒப்ப விதி **64.4**ன்படி (clause 64.4 of General Condition of Contract) ஒப்பந்ததாரரின் வேண்டுகோளுக்கிணங்க சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரருக்கு நியாயமான ஒப்ப கால நீட்டிப்பை வழங்கலாம் என்பதாகும். இவ்விதியில் கூடுதல் தொகை வழங்க வேண்டும் என்றில்லை. ஆனால் ஒப்பந்ததாரர் தன்னுடைய தவறால் ஏற்படாத காலதாமதத்திற்கு ஒப்ப கால நீட்டிப்புடன் கூடுதல் தொகையும் கோரலாம். இந்தக் கோரிக்கையை ஒப்ப விதி **64.4**ன்படி (clause 64.4 of General Condition of Contract) கட்டுப்படுத்தாது.

(9) சென்னை மாநகராட்சி தரப்பில் குறிப்பிடப்பட்ட ஒப்ப விதி **54.6**ன்படி (clause 54.6 of General Condition of Contract) தற்காலிக மாற்று பாதைகளை அமைப்பதற்கும் வாகன போக்குவரத்தை சீர்படுத்த நியமிக்கப்படும் ஆட்களுக்கும் உண்டாகும் செலவினை ஒப்பந்ததாரரே ஏற்க வேண்டும் என்பதாகும். இவ்விதியில் குறிப்பிட்டுள்ளபடி இப்பணிகளுக்கான செலவினம் ஒப்பந்தாரரே ஏற்க வேண்டும் என்றும் மற்ற துறையினரிடமிருந்து பெறப்படும் அனுமதிக்கும் இட வசதிக்கும் ஒப்பந்ததாரர் பொறுப்பாகமாட்டார்.

எனவே இப்பணியை முடிக்க ஏற்பபட்டுள்ள காலதாமதத்திற்கு ஒப்பந்ததாரரை பொறுப்பாக்க இயலாது.

தீர்ப்பாளரின் முடிவு (Decision) :–

(1) செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் புதிய பால ஒழுங்கில் மேம்பாலம் அமையுமிடம் இது நாள் வரை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படாததாலும் இப்பணி புதிய பணி என்பதாலும் திருத்திய விலை கோருவதற்கு ஒப்பந்தாரருக்கு தகுதியுள்ளது.

(2) பணி காலதாமதத்திற்கு ஒப்பந்ததாரர் காரணமில்லை என்பதாலும், ஒப்பக் கால அவகாச நீட்டிப்பு ஒப்பந்ததாரரின் தவறினால் ஏற்படவில்லை என்பதாலும், 19.05.2008 தேதிக்கு பிறகு வழங்கப்படும் அனைத்து அளவுகளுக்கானபட்டிகளுக்கும் (Quantities Billed) சந்தை விலையேற்றம் கோருவதற்கு ஒப்பந்ததாரருக்கு தகுதியுள்ளது.

தீர்ப்பாளரின் பரிந்துரை (Suggestion) :–

திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் இப்பணியை மேற்கொள்ள அளித்த இரண்டாவது தேர்வுரிமையின்படி செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் அமையும் மேம்பாலப்பணி உட்பட்ட 19.05.2008க்கு பிறகு தயாரிக்கப்படும் அனைத்து அளவுகளுக்கான பட்டிகளுக்கும் ஒப்பம் சமர்ப்பிக்கப்பட்ட நாளினை அடிப்படையாக கொண்டு விலையேற்றத்தை ஈடு செய்ய வேண்டுமென கோரியுள்ளனர்.

பணி முடிவடைய ஏற்பட்ட காலதாமதத்திற்கு ஒப்பந்ததாரரர் காரணமில்லை என்பதால் உஸ்மான் சாலை மற்றும் துரைசாமி சாலை சந்திப்பு மற்றும் கோபதி நாராயணா சாலை மற்றும் திருமலை சாலை சந்திப்பு மேம்பாலம் பணிகளுக்கு ஒப்பந்ததாரர் கோரியுள்ள விலையேற்ற ஈடு செய்தல் (escalation) ஏற்புடையதாகும். செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் அமையும் மேம்பாலத்திற்கு திருத்திய விலை அளிப்பதற்கு பதிலாக ஒப்பந்ததாரின் இரண்டாவது கருத்தானது 19.05.2008 தேதிக்கு பிறகு வழங்கப்படும் அனைத்து அளவுகளுக்கான பட்டிகளுக்கும் விலையேற்றம் ஈடு செய்தல் ஆகும். எனவே திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அவர்கள் அளித்துள்ள இரண்டாவது தேர்வுரிமை ஒப்பந்தத்தின்படி நியாயமானதாகவே தோன்றுவதால் இதனை ஏற்கலாம். மேலும் இது விலையேற்ற ஈடு செய்தலை நடைமுறையில் உள்ள சூத்திரங்களின்படி கணக்கீடு செய்து கொள்ளலாம். பணியில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு பொருட்களான இரும்பு, சிமெண்ட், எரிபொருள், தொழிலாளர்கள் போன்றவற்றிற்கான சதவீதத்தினை இரு தரப்பினரின் பரஸ்பர சம்மதத்துடன் கணக்கீடு செய்யலாம். மேலும், ஒப்பந்ததாரரின் இக்கருத்தானது பணியிடத்தினை ஒப்பந்தாரரிடம் உடனடியாக வழங்குவதை அடிப்படையாக கொண்டதாகும். எனவே, மேலும் வழக்குகள் ஏற்படுவதை தவிர்க்கவும் சீக்கிரத்தில் பணியை முடித்திடவும் பணியிடத்தினை உடனடியாக ஒப்பந்தாரருக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் தீர்ப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தும் ஒப்பக்குழுமத்தின் முடிவிற்காக 21.10.2008 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றை ஆராய்ந்த ஒப்பக்குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை மேற்பார்வை பொறியாளர்/பாலங்கள் அவர்களிடம் கோரியது.

(1) இது போன்று வேறு ஏதேனும் பாலப்பணியில் விலையேற்ற ஈடுசெய்தல் குறித்து தீர்ப்பாளரிடம் சென்று முடிவு செய்யப்பட்டிருந்தால் அதன் விவரங்கள்,

(2) விலையேற்ற ஈடு செய்தல் குறித்து தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பச்சட்டத்தில் (Tamil Nadu Tender Transperancy Act)மற்றும் சமீபத்தில் வெளியான அரசாணை குறிப்புகள்.

11.11.2008 அன்று நடந்த ஒப்பக்குழுமக் கூட்டத்தில் மேற்பார்வை பொறியாளர்/பாலங்கள் பின்வருவனவற்றை சமர்ப்பித்தார்.

(1) இத்திட்டம் அரசினால் அறிவிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட திட்டம். இத்திட்டத்தின் ஒழுங்குமுறை மாற்றம், தற்போதைய வாகனப்போக்குவரத்திற்கு ஏற்ப மக்களுக்கு மேலும் பயன்படும் வகையிலேயே மாற்றப்பட்டது. இவ்வாறு மாற்றப்பட்டதால் ஏற்பட்ட காலதாமத்தை ஈடுசெய்யும் வகையில் பொதுமக்களுக்கு குறைந்த இடையூறுகளுடன் அவர்கள் பயன்படுத்தும் வகையில் இத்திட்டத்தை மேலும் காலதாமதமின்றி முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

(2) முந்தைய கோப்புகளை ஆராய்ந்ததில் 1998 ஆம் ஆண்டு மணலி சாலையில் ஏற்கனவே உள்ள பாலத்தை இடித்து புதிய பாலம் அமைக்கும் பணி மேற்கொளளப்பட்டதென தெரிய வந்தது. இப்பணிக்கான பணிக்காலம் 12 மாதங்கள். பல்வேறு காரணங்களால் பணிக்காலம் 7 மாதங்கள் நீட்டிப்பு வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரர் பணி முடிவுற்ற காலம் 12 மாதங்களுக்கு மேல் ஆனபடியால் விலையேற்றம் அளிக்குமாறு கோரினார். ஒப்ப ஆவணத்தில் பணிக்காலம் 12 மாதங்கள் என்பதால் விலையேற்றம் கூறு ஒப்ப ஆவணத்தில் சேர்க்கப்படவில்லை. அதனால் விலையேற்றம் வழங்க இயலாது என ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்டது. இதனை ஏற்காமல் ஒப்பந்ததாரர் தீர்ப்பாளர் தீர்ப்புக்கு சென்றார். தீர்ப்பாளர் திருவாளர். சி.எச். கோபிநாத் ராவ், B,Sc, BE, M,Sc(Engg), FIE, C.Engg(Ind), ICA, MISE.IV. FIIRA அவர்கள் கருத்துருக்களை ஆராய்ந்து பணிக்காலம் 12 மாதங்கள் கடந்து விட்டமையால் பணிதுவங்கிய நாளில் இருந்து 12 மாதங்களுக்கு பிறகு பணி முடிந்த கால அவகாசத்தை கணக்கிட்டு அந்நாட்களுக்கு மட்டும் விலையேற்றத்தை ஈடு செய்து வழங்க தீர்ப்பளித்தார்.

(3) ஒப்பத்திலுள்ள நான்கு பணிகளில் இரண்டு பணிகள் முடிக்கப்பட்டுவிட்டது. இவற்றில் வடக்கு உஸ்மான் சாலை – கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலம் ஒப்ப காலத்திற்குள் முடிவடைந்துவிட்டதால் தீர்ப்பாளரின் தீர்ப்பின் படி இதற்கு விலையேற்ற ஈடு செய்தல் கொடுக்க வேண்டிய அவசியம் அவசியமில்லை. இரண்டாவது மேம்பாலமான உஸ்மான் சாலை – துரைசாமி சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலம் பணி ஆகஸ்ட் 2008ல் முடிக்கப்பட்டது. எனவே இப்பணிக்கு மூன்று மாத காலத்திற்கு வழங்கப்பட்ட அனைத்து அளவுகளுக்கான பட்டிகளுக்கு (Quantities billed) மட்டுமே விலையேற்ற ஈடு செய்தல் வழங்க வேண்டும். மூன்றாவது பணியான கோபதி நாராயணா சாலை – திருமலை சாலை சந்திப்பில் அமைந்துவரும் மேம்பாலம் முடிவுறும் தருவாயில் உள்ளதால் இப்பணிக்கு ஏழு மாத காலத்திற்கு வழங்கப்படும் அனைத்து அளவுகளுக்கான பட்டிகளுக்கு (Quantities billed) மட்டுமே விலையேற்ற ஈடு செய்தல் வழங்க வேண்டியிருக்கும். விலையேற்ற ஈடு செய்தல் என்பது செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலை அமையும் மேம்பாலத்திற்கு மட்டுமே முழுவதுமாக வழங்கப்பட வேண்டும்.

(4) தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பச்சட்டத்தில் (Tamil Nadu Tender Transparency Act) 18 மாதங்களுக்கு மேல் ஒப்பக்காலமுள்ள பணிகளுக்கே விலையேற்ற ஈடு செய்தல் வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சமீபத்திய அரசாணை எண்.60, பொதுப்பணி (ஜி2) துறை, நாள்.14.03.2008ன்படி 12 மாதங்களுக்கு மேல் ஒப்பக்காலமுள்ள பணிகளுக்கும் விலையேற்ற ஈடு செய்தல் வழங்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் விலையேற்ற ஈடு செய்தலை கட்டுமானப்பொருட்களின் விலையேற்றம் அல்லது விலையிறக்கம் தொடர்பான RBI Indices ஐ அடிப்படையாகக்கொண்டு கணக்கிடப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றை ஒப்பக்குழுமம் விவரமாக விவாதித்து கீழ்கண்ட கருத்துக்களை தெரிவித்தது.

(1) இத்திட்டம் அரசினால் அறிவிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட திட்டம். இத்திட்டத்தின் ஒழுங்குமுறை மாற்றம், தற்போதைய வாகனப்போக்குவரத்திற்கு ஏற்ப மக்களுக்கு மேலும் பயன்படும் வகையிலேயே மாற்றப்பட்டது. இவ்வாறு மாற்றப்பட்டதால் ஏற்பட்ட காலதாமத்தை ஈடுசெய்யும் வகையில் பொதுமக்களுக்கு குறைந்த இடையூறுகளுடன் அவர்கள் பயன்படுத்தும் வகையில் இத்திட்டத்தை மேலும் காலதாமதமின்றி முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

(2) தீர்ப்பாளர் குறிப்பிட்டபடி பணிகளின் காலதாமத்திற்கு ஒப்பந்ததாரர் பொறுப்பல்ல என்று தெரியவருகிறது. ஏனெனில் சென்னை குடிநீர் வாரியம் மேம்பாலங்கள் அமையும் சாலைகளில் தங்களது நிலத்தடி குழாய்களை மாற்றியமைக்க நீண்ட கால அவகாசம் எடுத்துக்கொண்டனர். மேலும் செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலைகளில் உள்ள நிலத்தடி குழாய்களை மாற்றியமைக்க ஜூலை– 2008ல் ஒப்பம் முடிவு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் டிசம்பர்–2008ல் அல்லது ஜனவரி 2009லேயே முடிவடையும். அதன் பின்னரே பாலப்பணியை மேற்கொள்ள இயலும்.

தீர்ப்பாளரின் தீர்ப்பை ஏற்காமல் நடுவர் தீர்ப்பு (Arbitration)க்கு எடுத்துச்சென்றால், மேற்குறிப்பிட்ட காரணத்தினால் நடுவர் தீர்ப்பும் விலையேற்ற ஈடுசெய்தலுக்கு சாதகமாகவே அமைய வாய்ப்புள்ளது. மேலும் நடுவர் தீர்ப்பை பெறுவதற்கு குறைந்தது 6 மாதங்கள் ஆகும். அந்த காலதாமதத்திற்கும் சேர்த்து விலையேற்றம் ஈடுசெய்ய வேண்டி வருவதால் கூடுதல் செலவினம் ஏற்படும்.

(3) தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பச்சட்டத்தில் (Tamil Nadu Tender Transparency Act) 18 மாதங்களுக்கு மேல் ஒப்பக்காலமுள்ள பணிகளுக்கே விலையேற்ற ஈடு செய்தல் வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இவ்வொப்பம் கோரிய போது விலையேற்ற ஈடு செய்தல் ஒப்பக்கூறு சேர்க்கப்படவில்லை. ஆனால் பணிக்காலம் தற்போது 18 மாதங்களுக்கு மேல் கூடியுள்ளது. எனவே, இப்பணிக்கு விலையேற்ற ஈடுசெய்தல் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பச்சட்டத்தில் (Tamil Nadu Tender Transparency Act)க்கு மாறானதல்ல.

மேலும், சமீபத்திய அரசாணை எண்.60, பொதுப்பணி (ஜி2) துறை, நாள்.14.03.2008ன்படி 12 மாதங்களுக்கு மேல் ஒப்பக்காலமுள்ள பணிகளுக்கும் விலையேற்ற ஈடு செய்தல் வழங்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் விலையேற்ற ஈடு செய்தலை கட்டுமானப்பொருட்களின் விலையேற்றம் அல்லது விலையிறக்கம் தொடர்பான RBI Indices ஐ அடிப்படையாகக்கொண்டு கணக்கிடப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இவ்வொப்பம் முடிவு செய்தபின்னர் பாலங்கள் துறையில் முடிவு செய்யப்பட்ட பணிகளான வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் வாகன சுரங்கப்பாதை, கத்திவாக்கம் நெடுஞ்சாலை—காக்ரேன் பேசின் சாலையில் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன மேம்பாலம் எம்.சி.சாலை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகனச்சுரங்கப்பாதை ஆகியவை கொண்ட தொகுப்பு, ஆலந்தூர் சாலையில் உயர்மட்ட பாலம், ஜோன்ஸ் சாலை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகனச்சுரங்கப்பாதை, ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன மேம்பாலம் ஆகியவை கொண்ட தொகுப்பு மற்றும் பெரம்பூர் மேம்பாலம் ஆகியவற்றிற்கான ஒப்பந்தங்களில் RBI Indices ஐ அடிப்படையாகக்கொண்டு விலையேற்ற ஈடு செய்தல் ஒப்பக்கூறு சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும், முன்நிகழ்வாக மணலி சாலையில் கட்டப்பட்ட பாலத்திற்கான ஒப்பத்தில் விலையேற்ற ஈடு செய்தல் ஒப்பக்கூறு இடம்பெறாவிட்டாலும் நிர்ணயிக்கப்பட்டிருந்த பணிக்காலமான 12 மாதங்களுக்குப் பிறகே பணி முடிவடைந்ததால் தீர்ப்பாளர் கூடுதல் பணிக்காலத்திற்கு விலையேற்றத்தை ஈடு செய்து வழங்க தீர்ப்பளித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பா.து.ந.க.எண்.பி3/722/2008**

(4) தற்போதுள்ள ஒப்பம் 2006 ஆம் ஆண்டு முடிவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஒப்பத்திலுள்ள நான்கு பணிகளில் இரண்டு பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. இவற்றில் வடக்கு உஸ்மான் சாலை – கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலம் ஒப்ப காலத்திற்குள் முடிவடைந்துவிட்டதால் தீர்ப்பாளரின் தீர்ப்பின்படி இதற்கு விலையேற்ற ஈடு செய்தல் கொடுக்க வேண்டியது தேவையில்லாததாகிறது.

இரண்டாவது மேம்பாலமான உஸ்மான் சாலை – துரைசாமி சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலம் பணி ஆகஸ்ட் 2008ல் முடிக்கப்பட்டது. எனவே இப்பணிக்கு மூன்று மாத காலத்திற்கு வழங்கப்பட்ட அனைத்து அளவுகளுக்கான பட்டிகளுக்கு (Quantities billed) மட்டுமே விலையேற்ற ஈடு செய்தல் வழங்க நேரிடும்.

மூன்றாவது பணியான கோபதி நாராயணா சாலை – திருமலை சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுவரும் மேம்பாலம் டிசம்பர்–2008ல் முடிவடையவுள்ளதால் இப்பணிக்கு ஏழு மாத காலத்திற்கு வழங்கப்படும் அனைத்து அளவுகளுக்கான பட்டிகளுக்கு (Quantities billed) மட்டுமே விலையேற்ற ஈடு செய்தல் வழங்க வேண்டியிருக்கும்.

விலையேற்ற ஈடு செய்தல் என்பது செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலை அமையும் மேம்பாலத்திற்கு மட்டுமே முழுவதுமாக வழங்க வேண்டியுள்ளது. மேலும், விலையேற்ற ஈடு செய்தல் wholesale price indices of Reserve Bank of India அடிப்படையில் நடைமுறையில் உள்ள சூத்திரங்களின்படி வழங்குவது சிமெண்ட், கம்பி மற்றும் ஏனைய மூல பொருட்களுக்கு சந்தை விலை அடிப்படையில் வழங்கும் தொகையை விட குறைவானதாகவே அமையும். Reserve Bank of India வெளியிடும் wholesale price indices கட்டுமானப்பொருட்களின் விலையேற்றம் அல்லது விலையிறக்கம் ஆகியவற்றை பொறுத்தே அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வாறு வழங்கப்படும் விலையேற்ற ஈடுசெய்தல் சமீபத்திய அரசாணை எண்.60, பொதுப்பணி (ஜி2) துறை, நாள்.14.03.2008ல் குறிப்பிட்டுள்ளதற்கு ஏற்பவே அமைந்துள்ளது.

எனவே, தீர்ப்பாளரின் பரிந்துரையின்படி விலையேற்ற ஈடுசெய்தல் வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினம் ஒப்பந்தாரர் தனது முதலாவது தேர்வுரிமையில் குறிப்பிட்டுள்ள கட்டுமானத்தொகையான ரூ.9.40 கோடியை விட குறைவாகவே அமையும்.

(5) தீர்ப்பாளரின் தீர்ப்பை ஏற்காமல் இவ்வொப்பத்தை ரத்து செய்து புதிய ஒப்பம் கோரினால் ஒப்பத்தை முடிவு செய்து பணியினை துவங்க மிகுந்த கால தாமதம் ஏற்படும்.

தற்போதைய ஒப்பம் DEPC (Design, Engineering, Procurement and construction) முறையில் முடிவு செய்யப்பட்டதாகும். அதே முறையில் ஒப்பம் கோரினால் ஒப்பந்ததாரருக்கு புதியதாக வரைபடம் மற்றும் வடிவமைப்பு தயார் செய்தல் மற்றும் அவற்றை சரிபார்த்தல் ஆகியவற்றிற்கு கூடுதல் கால அவகாசம் அளிக்க வேண்டி இருக்கும். அவ்வாறில்லாமல் மாநகராட்சியே கலந்தறிதற்குரியவர் மூலம் வரைபடம் மற்றும் வடிவமைப்பு தயார் செய்து ஒப்பங்கள் கோரினாலும் கால தாமதம் ஏற்படும்.

மேலும், மாநகராட்சியால் வடசென்னை பகுதியில் மூன்று பாலம் மற்றும் சுரங்கப்பாதை பணிகளுக்காக கடந்த ஜனவரி மாதம் –2008ல் முடிவு செய்யப்பட்ட ஒப்பம் பணியின் மதிப்பீட்டைவிட (+)58.58% அதிக சதவீதத்தில் திருவாளர்கள்.சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிமிடெட்., அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

அதே போன்று தென்சென்னை பகுதியில் மூன்று பாலம் மற்றும் சுரங்கப்பாதை பணிகளுக்காக கடந்த ஜனவரி மாதம் –2008ல் முடிவு செய்யப்பட்ட ஒப்பம் பணியின் மதிப்பீட்டைவிட (+)59.46% அதிக சதவீதத்தில் திருவாளர்கள்.சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிமிடெட்., அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

பெரம்பூர் மேம்பாலப்பணிக்காக கடந்த மே மாதம்–2008ல் முடிவு செய்யப்பட்ட ஒப்பம் அலுவலக மதிப்பீட்டைவிட (+)73.93% அதிக சதவீதத்தில் திருவாளர்கள்.ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டிரக்சர்ஸ் அண்டு பிராஜக்ட்ஸ் லிமிடெட்., அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

நெடுஞ்சாலை (பெருநகர்) துறையினரால் கடந்த மே மாதம் ஒப்பம் கோரி முடிவு செய்யப்பட்ட அமைந்தகரை GWT சாலையில் அமைந்துள்ள பழைய பாலத்தினை ஒட்டி புதிய பாலம் அமைக்கும் பணிக்கு அலுவலக மதிப்பீட்டைவிட (+) 108% அதிக சதவீதத்தில் ஒப்பம் திருவாளர்கள். சக்தி இன்ஜினியரிங் கன்ஸ்டிரக்ஷன்ஸ் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று இரயில்வே துறையினரால் ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே இரயில்வே பகுதியில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு மாதம் –2008ல் வழங்கப்பட்ட ஒப்பத்திலும், அலுவலக மதிப்பீட்டைவிட அதிகமான சதவீதத்திலேயே திருவாளர்கள்.யுனிக் பில்டர்ஸ் அவர்களுக்கு ஒப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமன்றி மாநகராட்சியால் சமீபத்தில் ஒப்பங்கள் கோரப்பட்ட பணியான தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ஒரே ஒரு ஒப்பந்ததாரர் மட்டுமே ஒப்பத்தில் கலந்துக்கொண்டுள்ளார். அவர் அளித்த ஒப்ப சதவீதம் 2008 – 2009 ஆம் ஆண்டு அலுவலக மதிப்பீட்டைவிட (+)136.23% அதிகமாகும்.

ஆகையினால், புதிதாக ஒப்பங்கள் கோரினால் 2008–2009ம் ஆண்டு விலைப்பட்டியின் படி கோரப்பட வேண்டுவது மட்டுமல்லாமல் அதிகமான ஒப்ப சதவீதம் பெறும் நிலையும் உள்ளது. மேலும் தற்போதுள்ள சந்தை விலையேற்ற நிலையில் புதிய ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதத்தை மிகுதியாக அளிப்பதற்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

மேலும், தற்போதைய ஒப்பந்ததாரர் திருவாளர்கள். கேமன் இந்தியா லிமிடெட் அவர்களுக்கு அளித்த ஒப்பத்திலுள்ள நான்கு பணிகளில் இரண்டு பணிகள் துவங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் முடித்துள்ளார்கள். மூன்றாவது பணியும் முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும் நான்காவது பணியினையும் உடனடியாக மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்ததாரர் தயார் நிலையில் உள்ளதால் இப்பணியினை பத்து மாத காலத்திற்குள் முடிக்க இயலும்.

எனவே,

(1) இப்பணிகளை மேற்கொள்வதில் காலதாமதமானதற்கு ஒப்பந்ததாரர் காரணமல்ல என்பதாலும்,
(2) ஒப்ப உடன்படிக்கையில் ஒப்பந்ததாரர் அல்லது மாநகராட்சி தீர்விற்காக தீர்ப்பாளரிடம் செல்வதற்கும் அவ்வாறு சென்ற பிறகு அவர் அளிக்கும் தீர்ப்பை ஏற்பதற்கு விதிமுறைகள் உள்ளது என்பதாலும்,
(3) தீர்ப்பாளர், பணி முடிவடைய ஏற்பட்ட காலதாமதத்திற்கு ஒப்பந்ததாரர் காரணமல்ல என்பதால் பணி முடிவு நாளான 19.05.2008க்கு பிறகு வழங்கப்படும் அனைத்து அளவுகளுக்கான பட்டிகளுக்கும் நடைமுறையில் உள்ள சூத்திரங்களின்படி விலையேற்றம் ஈடுசெய்யலாம் என பரிந்துரைத்துள்ளார் என்பதாலும்,
(4) இப்பரிந்துரையானது தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பச்சட்டம் மற்றும் அரசாணை எண்.60. பொதுப்பணித்துறை (ஜி2) நாள்.14.03.2008 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி விலையேற்ற ஈடுசெய்தலுக்கு உடன்பாடாகவே உள்ளது என்பதாலும்,
(5) மாநகராட்சியில் 1998ல் இதுபோன்றே மணலி பாலப்பணியில் தீர்ப்பாளரால் விலையேற்ற ஈடுசெய்தல் அளித்துள்ளது ஒரு முன்நிகழ்வாக உள்ளது என்பதாலும்,
(6) தீர்ப்பாளரின் தீர்ப்பை ஏற்காமல் நடுவர் தீர்ப்புக்கு (Arbitration) எடுத்துச்சென்றால் மேற்கூறிய காரணங்களால் சாதகமான தீர்ப்பை பெறும் வாய்ப்பு குறைவு மற்றும் மேலும் காலதாமதம் ஏற்படும் என்பதாலும்,
(7) இவ்வொப்பத்தை ரத்து செய்துவிட்டு புதியதாக ஒப்பங்கள் கோரினால் கட்டுமான பொருட்களின் தற்போதுள்ள நிலையற்ற சந்தை விலை காரணமாக பணியினை மேற்கொள்ள ஒப்பந்ததாரர்கள் முன்வருவது நிச்சயமற்றது . இதனால் மேலும் காலதாமதமும், கூடுதல் செலவினமும் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதாலும்,
(8) தற்போது நடைமுறையில் உள்ள ஒப்பம் 2006ஆம் ஆண்டு முடிவு செய்யப்பட்டு நான்கு பணிகளில் இரண்டு முடிக்கப்பட்டு மூன்றாவதும் முடிவடையும் நிலையில் உள்ளது என்பதாலும்,
(9) ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா வெளியிடும் Whole Sale Price Index என்பது கட்டுமானப்பொருட்களின் விலையேற்றம் அல்லது விலையிறக்கம் ஆகியவை பொறுத்தே அமையும், எனவே தற்போதைய சந்தை நிலவரத்தின்படி RBI Index ஐ அடிப்படையாக கொண்டு வழங்கப்படும் விலையேற்ற ஈடுசெய்தலால் ஏற்படும் செலவினம் புதியதாக ஒப்பம் கோரி முடிவு செய்வதைவிட குறைவாகவே இருக்கும் என்பதாலும்,

தீர்ப்பாளர் வழங்கியுள்ள பரிந்துரையினை ஏற்கலாம் என ஒப்பக்குழுமம் தீர்மானித்தது.

இத்திட்டம் அரசினால் அறிவிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட திட்டம். இத்திட்டத்தின் ஒழுங்குமுறை மாற்றம், தற்போதைய வாகனப்போக்குவரத்திற்கு ஏற்ப மக்களுக்கு மேலும் பயன்படும் வகையிலேயே மாற்றப்பட்டது. இவ்வாறு மாற்றப்பட்டதால் ஏற்பட்ட காலதாமதத்தை ஈடுசெய்யும் வகையில் பொதுமக்களுக்கு குறைந்த இடையூறுகளுடன் அவர்களின் பயன்பாட்டிற்காக இத்திட்டத்தை விரைந்து முடிப்பது அவசியமாகிறது.

அதன்படி திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அவர்களுடனான ஒப்ப உடன்படிக்கையில் உள்ள பணிகளுக்கு நான்கு மேம்பாலங்களுக்கும் ஒப்பத்தில் அளித்துள்ள விலைகளுடன் சேர்த்து ஒப்ப உடன்படிக்கையின்படி பணி முடியும் நாளான 19.05.2008 தேதிக்கு பின்னர் வழங்கப்படும் அனைத்து அளவுகளுக்கான பட்டிகளுக்கும் (Quantities billed) தமிழ்நாடு அரசு, பொதுப்பணித்துறையின் அரசாணை எண்.60, நாள்.14.03.2008ல் குறிப்பிட்டுள்ளபடி ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட காலாண்டில் இருந்து விலையேற்ற ஈடு செய்தல் (Escalation) வழங்கலாம் என்று ஒப்பக்குழுமம் பரிந்துரைக்கிறது. மேலும் நடைமுறையில் உள்ள சூத்திரங்களின்படி RBI Indexஐ அடிப்படையாக கொண்டு விலையேற்ற ஈடு செய்தலை கணக்கிட்டு வழங்கப்பட வேண்டும் என்றும் ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்தது.

எனவே கீழ்க்கண்ட இனங்களுக்கு;

(1) மேற்கண்ட பாலப்பணிக்காக தீர்ப்பாளர் வழங்கியுள்ள பரிந்துரை மற்றும் ஒப்பக்குழுமத்தின் பரிந்துரையினை ஏற்க அனுமதியும்,

(2) தீர்ப்பாளர் வழங்கியுள்ள பரிந்துரையின்படி நான்கு மேம்பாலங்களுக்கும் ஒப்பத்தில் அளித்துள்ள விலைகளுடன் சேர்த்து ஒப்பந்தத்தின்படி பணி முடிவுறும் நாளான 19.05.2008 தேதிக்கு பின்னர் வழங்கப்படும் அனைத்து அளவுகளுக்கான பட்டிகளுக்கும் (Quantities billed) தமிழ்நாடு அரசு, பொதுப்பணித்துறையின் அரசாணை எண்.60, நாள்.14.03.2008ன்படி ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட காலாண்டில் இருந்து விலையேற்ற ஈடு செய்தல் (Escalation) வழங்கலாம் என்ற ஒப்பக்குழுமத்தின் பரிந்துரைக்கேற்ப நடைமுறையில் உள்ள சூத்திரங்களின்படி RBI Indexஐ அடிப்படையாக கொண்டு விலையேற்ற ஈடு செய்தலை கணக்கிட்டு ஒப்பந்ததாரருக்கு வழங்க அனுமதியும்,

**பா.து.ந.க.எண்.பி3/722/2008**

நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) ஆகியவற்றின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 326 /08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.294/08, நாள்:19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.து.ந.க.எண்.ஜி1/1302/2008
ஆணையாளர் அவர்களின் 23.10.2008 நாளிட்ட குறிப்பு

30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :649/2008 பொருள் எண்.49

சென்னை மாநகராட்சி, மேயர் புது டெல்லியில் நடைபெற்ற மேயர்கள் மாநாட்டில் கலந்து கொண்டது – அரசு ஆணை பெறப்பட்டது – மன்றத்தின் தகவலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அனைத்திந்திய பெருநகரங்களின் மேயர்கள் மாநாடு, 2008 ஆம் ஆண்டு அக்டோபர் 6 மற்றும் 7 ஆம் தேதிகளில் புதுடெல்லியில் நடைபெற்றதற்கும், இது சம்மந்தமாக அரசு வெளியிட்டுள்ள அரசாணை (வாலாயம்) எண்.200 நாள் 4.10.2008 மற்றும் இம்மாநாட்டில் சென்னை மாநகராட்சி மேயர் கலந்து கொண்ட நிகழ்விற்கு மன்றத்தின் தகவலுக்கும் / பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதனை மன்றம் பதிவு செய்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்